ஓம் பரப்ரஹ்மணே நம:

ACC. NO. 33784

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத்
தரவல்லதான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்கள்
நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

" எண்ணிய எண்ணியாங் கெய்துப; எண்ணியார்
COPY RIGHT] திண்ணிய ராகப் பெறின். " (திருக்குறள்.) [REGISTERED.

கமலம்-5.	சென்னை: பிரமோதூதஸ்ரீ புரட்டாசிமீ 1உ	இதழ்-54.
Vol. 5.	1930-ம்ஸ்ரீ செப்டம்பர்மீ 16உ	No. 54.

ஆநந்த தரிசனம்

"சிவாய நம:" என்று சிந்தித்திருப்போர்க்கு அபாய மொருநாளு மில்லையென ஆன்றோர் கூறியிருக்கிறார்கள். சிவன் ஸதா மங்களத்தையே கொடுப்பவராதலின் அவரைத் தியானம் செய்கிறவர்கட்கு எவ்வித ஆபத்தும் நேராது. பரமசிவன் பக்தர்களிடம் பரம விசுவாசமுள்ளவர். அவர் பிட்டுக்கு மண் சுமந்தார்; பிரம்பா லடிபட்டார்; பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்தார்; செட்டிப் பெண்ணுக்குப் பிரஸவகாலத்தில் தாயாய் விளங்கித் தாயுமானவர் என்ற பெயரெடுத்தார்; பதஞ்சலி வியாக்ரபாதர் ஆகிய இரண்டு பக்தர்களையும் நர்த்தனத்தால் ஸந்தோஷிப்பித்தார்; கொடிய ராக்ஷஸர்களிடம்கூட அன்பு பாராட்டி வேண்டிய வரங்களை அவர்கட்கு ஈந்தார். வாணாசுரனுடைய கோட்டையை விநாயகர் சுப்பிரமண்யரோடு காவல் காத்தருளினார். அவருடைய லீலைக ளநந்தம். கிருபாஸமுத்திரம்—ஸு முகம்—திரிநேத்திரம்—ஜடாதாரம்—பார்வதி வாமபாகம்—என்று அநேகர் சிவபிரானை ஸ்தோத்ரம் செய்திருக்கிறார்கள். அவர் எமனை எட்டி யுதைத்து மார்க்கண்டேயனைக் காப்பாற்றினார்; அளகேசனுக்கு ஐசுவரியத்தைக் கொடுத்தார். அப்பெருமான் பூசும் விபூதியால் ஸகல வியாதிகளும் பறக்கின்றன; விஷம் நிவர்த்தியாகிறது; பூத பிசாச கணங்களெல்லாம் சிவபக்தனிடம் செல்லா. ஸர்வஜீவ தயாபரராக விளங்கும் சிவமூர்த்தியை நாம் ஸதா தியானித்து க்ஷேம மடையக் கடவோம்.

ஃ

"பலாபேக்ஷையின்றி க்ருமத்தில் பிரவர்த்திப்பது மேல்" என்று பகவத்கீதை கூறுகிறது. இன்னகருமத்தைச் செய்கிறேன்; அதனால் இன்ன பலன் கிடைக்கப் போகிறதென்கிற பலத்தின் எதிர்பார்ப்பு இல்லாமல் ஒரு

வன் ஒரு கருமத்தை எவ்வாறு செய்யக்கூடும்? சகல கருமத்திலும் பலப்பிராப்தியை நாடாமல் மனதைச் செலுத்துவதென்றால், அக்கருமங்களை நடத்துதற்கான ஊக்கம் ஒருவனுக்கு எப்படி யுண்டாகும்? குளம் வெட்டினால் கீர்த்தியுண்டென்கிற நோக்க மில்லாமற்போனால் குளம் வெட்டுகிற காரியத்தில் சிரத்தை என் பிறக்கும்? உத்தேச மில்லாமல் கண்மூடித்தனமாகவா காரியங்கள் செய்கிறது? அவ்வாறு காரியங்கள்தான் செய்ய முடியுமா? பசியெடுத்தால் பசியாறும்படி புசிப்புக்கு வழி தேடக்கூடாதா? முதுமைப்பருவத்தில் ஜீவனத்துக்கு வேண்டி இளமைப்பருவத்தில் ஆஸ்தி தேடக்கூடாதா?—என்பதுபோன்ற கேள்விகள் தோன்றக்கூடும். மேற்சொன்ன பகவத்கீதா வாக்கியத்தின் தாத்பரியம் என்னவெனில், எவன் ஞானியோ அவன் கருமத்தைச் செய்தாலும் செய்யலாம், விட்டாலும் விடலாம். அவனுக்குக் கருமத்தினால் ஆகவேண்டிய தொன்றுமில்லை. ஞானியல்லாத மற்றவர்கள் கருமத்தை விட்டு நீங்க முடியாது. நீங்கமுடியாத கர்மத்தைவிட்டு நீங்கியதாய் வீண் பாசாங்கு செய்யாமல் ஒவ்வொருவனும் தற்செயலாய் தனக்கு ஏற்பட்ட கர்மாதிகள் எவைகள் உண்டோ அவைகளை அவசியம் செய்யக்கடவன். ஆனால், காரியம் பலிக்கிறது நமது எத்தனத்தில் இல்லை. எத்தனித்த காரியம் நிறைவேறியதற்காக ஸந்தோஷத்தையும், நிறைவேறாததற்காக வியஸனத்தையும் நாம் கொண்டாடுவோமானால், சுகதுக்கம் என்கிற வலையி லகப்பட்டு மேன்மேலும் கன்மபந்தமும் அதனால் ஜென்மபந்தமும் ஏற்பட்டுவிடும்.

ஃ

"செய்வன திருந்தச்செய்." எந்தக் காரியத்தைச் செய்தாலும் சாஸ்திர தர்மங்களை யனுஸரித்துச் செய்வதுடன், கூடியவரையில் சாவதானமாகவும் செய். உத்தேசம் பலியாவிடில் வியாகூலத்தை யடையாதே; உன் காரியம் கெட்டுப்போனதாகத் துக்கிக்காதே. உன் சக்தி, புத்தி, எம்மட்டும் செல்லுமோ அம்மட்டும் உன் கடமைகளை நிறைவேற்றப் பார். பிரயத்தனம் வீண் போனதாகச் சலிப்பையாவது, பலித்ததாகச் சந்துஷ்டியையாவது அடையாதே. காரியத்தைச் செய்யமட்டும் நாம் அதிகாரிகள். பலனைச் சித்திக்கச் செய்கிற கர்த்தா வேறே. கர்த்தா வேறேயென்று நாம் நமது கடமையில் உதாஸீனர்களா யிருக்கக்கூடாது. நாம் நமது வேலையைச் செவ்வையாய்ச் செய்துவிட வேண்டியது. முடிந்தால் திருவுளம்; முடியாவிட்டாலும் திருவுளமே. உதாரணமாக, உனது சொத்தை அபகரிக்க ஒரு திருடன் யத்தனித்தால் அதை உன்னாலானமட்டும் காப்பாற்றுவது உனது தருமம்; இது ஸகஜமான காரியம். அதற்காக நீ திருடனை அடித்து ஓட்டலாம். கூடியவரையில் அவனோடு மல்லுக்கட்டிப் போராடிப் பார்க்கலாம். அவ்விதம் செய்வதைவிட்டுச் சோம்பலினாலாவது, அதைரியத்தினாலாவது மௌனமாயிருப்பது சிலாகிக்கத்தக்கதல்ல. போராடியும் தீராமல், அத்திருடன் உன்னை ஜெயித்து, சொத்தை மீட்கக்கூடாத வகையாய்க் கொள்ளை போய்விட்டதென்று வைத்துக்கொள்வோம். பிறகு அந்த சொத்தை நினைத்து அரைக்ஷணமும் துக்கிக்க லாகாது. போனா லென்ன?—அது யார் சொத்து?—யார்கூட வந்தது?—யார்கூடப் போகப்போகிறது?—என்று பாரமார்த்திகமாய் யோசித்து அமரிக்கை கொள்ள

முதலில் தன் அறிவால் தானாகவே யோசித்து ஒரு வியாபாரத்தைக் கண்டுபிடித்தவனே தீரன், விவேகி. அவன் எதற்கும் கடைசிவரை துணிந்தே நிற்பான்; வெற்றியும் கொள்வான். அவன் வலிமை மற்றவர்க்கு இல்லை.

வேண்டியது. எதற்கும் ஆத்திரப்படவே கூடாது. வியவகாரத்தில் வியவகாரத்தை விட்டுக்கொடாமல் நடிப்பதே விவேகம். எந்தெந்த வேளையில் எந்தெந்த வேஷம் போட்டுப் பகவான் பிரபஞ்சமாகிய நாடகசாலையில் நம்மை விடுகிருரோ, அந்தந்த வேஷத்துக்குத் தகுந்தபடி நாம் கூடியவரையில் சாமர்த்தியமாய் நடிக்கவேண்டியது. நடிப்பதே ஸ்வபாவமாக நம்மைப் படைத்தபடியால் நடியாதிருக்கவும் நம்மால் முடியாது. நடிப்பவன் தான் நடியாதிருப்பதாய் எண்ணுவதும் வீண். நடிக்கவேண்டிய நடத்தையை அரைகுறையாய் அலக்ஷியமாய் நடிப்பதும் அயுக்தம். நடிப்பதிலுள்ள புகழ்ச்சி-இகழ்ச்சி யென்னும் பலாபேட்சையைக் கோருவதும் தகாததாகும். பகவானுடைய பிரியப்படி நடித்தோம். அத்துடன் விடை பெறுவோம். அதன் பலனைப்பற்றி நாம் யோசிக்கவேண்டாம்.

ஃ

"எல்லா மறிந்தவரு மில்லை, ஏது மறியாதவரு மில்லை." அறிந்தவரையில் விவேகமாய் நடப்பதே மேன்மை. அறியவேண்டிய சங்கதிகள் அளவற்றிருப்பதினாலேயே நமக்கு ஸ்வபாவத்தில் உள்ள அறிவையும் விட்டுவிட்டு மூடாத்மாக்களா யிருப்பது கூடாது. "பாவத்தைக் கண்டவனார்? புண்யத்தைக் கண்டவனார்?" என்று மனம்போன போக்கிலே போகலாகாது. நமது அறிவு எம்மட்டும் எட்டுமோ அம்மட்டும் அதை நாம் அனுசரிக்க வேண்டியது. இருந்தால் பிரம்மமாயிருப்பேன்; இல்லையேல், புழுவாய்ப் போவேன் என்று சாதிக்க லாகாது. மனுஷ்யனாய்ப் பிறந்த பிறகு மனுஷ்யனாயின்றி மாடாய்ப் போகவேண்டுமா? சிங்கம் யானையைக் கொல்லுகிறதென்றும், பூனை எலியைத் தின்கிறதென்றும் அவைகளை யார் தூஷிக்கிறார்கள்? அவனவன் சத்தியானுசாரம் செம்மையாய் நடப்பானானால் தோஷமேது? நம்மிடத்தில் ஒப்புவித்தவைகளுக்கு நாம் சரியான கணக்குக் கொடுத்துவிட்டால் மற்றது எப்படியானா லென்ன?—அதை ஈசுவரனுடைய பொறுப்பில் விட்டுவிடுவோம். 'விவேகமாய் நடப்பவன் கெட்டுப்போகிறதில்லையா?' என்றால், விவேகியின் கேடு விவேகத்தினால் வருவதல்ல. விசாரித்தால் அதற்குக் காரணம் வேறு ஏற்படும். படித்தவன் இறந்தானென்றால் படிப்பினால் இறந்தானென்று தீர்மானித்துவிடுகிறது? வைத்தியன் இறப்பது வைத்தியத்தாலா? தார்மிஷ்டன் கஷ்டப்படுவது தர்மத்தாலா? தர்க்கம் செய்வதில் பய னில்லை. எதையும் உற்றுணர்ந்து காலத்தை வீணாக்காமல் நற்கதி பெறக்கடவோம்.

ஃ

"**ஆத்மாவும் தேகமும்.**" ஆத்மாவுக்கு ஒரு விஷய சம்பந்தம் உதிக்கும்போது ஜனனம் என்றும், அவ்விஷய சம்பந்தம் நீங்கும்போது மரணம் என்றும் பெயர். ஒரு பட்டணத்தை யடைகிற ஒருவன் முந்திய பட்டணத்தில் இல்லாதவனாய் மரித்து, பிந்திய பட்டணத்தில் இருப்பவனாய் ஜனிக்கிறான். அவ்வாறே ஒரு தேகத்தை நீக்கி வேறொரு தேகத்தை யடைகிற ஜீவனும் முந்திய தேகத்தில் மரித்துப் பிந்திய தேகத்தில் ஜனிக்கின்றான். விஷய சம்பந்தத்தினால் ஆத்மா விஷயாபிமானமுள்ளவனாய், அவ்விஷயாதிகளில் கலந்து, 'அவைகள்—தானே—' என்று பிரமித்து நிற்கிறான். பிறகு அவைகள் நீங்கும்போது தானே நீங்குவதாய்ப் பிரலாபிக்கிறான். இதுதான் மரணவஸ்தை

ஒரு காரியத்தை, அது செய்வதற்குக் கிடைத்த தருணத்தில் உடனே செய்யாவிட்டால் பல வருடங்களானாலும் பிறகு உன்னால் செய்ய முடியாது.

யின் மோகம். தேகமானது ஆத்மா ஆகாது. தேகத்தைவிட்டு ஆத்மா யில்லை என்பது பிராந்தி—அதாவது வீண் மயக்கமே.

ஃ

“சாஸ்திர ரகசியங்களின் மூடிய தன்மை.” நமது சாஸ்திராதிகளில் வேதாந்த உண்மைகள் வெளிப்படையாய்க் காட்டப்படாமல், பல இடங்களில் மறைபொருளாய்க் கூறப்பட்டிருக்கிற முகாந்திரம் என்னவெனில், ஸ்வயமான தனது விசாரணையினால் அடையப்படாத ஞானம் உறுதிப்படாதென்றே அவ்வாறு மூடியதன்மையில் சொல்லப்பட்டிருக்கின்றன. தன் அறிவு சகாயமில்லாதவனுக்குப் பிறர் அறிவால் சகாய மில்லை. ஆனால், பிறரது அறிவின் சகாயத்தின் பிரயோஜனந்தா னென்னவெனில், தன்னறிவைத் தூண்டிவிடுகிற சகாயம் பிறரது—அறிவால் ஏற்படும். எதையும் முயன்று ஆராய்ந்திடும் சிரத்தை தனக்கு இல்லாவிடில் பிறர் எவ்வளவு தூண்டியபோதிலும் பய னில்லை. மூடியுள்ள இடத்தை விலக்கி ஆராய்ந்து இரகசியத்தையுணர்ந்துகொண்டால் பிறகு அனுபவிக்க முடியும்.

ஃ

“பூர்வ ஜன்ம ஞாபகம்.” பூர்வ ஜன்மத்தில் இன்ன கருமத்தின் பலனாக இகத்தில் இன்ன சுகதுக்கம் அனுபவிக்கிறேன் என்கிற பூர்வ ஜன்ம ஞாபகம்—இப்போதைய ஜன்ம அனுபவத்தோடு கலந்து வந்தாலல்லவோ ஒரு ஜீவனானவன் தான் மேன்மேலும் நற்கதி யடையும்பொருட்டு ஊக்கத்துடன் முயற்சிப்பான்? அந்தப் பூர்வ ஜன்ம ஞாபகம் நமக்கில்லையே; அங்ஙனம் இல்லாதபோது சத்கர்மாதிகளில் எவ்வாறு சிரத்தை திடப்படும்?—எனில், பூர்வஜன்ம ஞாபகம் ஜீவனுக்கு உண்டாவது அசாத்திய மல்லவென்று சாஸ்திராதிகளா லறிகிறோம். ஸத் கர்மாதிகளைச் செய்வதனால் சித்தசுத்தி யுண்டாகி, சித்த சுத்தியினால் பூர்வஜன்ம ஞாபகம் உண்டாக வேண்டும். விவேக மில்லாதவன் நேற்று நடந்த விஷயங்கள் ஞாபகமில்லையென்கிறான்; விவேகிக்கோ பல வருஷங்களுக்கு முன் நடந்தவைகளைப்பற்றியும் ஞாபக முண்டாகின்றன. இந்த ஜன்மத்திலேயே செய்த சில கர்மங்களுக்குப் பலன் இந்த ஜன்மத்திலேயே ஜீவன் அனுபவிப்பதை நாம் பிரத்தியக்ஷமாய் அறிகிறோம். மிதமிஞ்சிப் புசிக்கிறவன் ரோகத்திற்குள்ளாகிறான்; அவ்வாறு ரோகத்துக்குள்ளான மூடஜீவன் தான் மிதமிஞ்சிப் புசித்ததை அறியும் பக்குவமின்றி அவஸ்தையைமட்டும் படுகிறான். விவேக ஜீவனே அவ்வாறு அவஸ்தைப்படுங் காலத்தில் அவஸ்தைக்குக் காரணமான புசிப்பின் அளவின்மையை யறிந்து, அதற்கேற்றபடி தன் நடக்கையைச் சீர்திருத்திக் கொள்கிறான். சாதாரணமாய்க் குழந்தைகள் பசியின் காரணத்தால் அழுதாலும், இன்ன காரணத்தைப்பற்றி அழுகிறோம் என்கிற அறிவு அவைகளுக்கு எப்படி உண்டாவதில்லையோ,—நெருப்பின் ஸ்பரிசத்தால் தான் சகிக்கக்கூடாத துன்பத்தை யடைந்தும், அந்தத் துன்பத்தின் காரணத்தை அனுபவத்தினால் அறியாததாய், மறுபடியும் அதே நெருப்பை விளையாட்டினால் தொடுவதற்கு எப்படி ஒரு குழந்தையானது விரும்பிச் செல்லுமோ,—அப்படியே மூடஜீவ

கணவன் காலையில் 8-மணிவரை தூங்கிக்கொண்டிருந்தாலும், மனைவி வீட்டுவேலைகளைச் செய்துவிட்டுக் கணவனை எழுப்புவாளாயின், அவன் தூங்கியதால் குடித்தனத்துக்கு அதிக நஷ்ட மிராது. கணவனுடன் மனைவியும் தூங்கியபடி இருந்தாலோ அந்தக் குடித்தனம் என்றும் விடியாது.

னும் தான் இப்போது கஷ்டப்படுவதொன்றைமட்டும் அறியுமேயன்றி, அதன் காரணஞ்சமான பூர்வகர்மத்தை முற்றும் அறியாததாகவே கிடக்கும். சிறு குழந்தைக் கொப்பான மூடஜீவன்கள் மாதாவுக் கொப்பான வேதசாஸ்திராதிகளின் வாக்யங்களை விசுவாசத்துடன் நம்பி நடக்கவேண்டியதே கிரமம். பிறகு, அந்த ஜீவன்கள் காலக்கிரமத்தில் பக்குவப்பட்டு விவேக மடையும். விவேக மடைந்தவுடன் பூர்வஜன்ம ஞாபகமும் சித்திக்கும். அவ்வாறு பூர்வ ஜன்ம ஞாபகமடைந்த ஜீவன் மேன்மேலும் துக்க நிவாரணார்த்தத்திற்கு யத்தனம் செய்வான்; அதனால் கடைசியில் முக்தி யடைவான். ஆகையால், பூனை தன் கண்ணை மூடிக்கொண்டு லோகஸ்தமனம் அதாவது உலகமே இருண்டுவிட்டதென்று பாவிப்பதுபோல், நாமும் நமது அறிவீனத்தால் பெரியோர்களின் வாக்கியங்களை மறுத்து, ஜன்மாந்திரம் இல்லையென்று சந்தேகிக்க லாகாது. ஆகவே, ஜன்மாந்தரம் உண்டென்று நம்பி, நமது பிறவிப்பிணியைப் போக்க முயன்று பகவானை ஸதாகாலமும் துதித்து உய்யக்கடவோம்.

பேசுவதற்கு ஒரு ஸம்பவம் எதிர்படவேண்டும்.

இருவரும் ஒன்றுசேர ஒரு ஸம்பவம் வேண்டும். ஒரு விவாக ஸம்பவத்தின்மூலம் பரஸ்பரம் பேச நாணிய ஆடவர்களும் ஸ்திரீகளும் ஒருவருக்கொருவர் வார்த்தையாடிக்கொள்ள முடிந்த பிறகு அது சாதாரணமாகிவிடுகிறது. ஒரு வேலைசெய்ய ஏவுதற்கோ, ஒன்றைக் கேட்டுப் பெறுதற்கோ, ஒன்றைத் தேடுகையில் எடுத்துக் கொடுப்பதற்கோ அந்த சமயம் ஒரு ஸம்பவம் நேர்ந்துகொண்டு அதன்மூலம் பேசிக்கொள்ளத் தருணங்கள் கிடைக்கின்றன. இருவர் குடியிருக்கும் வீட்டில் ஸ்திரீ புருஷர்கள் எதுவும் பேசும் வழக்கமில்லாதிருந்தும், ஒருபெண் மயக்கமாய்விழ, அங்கு குடியுள்ள மற்றொரு பெண் தன்மேற் சாயவைத்துக் கொண்டு விசிற, மயக்கமான பெண்ணின் கணவன் மயக்கம் தீர அருகிலிருந்து மூக்குக்குப் புகையேற்ற, அந்த ஸம்பவத்தில் அதற்குமுன் பேசாதிருந்தவர்கள் பேசிக்கொள்ளும்படியும், இருவரும் மயக்கம் நோக்கித் தவிக்கும்படியும் ஆகி, ஸகோதர ஸகோதரிகள்போல் அனுதாபமுடையோராகிறார்கள். இவ்வித ஸம்பவங்கள் ஒன்றும் வாய்க்காமல் அகாரணமாய் வலியவந்து பேசுவதாகில், அது விபரீதமாக வேறு பொருளாய் விகல்பத்தில் கொள்ளப்பட்டுப்போம்.

கஷ்டகாலம் வந்தபோது செய்யும் முயற்சிகளும், கொண்ட உறவு நேசங்களும் யாவும் ஆற்றிற் கரைத்த புளியாவது பல்லோர் அனுபவமன்றோ?

அமிர்தகுணபோதினி

பிரமோதூத௵ புரட்டாசி௴ 1௳

மூன்றாவது மனிதன் கூடாது.

ஆம், கூடாது. அந்த மூன்றாவது மனிதனே கூடாது; அவன் காற்றே வீசக்கூடாது. கூடாது என்பதற்கு ஆயிரம் சங்கதிகளைக் கொண்டுவந்து உதாரணங்களாகக் கொடுக்க முடியும். மூன்றாவது உருவமான சகுனி இல்லாவிடில் பாரத யுத்தம் நடந்திராது; மூன்றாவது மனுஷ்யனான மகோதரன் இல்லாவிடில் இராவணன் குடிக்கு அனர்த்தம் சம்பவித்திராது; மூன்றாவதான கூனி இல்லாவிடில் இராமபிரான் பட்டாபிஷேகம் தடைபட்டிராது. மூன்று பேராக ஒரு காரியத்திற்குச் சென்றால் முடிவது சந்தேகந்தான் என்பது ஒரு உலக வசனம். இரண்டுபேருக்கும் நடுவில் ஒரு மூன்றாவது உருவம் நுழையுமாயின், அது அந்த இருவருக்கும் பொல்லாங்கு விளைத்துவிடும். அண்ணனுக்கும் தங்கைக்கும் எத்தனையோ மனஸ்தாப வருத்தங்கள் இருக்கலாம். அது அவர்களுக்குள் இருக்கட்டும்; அவர்களுக்குள் முடிவாகட்டும். அதில் மூன்றாவது மனிதன் புகக்கூடாது. அண்ணனைத் தங்கையும், தங்கையை அண்ணனும் வேண்டியவரை வைதுகொள்ளட்டும்; அதற்கு அவர்களுக்குப் பாத்திய முண்டு. ஆனால், அண்ணனைத் தங்கையோ, தங்கையை அண்ணனோ மூன்றாவது மனிதனுக்கு எதிரில் தூஷிக்கக் கூடாது; மூன்றாவது மனிதனுக்கு எதிரில் கேவலப்படுத்தக்கூடாது. தன் தங்கைக்கும் மூன்றாவது மனிதனுக்கும் ஒரு சண்டை யுண்டானால்,—தன் தங்கை தன் கழுத்தை யறுப்பதற்குக் கத்தி கொண்டுவந்தவளாக இருந்தபோதிலும் கூட,—தான் தன் தங்கையின் பக்கமே நின்று மூன்றாவது மனிதனை அடக்கவேண்டுமே தவிர, தான் அந்த மூன்றாவது மனிதனோடு சேர்ந்துகொண்டு, தன் தங்கை தன் கழுத்தை யறுக்கக் கத்தி கொண்டுவந்தவளென்றும், தான் தூங்கும்போது தன்

“நான் அவவிதம் கூறுவதற்குக் காரணம் இன்னதென்று வேறொரு சமயத்தில் சொல்லுகிறேன். இப்பொழுது நீ என்னைக் காரணம் சொல்லுமாறு அவர்களின் முன்னிலையில் கட்டாயப்படுத்தவேண்டாம்.”

கழுத்தையே பிசைந்து கொன்றுவிடக்கூடியவ ளென்றும், சண்டாளியென்றும் கண்டபடி தூற்றக்கூடாது. மூன்றுவது மனிதன் முன்னுல் தன் தங்கையைத் தூற்றுவது தன் மானத்தையே கொலை செய்துகொண்டதுபோலாகும்; தன் கௌரவத்தைத் தானே குலைத்துக்கொண்டதுமாகும். தன் தங்கையை அவமானப்படுத்த நினைத்ததெல்லாம் தன்னையே அவமானப்படுத்திக்கொண்டது போலுமாகும். தன் வீட்டின் 'பவிசி'யை—குழப்பத்தை—அவலக்ஷணத்தை—நாற்றத்தை வெளியில் தானே கொட்டிவிட்டது போலுமாகும். இதைவிட மானமழிந்த காரியம் வேறுண்டா?

ஃ

அண்ணனும் தங்கையும் பிரிந்து நிற்பதும், தங்கையை அண்ணன் தூற்றிவிட்டுத் தன்னேடு சேர்ந்துகொண்டதும்—மூன்றுவது மனிதனுக்குத் தைரியத்தைக் கொடுத்துவிடுகிறது. இன்னும் அதிகமாக அந்த ஸ்திரீயை மூன்றுவது மனிதன் ஏசுதற்கும் இடம் வைத்துவிடுகிறது. இன்றைக்குத் தங்கையை ஏசிய அந்த மூன்றுவது மானிடப்பதர் நாளைக்கு அண்ணனையும் திட்டவும் முட்டவும் குத்தவும் நெருங்கிக்கொள்கிறுன். எப்போது அண்ணன் தான் வேறு—தன் தங்கை வேறு என்று மூன்றுவது மனிதன் அறிந்து கொள்ளும்படி வழி வைத்துவிட்டானே, அன்றுமுதற்கொண்டு இந்த இருவர்மீதும் மூன்றுவது மனிதன் முன்பு வைத்திருந்த மதிப்பு தொலைந்துபோய் விடுகிறது. அதுமுதல் இந்த இருவரைப்பற்றியும் அந்த மூன்றுவது மனிதன் வெகு அலக்ஷியமாயும், சாமான்யமாயும் நினைத்து இகழ்வதற்குத் தலைப்பட்டுவிடுகிறுன். இது தமயன் தன் தங்கையை மூன்றுவது மனிதனின் முன்பு கேவலமாகத் தாழ்த்தியதில் வந்த வினை. தன் தங்கையின் பக்கமே தான் சேர்ந்து பேசி மூன்றுவது மனிதனை எதிர்த்திருந்தால், அந்த மூன்றுவது மனிதன் அப்பொழுதே விலகி நடுங்கி ஒதுங்கித் தூரப் போயிருப்பான். அப்பொழுது ஒரு மதிப்பு ஏற்பட்டு அண்ணனுக்கும் தங்கைக்கும் ஒரு மரியாதையும் கௌரவமும் நிலைத்திருக்கும். அவ்விதமின்றித் தன் தங்கையை எதிர்த்த மூன்றுவது மனிதனேடு தானும் சேர்ந்து கொண்ட மௌடீகமான செய்கையானது—மூன்றுவது மனிதனுல் தன் தங்கை கேவலப்படுவதற்கு ஏதுவை உண்டாக்கியதுடன், பிறகு தானும் அந்த மூன்றுவது மனிதனுல் அவமானப்படும்படியாகவும் செய்துவிட்டது. வீட்டின் நாற்றம்—துர்க்கந்தம்—வீட்டுக்குள் இருக்கவேண்டுமே தவிர, மூன்றுவது மனிதன் வரையில் போகக்கூடாது. தன்னைச் சேர்ந்தவரை எதிர்க்கிற மூன்றுவது மனிதனை, தான் தன்னவரோடு சேர்ந்துகொண்டு துரத்துவதை

தற்கொலை செய்துகொள்ளவேண்டிய அவசிய மில்லை. ஓயாமல் துன்பத்தை அனுபவித்துக்கொண்டிருந்தால் உயிர் தானுகவே வாடிவிடுகிறது.

விட்டு, அந்த மூன்றாவது மனிதனுடன் சேர்ந்துகொள்ளப் பார்ப்பதிலும் பெரிய பிழை—தவறு—அநியாயம்—வேறு கிடையாது.

ஃ

ஓரிடத்தில் மூன்று சகோதரர்கள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அவர்களில் ஒருவனை அன்னியனை ஒரு மூன்றாவது மனிதன் எதிர்க்கிறான். அப்பொழுது மற்ற இரண்டு சகோதரர்களும் தங்கள் சகோதரன் பக்கமே சேர்ந்துகொண்டு அந்த மூன்றாவது மனிதனைப் பதிலுக்குப் பதில் தாக்குவதே ஒழுங்காகும். அவ்விதமின்றி, இந்த இரு சகோதரர்களும் அந்த மூன்றாவது மனிதனோடு சேர்ந்துகொண்டு தங்கள் சகோதரனை எதிர்க்கக்கூடாது. அது குடும்ப கௌரவத்தைப் பாழ்ப்படுத்திவிடும். மூன்றாவது மனிதனை எதிர்த்துத் துரத்திவிட்டு, அந்தரங்கத்தில் தங்கள் சகோதரனை "நீ செய்தது பிழை, உன்மேல்தான் தப்பிதம் இருக்கிறது" என்று கண்டிக்கலாம். இது ரகசியத்தில் நடக்கவேண்டிய காரியம். வெளிமுகத்திலோ தாங்கள் மூவரும் ஸகோதர ஒற்றுமையுடன் வாழ்வதாகக் காண்பித்துக்கொண்டு வீட்டின் மதிப்பை உயர்த்த வேண்டும். மூன்று ஸகோதரர்களில் இளையவன், வீட்டு வேலைக்காரனை அடித்துவிடுகிறான். வேலைக்காரன் மூத்த ஸகோதரர்களிடம் இளையவர் தன்னை யடித்துவிட்டதாகப் புகார் செய்கிறான். அந்த சமயத்தில் மூத்த ஸகோதரர்கள், 'சரி—கவனிக்கிறேன்'—என்றும், 'நீ ஏன் அவன் சொற்படி கேட்கவில்லை' என்று அதட்டியும் வேலைக்காரனை அனுப்பிவிடுவதுதான் சரி. அப்பொழுது வேலையாளுக்கும் இளைய ஸகோதரனிடம் ஒரு மதிப்பும் பயமும் ஏற்படும்; குடும்பத்துக்கும் அது கௌரவம். இப்படிச் செய்வதைவிட்டு அந்த வேலைக்காரனின் முன்பு அந்த இளைய ஸகோதரனைத் தருவித்து "ஏன் அடித்தாய்" என்று கண்டித்துக்கேட்கக்கூடாது. அது இளையவனுடைய மதிப்புக்குக் குறைவு. அதற்குப் பிறகு அந்த வேலையாள் இளைய ஸகோதரனை லக்ஷியமே செய்யாமற் போகும்படி நேர்ந்துபோகும். இளையவனுக்கும் மனத்தில் மிக்க வருத்தம் நேரும். ஒரு வேலைக்காரனின் முன்பு தான் அவமானப்படும்படி நேர்ந்ததேயென்று நொந்துபடுவான். இவ்விதமின்றி, வெளிமுகத்தில் இளையவன்பக்கமே சேர்ந்து வேலைக்காரனைக் கண்டித்துவிட்டு, இரகசியத்தில் இளையவனிடம் "நீ அந்த எளியவனை அடித்தது பிசகு" என்று எவ்வளவாயினும் பேசிக் கண்டிக்கலாம். அதற்குப் பாத்தியதை உண்டு. தமயன் அந்தரங்கத்தில் கண்டிப்பதை இளைய

பிரிந்துபோன உள்ளமும், பழைய கொடுமையை இன்னும் நினைத்து விசாரப்படுகிற நெஞ்சும் மீண்டும் ஒன்றுசேராது. ஆயினும், ஒப்பாரி உறவில் ஏதோ ஒரு வகையிற் சேர்ந்து எப்படியோ ஒருவித மனோசாந்தியுடன் சரி—சரியென்று காலந் தள்ளலாம். ஆனால், முந்திய ருசியைக் காணும்படியிராது.

வன் ஒரு குற்றமாகக் கொள்ளான்; தன் பிழையையும் திருத்திக் கொள்வான். ஆகவே, எப்பொழுதும் மூன்றுவது மனிதனின் முன்பு எதுவும் தாழ்த்திப் பேசக்கூடாது. அந்த மூன்றுவது மிருகம் உன்னைச் சேர்ந்தவரைக் கேவலப்படுத்தும்படியும் நீ விடக்கூடாது. அது பெரிய தப்பு. அது கௌரவ ஹானி; குடும்பத்தில் அது ஒரு பிளவை யுண்டாக்கிவிடும். இதை என்றும் மறவாமல் நினைவி லிட்டுக்கொள்க.

ஃ

ஒருவனுக்கு மூத்த தாரம் தவறிவிடுகிறுள். இரண்டாவது விவாகம் செய்துகொள்கிறுன். அந்த இளையாளின் முன்பு தக்க பருவம் வந்தவனுன தன் மூத்த தாரத்தின் குமாரனைக் கேவலப் படுத்தக்கூடாது. இளையாளின் முன்பு அவனையே குடும்பத்தின் தலைவனுக வைத்து இளையாளைச் சரியாக நடந்துகொள்ளும்படி சொல்லிவிடவேண்டும். அப்பொழுது இளையாளுக்கும் தன் மூத்தாள் குமாரனிடத்தில் ஒரு மதிப்பு ஏற்படும்; குடும்பமும் கௌரவப்படும். வெளிக்கு இவ்விதம் செய்துவிட்டு ரகசியமாய்த் தன் குமாரனை "உன்னிடமும் தப்பிதம் இருக்கிறது" என்று வேண்டிய வரையில் அவனைக் கண்டிக்கலாம். இதுதான் ஒருஉத்தமமான தந்தை செய்யவேண்டிய காரியம். அவ்வளவேயன்றி, மூன்றுவது மனுஷியாகிய அந்த இளையாள் முன்பு தன் மைந்தனைக் கண்டித்துக் கேவலப்படுத்தக்கூடாது; அவன் மதிப்பைக் குலைக்கக்கூடாது. அந்தக் குமாரனைப் பெற்ற தாயார் இருந்து அவள் முன்பாகத் தந்தை என்ன கேவலம் செய்தாலும் அது மனதில் அவ்வளவு குத்தாது. குமாரன் தன்னை ஏசிய தன் தந்தைமீது கோபம் கொதித்தெழுந்திடினும் அவனது தாய் அவனைக் கண்டித்து ஒரு நொடியில் அடக்கிவிடுவாள். மாதாவின் சக்தி மகா பெரிது. அவனும் மறுநிமிஷமே மாறி ஆறிப்போவான். அந்த சங்கதியே வேறு விஷயம். ஆனுல், மாற்றுந்தாயின் சங்கதியோ அவ்வாறு கொள்ள முடியாது. அந்த நேற்றுவந்து முளைத்தவளான அந்த மூன்றுவது மனுஷியின் முன்பு கேவலப்பட மானமுள்ள நெஞ்சு ஒருபோதும் சம்மதியாது.

ஃ

ஒருவனிடம் அவன் மனைவியைப்பற்றிச் சில புகார்கள் வருகின்றன. "அவள் அப்படிப் பேசினுள்," "இப்படிச் செய்தாள்"— என்று கோள் கூறப்படுகின்றன. அதைக் கணவன் " அப்படியா" என்று கேட்டுக்கொண்டு தலையசைத்தபடி யிருந்துவிடவேண்டும்; "அதைப்பற்றிக் கவனிக்கிறேன்" என்று அம்மட்டில் சொல்லிவிட

செய்கிற வேலைக்கெல்லாம் ஒவ்வொரு குறை சொல்லிக்கொண்டிருக்கிற எஜமானெருவர் ஏற்பட்டால், எத்தகைய தேர்ந்த தொழிலாளியும் தன் வேலையை அழகுபெறச் செய்ய இயலாது; செய்யவும் புத்தி போகாது; செய்தும் பேர் இராது. செய்யச் செய்யக் குறைச்சொல்லே அதிகமாகும்.

வேண்டும். அவ்வளவுடன் அந்த விஷயம் தீர்ந்துவிடவேண்டும். கோள் கூறியவர்களும் தாங்கள் அவ்வளவு சொல்லிப் புகார் செய்த தற்கு அவன் தலையசைத்து ஏதோ கேட்பதாகப் புகன்று அவ்வள வுடன் இருந்துவிட்டானே, தன் மனைவியை உடனே கண்டிக்க வில்லையே என்று எண்ணமிட்டபடி ஏமாறிப் போய்விடும்படி செய்துவிடவேண்டும். அப்பொழுது புகார் பேசியவர்களுக்கும் அவன் மனைவிமீது ஒரு மதிப்பு ஏற்பட்டுவிடும். அவன் தன் மனைவி யின் பக்கந்தான் என்று எண்ணிவிடவும் நேரும். இவ்வாருக, அவர் களைப் போகச் செய்துவிட்டுப் பிறகு தன் மனைவியை அந்தரங்க மாய் அழைத்து, "அவர்கள் புகார் கூறும்படியாக ஏன் அப்படி நடந்தாய்?—இனிமேல் இவ்விதமான சங்கதிகள் என் செவியில் விழக்கூடாது"—என்று கண்டித்துக் கிரமமாய் நடக்கும்படி செய்ய வேண்டும். இதில் மனைவி திருந்தவும், அவள் மற்றவர் முன்பு கேவலப்படாதிருக்கவும் வழி யுண்டு. இவ்விதம் செய்யாமல் புகார் களைக் கேட்டவுடன் ஆங்காரத்துடன் தன் மனைவியின் கூந்தலைப் பற்றி யிழுத்துவந்து அந்த மூன்ருவது மனிதர்களின் முன்பு அடித் தும் வைதும் மானபங்கம் செய்யவொண்ணுது. அதனுல் தன்மனைவி மீது மற்றவர்க்குள்ள மதிப்பும் கெடுவதுடன், அவள் கேவலப்படுகிற வழியில் தன் மதிப்பும் தொலைந்து, தன் எதிரிலேயே பிறகு ஒரு நாளில், "உன் மனைவியும் நீயும் வாழுகிற லக்ஷணம் தெரியாதோ?" என்று அந்த மூன்ருவது மனிதர்கள் குத்திப் பேசிக் கேவலமாகக் காண்பிக்கவும் ஏற்பட்டுப்போம். ஆதலின், மூன்ருவது மனித ரிருகத்தின் முன்பு எதுவும் செய்யாமல், ஜாக்கிரதையா யிருக்கக் கடவர்.

ஃ

ஒரு தாசி தன்னிடம் வந்து சென்றுகொண்டிருக்கும் ஒருவ னைத் தனிமையில் கேவலமாகப் பேசலாம். அது அவனுக்கு ஒரு குற்றமாகப் படாது; அதுவும் ஒருவித சரசமாகவே அவன் புத்தி யில் படும். ஆனுல், அவனைப்போன்ற இன்னொரு காமுகனை மூன்ருவது மனிதனின் முன்னிலையில் அவனைக் கேவலமாகத் தாழ்த்திப் பேசுவதாயின், அது பொறுக்க முடியாத விஷயமாகிக் கொலையிலும் முடிந்துவிடலாம். இவ்விதமே, அந்த மூன்ருவது மனிதன் அந்த ஒருவனை ஏசும்போது, தாசி அந்த ஒருவனுடன் சேர்ந்துகொண்டு மூன்ருவது மனிதனைக் கண்டிப்பதுதான் சரியா கும். அவ்விதமின்றி, அவள் மூன்ருவது மனிதனுடன் சேர்ந்து கொண்டு அந்த ஒருவனை எதிர்ப்பது அநியாயமும் தவறுமாகும்.

ஃ

மாமிக்கும் மருமகளுக்கும் ஆயிரம் சண்டைக ளிருக்கலாம். இதைத் தெரிந்துகொண்ட மூன்ருவது மனுஷ்யன் மருமகளை ஏதோ ஒரு சங்கதியில் கேவலமாகப் பேசுகிருன். அப்பொழுது

மாமி செய்யவேண்டியதென்ன? தன் மருமகள்பக்கமே இருந்து கொண்டு அந்த மூன்றாவது மனிதனின் வாயை யடக்கவேண்டியதே ஒழுங்கு. அதுவே குடும்ப கௌரவம். இவ்விதமின்றித் தானும் அந்த மூன்றாவது மனுஷ்யனுடன் சேர்ந்துகொண்டு, மருமகளைத் தன் விரோதி யென்றும், தன் கழுத்தைப் பிசையக்கூடியவளென்றும் கண்டபடி தூற்றுவாளானால் அதைக் கேட்கிற மூன்றாவது மனிதனுக்குக் கேவலமாகப் போய்விடுகிறது. இந்தக் கேவலத்தை யறிந்த அவள் குமாரன் தன் தாயைப் பார்த்து "அவளை நீ திட்டலாம், பேசலாம்; ஆனால், நீ மூன்றாவது மனிதனுடன் சேர்ந்து கொண்டு அவளை எதிர்ப்பது எனக்குக் கேவலமாக இருக்கிறது; வீட்டின் சங்கதி வெளியே போய்விடுகிறது; அதனால் குடும்பத்தின் மானம் பாழ்படுகிறது" என்று கதறுகிறான். அதற்கு அவன் தாய் "போடா வித்தைக்காரா" என்று அவனையும் அந்த மூன்றாவது மனிதனின் முன்பு கேவலமாய்ப் பேசத் தொடங்கிவிடுகிறாள். அதனால் மானமழிந்த அவன், "நீ என்னைப் பாதரட்சையால் அடிக்கலாம், நான் சந்தோஷத்துடன் பட்டுக்கொள்வேன்; ஆனால், என்னை மூன்றாவது மனிதனின் முன்பாகக் கௌரவமாய் நடத்தவேண்டும்; அவ்விதமின்றி, மூன்றாவது மனிதனின் முன்னிலையில் என்னைத் தாழ்த்தி, எனக்கு இந்த வீட்டில் ஒரு கௌரவமும் வைக்காமல் இகழ்ச்சியாகப் பேசுவது தெய்வத்திற்குப் பொறுக்காது; மானஸ்தனாகிய என்னை இவ்வாறு மூன்றாவது மனிதனின் முன்பு வைத்து ஈன வார்த்தைகளாடுவது தகாது" என்று வயிறெரிந்து சொல்லுகிறான். இதில் குடும்ப கௌரவம் எவ்வளவு குலைந்துபோகிறது? அந்த மூன்றாவது மனிதனுடன் சேர்ந்துகொண்டு மருமகளையும் மகனையும் தூற்றுவதில் இந்தத் தாய் அடையும் லாபமென்னவோ? கடவுளுக்கே அற்புதம்! எப்பொழுதும் மூன்றாவது மனிதனுக்கு இடம் கொடுக்கவே கூடாது. மருமகளிடமோ, மகனிடமோ கோபமானால் ஒரு குட்டிச்சுவரை—ஒரு கல்லை—ஒரு சிலையை—ஒரு தெய்வத்தை மூன்றாவது ஸ்தானமாக வைத்துக்கொண்டு அதனிடத்தில் சொல்லித் தொலைத்துக்கொள்ளட்டும். அது குடும்ப கௌரவத்திற்குக் கேடு செய்யாது. அவ்விதமின்றி எலும்பும் சதையும் இரத்தமும் கொண்ட மாமிசபிண்டமான மூன்றாவது மனிதப்பேயின் முன்பாகமட்டும் வைத்துத் தூற்றவேண்டாம்; கேவலம் செய்யவேண்டாம். அது கடவுளால் பொறுக்க முடியாதது. தெருவே சிரிக்கக் கூடியது.

ஃ

தன் வீட்டில் குடிக்கூலிக்கு இருப்பவர்கள் தன்னவர்களுடன் சண்டையிடும்போது, வீட்டுத்தலைவன் குடிக்கூலிக்கு இருப்ப

படித்தவர்கள் தாங்கள் செய்கிற ஒவ்வொரு தவறுதலுக்கும் ஒவ்வொரு சாதுர்யமான—தக்கதான பதில் சொல்லிச் சமாளித்து விடுகிறார்கள்.

வர்களைப் பார்த்து—"இவ்விதம் என் வகையினரோடு சண்டை போடுவதாகில் நீங்கள் வீட்டைக் காலி செய்துவிடுங்கள்"—என்று கண்டித்துப் பேசிவிடுவானாகில், குடிக்கூலிக்கு இருப்பவர்கள் வீட்டுத் தலைவனைச் சேர்ந்தவர்களோடு மறுபடியும் சண்டையிடவோ தாழ்த்தவோ முடியாமல் வாயடங்கிவிடுவார்கள். இவ்வாறின்றி, வீட்டுத்தலைவன் குடிக்கூலிக்கு வந்தவர்களின் சார்பிலிருந்து கொண்டு தன்னவர்களைத் தூற்றுவானாயின், அது எவ்வளவு கேவலத்திற்கும் ஆத்திரத்திற்கும் இடம் வைத்துவிடும்? குடிக்கூலிக்கு வந்தவர்களும் வீட்டுக்காரனைச் சேர்ந்தவர்களை இனி மதிப்பதேது? பிறகு வீட்டுத்தலைவனைக்கூட அலக்ஷியம் செய்ய முற்பட்டுவிடுவர். எந்தக்காலத்திலும் மூன்றாவது மனிதனுக்கு இடம் தரக்கூடாது; மூன்றாவது மனிதனே கூடாது. மூன்றாவது மனிதன் பிறரது குடும்பத்திற்கே ஒரு கொள்ளி—குளிர்ந்த கொள்ளி. மாமியையும் மருகியையும் பிரித்து, மாமியை நல்லதனம் செய்துகொண்டு மருகியை விரோதிப்பதும், மருகிக்கு வேண்டியவர்கள்போலிருந்து கொண்டு மாமியை விரோதிப்பதும், தாயையும் மகனையும் பிரித்து விட்டுத் தாயின்பக்கம் இருப்பதுபோல் நடித்து மகனை அலக்ஷியம் செய்வதும், குமாரனுக்கு மிகவேண்டியவர்கள்போலிருந்துகொண்டு தாயை எதிர்ப்பதும், வீட்டுத்தலைவனிடம் நட்புக்கொண்டு மற்றவர்களை அவமதிப்பதும் படுபாவிகளான இந்த மூன்றாவது மனிதர்களின் செய்கைகளாகும். ஆதலின், இந்த மூன்றாவது மனிதனின் பக்கம் சேர்ந்துகொண்டு உன்னவர்களை எதிர்க்காதே—கேவலம் செய்யாதே. அது உனக்கே கடைசியில் மிக்க தாழ்வாக முடியும்.

ஃ

தலைமைக் குமாஸ்தவாக இருக்கும் ஒருவர் தனது எஜமானருக்கு எழுதிய கடிதத்திலே தனக்கு இன்னும் ஒருவாரம் அதிக ரஜா தரும்படி வேண்டுகிறார். அதைப்பற்றி எஜமானர் தானே யோசித்து ஒன்றைச் செய்யவேண்டுமேயன்றிக் கீழ்ப்பட்ட ஒரு குமாஸ்தாவிடம்—'இன்னும் ஒரு வாரம் ரஜா கொடுக்கலாமா? வேண்டாமா?'—என்று யோசனை கேட்கப்படாது. அந்தக் கீழ்க் குமாஸ்தாவும் தன்னைப் பெருமையில் உயர்த்திக்கொண்டு எஜமானன் மெச்சும்படி, 'இதுவரை கொடுத்த ரஜாவே அதிகமாயிற்றே'—என்று நீட்டிப் பேசத் தொடங்குவான். இவ்விதம் அவனை யோசனை கேட்பதானது தலைமைக் குமாஸ்தாவைக் கேவலம் செய்தபடியாகும். கீழ்ப்பட்ட குமஸ்தாவாகிய மூன்றாவது மனிதனே கூடாது. எஜமானர் எவரையும் கேளாது தன் யோசனையின்படி நடந்தால்

வைத்தியர் மருந்துகளுக்கு இட்டுள்ள பெயரெல்லாம் வெகு பிரமாதம். பூரணச் சந்திரோதயம்—சித்தயோக ரசம்—ரதிவிலாஸம்!.........பெயர் பெரிதேயன்றி பிணியாளி குணம் பெறுகிற சங்கதியைக் காணோம்!

தான்—எஜமானருக்கு அடுத்த ஸ்தானமாயுள்ள தலைமைக் குமாஸ்தாவிடம் மூன்ருவது மனுஷ்யனுன கீழ்ப்பட்ட குமாஸ்தாவுக்கு ஒரு மதிப்பும் ஏற்படும்; அவ்வழியில் எஜமானனையும் கீழ்குமாஸ்தா மதிக்க முடியும்.

ஃ

சக்தி எங்கே யிருக்கிறது?—அந்த ஒரு தனித்த சக்தியைப் பெற்றவன் யாவன்? தெய்வ ஆசியாக அந்த ஒரு சக்தியைப் பெற்றவனுல்தான் ஒரு குடும்பத்தின் வாழ்வு நடைபெறுகிறது; ஒரு வர்த்தகத்தின் வியாபகம் அதிகமாகிறது; அந்த சக்தியைக் கொண்டவனுல்தான் எந்தக் காரியத்திற்கும் ஒரு கௌரவம் ஏற்படுகிறது. அந்த சக்திவந்தன் உன் சொந்த பந்துவாகவோ—நண்பனுகவோ—ஊழியனுகவோ—இருக்கிற ஒரு காரணத்தினுலேயே அவனை அல்பமாக மதித்து அலக்ஷியித்து, அவனை எதிர்க்கிற மூன்ருவது மனிதனுடன் நீ சேர்ந்துகொண்டு, அந்த சக்திவந்தனை எதிர்ப்பாயாயின் அதன் முடிவு உனக்கு நன்மையாக அமையாது; கேவலத்தையடையவே நேரும். அவ்வாறின்றி, அந்த சக்திவந்தனேடு சேர்ந்துகொண்டு மூன்ருவது மனிதனை நீ எதிர்ப்பாயாயின் உனக்கு நல்வாழ்வு உண்டு. இந்த அநுபவத்தைப் பிறகு ஒருகாலம் நீ படும்போது தெரிந்துகொள்ளலாம். "சக்தி"யை, சக்திவந்தனை எதிர்க்காதே.

ஃ

இருவருக்கும் ஏற்படுகிற கலகத்தில் பெருந்தன்மை வாய்ந்த உத்தமர்கள் மூன்ருவது மனிதர்களாக வந்து மத்தியஸ்தம் செய்து சமாதானப்படுத்துவதுண்டு. நன்னேக்குடன் பொருந்திய அந்தச் செய்கை போற்றத்தக்கதே; அதை ஒரு சமய உபகாரமாகவும் கொள்ளலாம். அந்த உத்கிருஷ்டமான நற்செய்கை கொண்ட நல்லோர்களைப்பற்றி நாம் இங்கு பிரஸ்தாபிக்க வரவில்லை. ஒருவரை உயர்த்தித் தன் வசப்படுத்திக்கொண்டு மற்றவரைத் தாழ்த்துகிற கபடக் களஞ்சியங்களான மூன்ருவது மனிதர்களைப்பற்றியும், அத்தகைய நாறுகிற வஞ்சக மாமிசப்பிண்டங்களான மூன்ருவது மனிதர்களின் பக்கம் சேர்ந்துகொண்டு தன்னவர்களைக் கேவலப்படுத்தி அவமானம் செய்பவர்களின் மௌட்டியங்களைப்பற்றியும், அன்னேரின் ஆலோசனையற்ற அவலக்ஷண புத்தியைப்பற்றியுமே நாம் இங்குக் குறிப்பிட்டுச் சொல்லியதாகும். எந்தக் காலத்திற்கும் மூன்ருவது மனிதனின் பக்கம் சேரவே கூடாது என்று மறுபடியும் வற்புறுத்திச் சொல்லுகிருேம். மூன்ருவது மனிதனுக்குச் சிறிதும் இடம் தரவே கூடாது. **மூன்ருவது மனிதன் கூடாது.**

மூன்ருவது மனிதன் ஒரு குளிர்ந்த கொள்ளி.
மூன்ருவது மனிதன் கூடவே கூடாது.
பிறர் மூன்பு உன்னவர்களைத் தூற்ருதே.
இதை என்றும் நினைவிற் கொண்டு நலம் பெறுக.

ஆலோசனையின் அழகு !



ஆலோசனையில் அழகும் நிறைந்த கருத்தும் கூடியிருக்க வேண்டும். இன்று செய்யும் ஆலோசனை ஒரு சிறு விதையாயின், அதன் பலன் ஒரு பெரிய ஆலவிருக்ஷமாகத் தழைத்தோங்கவேண்டும். வீண் சங்கதிகளைப்பற்றி ஆலோசிப்பது வியர்த்தம். ஒரு முனிஸிபல் சபையில் ஒரு அங்கத்தினர் எழுந்து, "நேற்றிரவு பகிரங்க ரஸ்தாவில் அலைந்து கொண்டிருந்த நீள்செவியன் என்னை முட்டித் தள்ளி ஓடினான். இப்படி இரவில் தெருக்கள்தோறும் கழுதைகளைத் திரியவிடுவது பிசகு" என்றார். மற்றொரு அங்கத்தினர் எழுந்து, "ஆமாம்! இனி தெருவில் நிற்கும் கழுதைகளைப் பட்டியிலடைக்கும்படி கட்டளையிடவேண்டும்" என்றார். வேறொரு அங்கத்தினர் எழுந்து, "இவ்விஷயம் மிகவும் முக்கியமானதுதான்; இனி கழுதைகளை வெளியேவிடும் வண்ணார்களின்மீது வழக்குத் தொடுக்க வேண்டும்" என்றார். இவர்களின் அபிப்பிராயத்திற்கு இணங்காத இன்னொரு அங்கத்தினர் வெகுண்டெழுந்து, "நீங்கள் சொல்லும் ஆலோசனை எனக்கு ஸம்மதமில்லை; நிர்ப்பயமாய்ப் பகிரங்கமான தெருவில் நின்று கௌரவஸ்தரான ஒரு முனிசிபல் மெம்பரை முட்டும் கழுதையைச் சும்மா விடலாமா? அதற்கு அத்தனை ஆணவம் உண்டானது ஆச்சரியம்! ஆனதால், அவ்வித குற்றம் செய்யும் கழுதைகளைப் பிடித்து கிரிமினல் கோர்ட்டில் விசாரித்துத் தண்டனை விதிப்பதுதான் நலம்" என்றார். இவ்வாறாகக் கழுதையைப்பற்றிய பிரஸ்தாபம் அன்றையதினம் ஒருவித முடிவுக்கும் வராமல் அவரவர்களின் ஆலோசனையிலே இருந்துவிட்டது. இவ்வித வியர்த்த ஆலோசனைகளாற் பயனுண்டா? வீண் காலநஷ்டமே.

வயிறு எரிந்து சொல்லும் வார்த்தைகளைச் சிரித்தும் பரிகசித்தும் கவனியாதது போல் காட்டி அலக்ஷியப்படுத்திவிடுகிற சமர்த்து சிலரிடமிருக்கிறது. அவ்வார்த்தைகளும் அவர்களின் மனதில் தைப்பதில்லை. இப்படித்தான் இவன் பேசுவான், பிறகு ஆத்திரம் ஆறி அடங்கிவிடுவான் என்றுஎண்ணி அதைப் பொருட்செய்கிறதேயில்லை. இவ்வித சமர்த்துள்ளவர்கள் நமக்கே குழிதோண்டக் கூடியவர்களாயிருப்பார்கள்.

உன் ஹிருதயம் சத்தியமுள்ளதாயின், பிறரைக் கெடுக்காததாயின் உனக்கு என்றும் சோறு, கஞ்சி கிடைத்துவரும். உன் நெஞ்சு மோசமும் ஏமாற்றுதலும் கொண்டதாயின் உன் புதுவாழ்வு நிமிஷகாலத்திற்கேதான். அதன்பின் வரும் வாழ்வும் அப்படியே. உன் எண்ணங்களும் வீணாகிவிடும்.

சந்தேக சதிபதிகள்.

"கதைக்குக் காலில்லை" என்பார்கள். இங்கு நாம் கூறத் தொடங்கும் கதையிலுள்ள நாயகன் நாயகிகட்குக் காலுண்டு. ஒரு ஊரில் புருஷனும் மனைவியும் எலியும் பூனையும்போல் ஒற்றுமையா யிருந்தனர். புருஷன் தாஸி லோலனாய்த் திரிவதைக் கண்டு ஸ்திரீக்குத் துக்கம். ஸ்திரீ வியபிசாரம் செய்கிறாளோவென்று பர்த்தாவுக்குச் சந்தேகம். இப்படி ஒருவர்மீதொருவர் ஸம்சயம் கொண்டு காலந் தள்ளிவந்தனர். ஒரு நாள் ஒருவரின் திருட்டை மற்றொருவர் கண்டுபிடிக்க வேண்டுமென்று கண்களைமட்டும் மூடிக்கொண்டு நித்திரை செய்யாதிருந்தனர். முதலில் ஸ்திரீ மெதுவாயெழுந்து வெளியே சென்றாள். புருஷன் கதவைச் சாற்றிப் பின்தாழ்ப்பா ளிட்டுக்கொண்டான். ஸ்திரீ சிறிதுநேரத்தில் திரும்பி வந்து கதவைத் தட்டினாள். புருஷன் திறக்கவில்லை. உடனே அவள் "இதென்ன அநியாயமா யிருக்கிறது! நான் அற்ப சங்கைக்காக வெளியே போனால் என்மீது பழிபோட்டுக் கதவைச் சாற்றிக்கொண்டீரா? நல்லது! இதோ பாரும்! கிணற்றில் விழுந்து நீரே தள்ளிக் கொல்ல முயன்றதாய்ப் பழிபோட்டுஉம்மைப் போலீஸ்கொட்டடிக்கு அனுப்புகிறேன்; இவ்வளவு திமிரா" என்றாள். புருஷன் "போடி போ! கிணற்றில்தான் விழு, நெருப்பில்தான் குதி, போ! போ!" என்றான். அவள் உடனே கிணற்றண்டை சென்று ஒரு பெருங்கல்லைப் போட்டாள். திடீர் என்று எவரோ ஜலத்தில் விழுந்ததுபோல் சப்த முண்டாயிற்று. இதுகணவனைத் திடுக்கிடச் செய்தது. இந்தப் பாவியைக் கொண்டதற்குப் போலீஸார் கையிலும் சிக்கவேண்டுமோ வென்று அஞ்சியவனாய்க் கதவைத் திறந்து வெளியே வந்து கிணற்றில் இறங்கி தன் மனைவியைத் தேடினான். இதற்குள்ளாக மூலையில் ஒளிந்திருந்த ஸ்திரீ வீட்டிற்குள்ளே நுழைந்து கதவை மூடிக்கொண்டாள். புருஷன் திரும்பிவந்து கதவைத் தட்டினான். அவள் திறக்கவில்லை. "நீர் எங்கேயோ சென்று வந்தீர்; உம்முடைய திருட்டுத்தனத்தை ஊரார் அறியப் பண்ணிச் சிரிக்க வைக்கிறேன்" என்றாள். இவ்வாறாக, இருவரும் கூச்சலிட்டுச் செய்த சச்சரவால் அண்டையயலார் விழித்துக்கொண்டு ஓடி வந்தனர். அவர்களிடம் ஸ்திரீ புருஷர்கள் இருவரும் பிராது சொல்லிக்கொண்டனர். ஸ்திரீ தான் வெளியே போகவே யில்லையென்று சாதித்தாள். ஸ்திரீ அறையிலிருந்ததால் உத்தமியென்றும், அர்த்தராத்திரியில் வீட்டைவிட்டு வெளியே சென்று அப்பொழுது பெய்த மழையில் நனைந்து கொண்டு வந்திருக்கிறானென்று புருஷன்மீது குற்றத்தைச் சுமத்தி அவனே குற்றவாளியென்று மகாஜனங்கள் தீர்மானித்தார்கள். இவ்வாறு வெற்றிகொண்டதால் ஸ்திரீக்கு ஏதேனும் சுக முண்டோ? பர்த்தாவின் பிரீதியை அவள் அடைய முடியுமோ? முந்தியிருந்த சொற்ப பிரீதி

யைக் கூடவன்றோ இழந்துவிடுவள்? மூடஸ்திரீகள் தங்கள் கணவனை எதிர்த்துக்கொண்டு அண்டையயலார் தன் பக்கத்தில் பரிந்து பேசும் பலத்தைப் பிரமாதமாய் நம்பிக்கொள்கின்றனர். இன்னும் தன் தாய் வீட்டாரின் பலத்தையும் நினைத்துக் கர்வமடைகின்றனர். கணவன் தன்னை மதிக்கும் விஸ்வாசபலத்திற்குச் சமானமாக மற்றது ஆகுமா? ஸ்திரீயைப் பந்து வர்க்கத்தாரும் பிறரும் உயர்த்திக் கௌரவிப்பதெல்லாம், அவளுக்குக் கணவன் இருந்து அவளது பாரத்தைத் தாங்குவதால் தான். அந்தக் கணவன் மரித்து, அக ஸ்திரீ மற்றவர்களுக்குப் பாரமாய் அவர்களின் அன்ன வஸ்திரத்தை எதிர்பார்க்கும்படியாக நேர்ந்துவிடின், இப்பொழுது கௌரவிப்பவரெல்லாம் அப்பொழுது சிடுசிடு எனப்பட்டு, எவ்விதமேனும் அவளை வெளியில் அனுப்பி அந்த பாரத்தைப் போக்கிக்கொள்ளவே முயல்வர். கணவன் இருந்தகாலத்தின் மதிப்பு அவனோடு போய்விடுமென்பது உறுதி. அவனுக்கு வந்துகொண்டிருந்த பணத்தின் வரவும் அவனோடு சென்றுவிடும். பின்னர் கேவலப்பட வேண்டியதே. ஆகவின், உலக கௌரவத்தைவிட, கணவன் தன்னைமதித்து நடத்தும் கௌரவமே இகபர ஸாதகமாகுமென்பதைத் தமது பதிகளின் மனத்தைப் புண்ணாக்கிக் கதறவைக்கும் பெண்மணிகள் அறியக்கடவர்.

சமரீதியில் தான் பொறாமை.

ஒருவர் உயர்ந்தும் மற்றவர் தாழ்ந்தும் உள்ள இடத்தில் பொறாமை உண்டாவதில்லை. மாணவன் அதிக மார்க்குகள் வாங்கிவிட்டதற்கு உபாத்தியாயர் பொறாமைப்படுவதில்லை. பக்கத்திலுள்ள மாணவனே பொறாமைப்படுகிறான். அண்ணனுக்கு அவ்வளவு கொடுத்தாயே என்று தம்பி பொறாமைப்படுவதன்றி தந்தையோ தாயோ பொறாமைப்படுவதில்லை. பத்திரிகா நிருபர்களுக்குள் ஒருவர் எழுதிய வியாசத்தைப் பார்த்து மற்றவர் பொறாமைப்படுகிறார். அவ்வளவு நேர்த்தியாகத் தனக்கு வரவில்லையென்கிறார். பத்திராசிரியரோ இவர்களின் பொறாமையைப் பார்த்துச் சிரிப்பதன்றி அவருக்குப் பொறாமைச்சிந்தை தோன்றுவதில்லை. இவ்விதமே சரிசமமாயுள்ளவர்களிடையில் மட்டும் பொறாமை உதிக்கின்றதேயன்றி, ஒருவர் உயர்நிலையிலும் மற்றவர் தாழ்நிலையிலும் உள்ளபோது நேர்வதில்லை. எச்சிலைகளை எறிந்தவன் அதைப் பொறுக்கிக்கொள்கிற நாய்களின் மீது பொறாமைப்படுவதில்லை. அந்த நாய்கள்தான் ஒன்றையொன்று தடுத்துக் குலைத்துக் கடித்துத் துரத்தி அந்த அல்பமான எச்சிலைகளுக்காகப் பொறாமை கொள்கின்றன.

பொறுமை கொள்ளும் வழி.

வித்தை யென்னும் ஒரு விஷயத்திலமட்டும் எல்லோருக்கும் பொறுமை யிருக்கவேண்டிய தவசியம். முன்னே முளைத்த காதைப் பார்க்கிலும் பின்னேமுளைத்த கொம்பு அதிக வலிமையுடைய தென்பதை யார்தான் அறியார்? வித்தை, தானம், தர்மம், புண்யம் ஆகிய இவ்விஷயங்களில் தந்தையை மகன் முந்துவதும், குருவை சிஷன் முந்துவதும் நன்மையாகும்.

ஃ

ஸகல புராணங்களையும் இயற்றி வேதங்களுக்கு அர்த்தமான சூத்ரங்களைச் செய்த விஷ்ணுரூபியான வியாஸரைவிட அவருடைய புத்திரரான சுகர் என்பவர் பிரம்மஞானத்தை யடைந்து ஜீவன்முத்தராகி அதிசிரேஷ்டராய் விளங்கினர். அந்த சுகருக்கு சுகப்பிரம்மரிஷி என்ற பட்டம் கிடைத்ததேயன்றி வியாஸருக்கு அப்பட்டம் லபிக்கவில்லை. "அடே சுகா! சுகா!" என்று வியாஸர் தன் குமாரனைக் கூப்பிட்டபோது ஸகல வஸ்துக்களும் "ஏன் ஏன்" என்றனவாம். அதைக்கண்டு வியாஸர் அதிசயித்தார். மற்றொருமுறை சில கந்தருவ ஸ்திரீகள் ஒரு குளத்தில் நிர்வாணமாய் ஸ்நானம் செய்துகொண்டிருந்தபோது அவ்வழியே சுகர் போவதைக் கண்டு அவர்கள் எழுந்திருக்கவில்லை. வியாஸரைக் கண்டவுடன் வெட்கமடைந்து தங்கள் உடைகளை வெகு அவஸரமாய்த் தரித்துக்கொண்டனர். அவர்களை நோக்கி வியாஸர், "பெண்காள்! நான் விருத்தன், வஸ்திரதாரி; என்னைக் கண்டு நாண மடைந்தீர்கள். என் புத்திரனாகிய சுகன் தக்க யௌவன பருவமுடையோன். வஸ்திரமின்றி ஸஞ்சரிக்கிறான். என் அவனைக் கண்டும் நீங்கள் வெட்க மடையவில்லை?" என்றார். அதற்குக் கந்தர்வ மாதர்கள், "ஸ்வாமி! சுகர் பிரம்ம ஞானி; அவருடைய கண்களுக்கு ஸகல பொருள்களும் பிரம்ம ஸ்வரூபமாய்த் தோன்றுகின்றன. அவருக்கு ஸ்திரீபுருஷ பேதமே தெரியவில்லை. நீரோ ஸம்ஸாரி. உமக்கு அபேத ஞானம் உண்டாகவில்லை. நாங்கள் அவசரமாய் வஸ்திரம் தரித்துக் கொண்டதுகூட உமக்குத் தெரிந்துவிட்டது. உங்கள் குமாரனுக்கோ ஏதும் தெரியவில்லை. ஆதலின், பேத புத்தியுள்ள உம்மைக் கண்டதும் வெட்க மடைந்தோம்" என்றனர். இதைக்கேட்ட வியாஸருக்கு "நம்மைவிட நம்முடைய புத்திரன் அதிக ஞானத்தை யடைந்தானே" என்று கொஞ்சம் பொறுமை யுண்டாயிற்றென்பதாகப் புராணிகர் கூறுவர்.

ஃ

இது இருக்கட்டும். ஹநுமார் மகா பலசாலி. அவரைவிட பலவான் அவருடைய புத்திரராகிய மத்ஸ்ய கந்த ஹநுமான் என்று ஒரு புராணத்திலும் இதிஹாஸத்திலும் சோதமயிலிராவணன் கதையில் கூறியிருக்கிறது. இன்னொரு உதாரணம் :— ஸாக்ஷாத் பரமசிவனுக்கு அவருடைய குமாரரான சுப்பிரமணியர் ஞானோபதேசம் செய்தாராம். துரோணாசாரியைவிட அவருடைய புத்திரனு

கஷ்டத்தினால் நான் அடையக்கூடிய துன்பத்தைவிட, என் மனசாட்சி என்னை வருத்துவதனால் நான் அனுபவிக்கும் துன்பம் அதிகமாகும்.

யெ அசுவத்தாமன் அஸ்திர வித்தை யிற் சிறந்தவன். துரோணுசாரியின் சிஷ்யனுகிய அர்ஜுனன் பலவான். தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதி ஞறடி பாயவேண்டும். ஆதலின், வித் யாப்யாஸம் செய்யும் இளைஞர்கள் படித்தது போதுமென்று நினைக்கா மல் மேன்மேலும் படித்துத் திவ்ய ஞானத்தை யடையவேண்டும். பிரா ணன் பிரிகிறபோதுங்கூடப் பக்கத் தில் புஸ்தகத்தை வைத்திருப்பவனே மேதாவி. அவனை எந்தப் பட்டதாரி யும் வெற்றிகொள்ள முடியாது. கா முழுதும் வாசித்து ஆராய்ச்சி செய் பவனுடைய கல்விக்கு ஒரு அளவு எல்லை கற்பிக்க முடியாது. குருவின் வித்தை ஒரு சூரியனைப்போல் பிர காசித்தால், சிஷ்யர்களின் வித்தை இரண்டு சூரியர்களைப்போல் பிரகா சிக்கட்டும். அதனுல் குருவுக்குப் பெருமையுண்டாகுமன்றோ? இவ்வழி யில் பொறுமைகொண்டு விருத்தி யடைய உயர்வதாகில் அதுநலந்தரும்.

துணிவும் தைரியமும் ஒரு தனித்த சக்தி.

ஒரு காரியத்தைத் தானே முதன்முதலாய்த் துணிந்த உள்ளத்துடன் தைரியமாய்ச் செய்துவிட்டு, அதை எவ்வித மும் சமாளித்து, தன் சாமர்த்தியத்தால் நஷ்டமில்லாமல் நிறைவேற்றிவிடும் சக்தி ஒரு சிலருக்கே உரியது. மற்றவர் கள் அந்தக் காரியத்தைச் செய்ய அஞ்சுகையில் இன்னொரு வன் தைரியப்பட்டுத் துணிந்து செய்து சமாளித்தும் விடு கிறுன். அதைப் பார்த்துப் பிறகு பின்னுள்ளவர்கள் செய்வ தில் பெருமை யில்லை. தானே தைரியப்பட்டு முதலில் செய்கிறவனே மேன்மையாளன். அவன் தன் சக்தியை நம்புகிறுன்; எதற்கும் துணிகிறுன். தனக்கு உதவியா யிருக்கும் ஊழியர்களுக்கும் தாராளமாய்ப் பணப்பையைத் திறக்கிறுன். அவர்களையும் உத்ஸாகப்படுத்தித் தானும் உத்ஸாக புருஷனுய் மீசையை முறுக்குகிறுன். இதில் அவன் துணிந்த காரியமும் வெற்றியாகிவிடுகிறது. மற்றவர் களோ பின்னடைவது மட்டுமல்ல; தங்கள் ஊழியர்களையும் உத்ஸாகப்படுத்தத் தவறிப்போய், பணப்பையை அவிழ்ப்ப திலும் வெகுவாக யோசித்துக் கவலைப்படுவதால், அவன் பெறுகிற அபூர்வ வெற்றிகளை இவர்கள் பெறத் தாமத மாகிறது. துணிவும் தைரியமும் ஒரு தனித்த சக்தியாகும்.

பர்த்தாவும் பத்தினியுமாக ஒரு வீட்டிற்கு வந்து சிலநாள் இருப்பாரா யின், அன்னேருக்குச் சயனிக்கத் தனியறை தருவது தர்மமாகும். அவ்வித மின்றி அவர்களைப் பிரித்துவைப்பினே அதற்குக் கடவுள் சாபம் தப்பாது.



இராஜத்தின் பாக்கியம்.



“தந்தியா?—யாருக்கு?—எனக்கா?”—என்று கேட்டுக்கொண்டே நடுங்கியபடி தந்தியை வெகு அவசரமாய்ப் பிரித்துப் பார்த்தேன். எனது முதலாவது கவலை என்னவென்றால், “அபாயம்” (Danger) “மாணம்” (Died) என்ற இந்த இரு பாழான வார்த்தைகள் அதில் எங்கு இருந்துவிடுமோ என்பதுதான். அவ்விதம் இல்லாததை ஆராய்ந்த பிறகு, தந்தியை முதலிலிருந்து கடைசி எழுத்துவரை வாசித்தேன்.

ஃ

“இரங்கசுவாமிக்கு முதுகில் பிளவை; நம்பிக்கை யில்லை; உடனே வரவும்.”

என்றிருந்தது. “நம்பிக்கையில்லை” என்ற ஒரு வார்த்தை போதாதா—என் பிராணனைக் கொண்டுபோக? உடனே புறப்பட நினைத்தேன். அதே சமயம் கடியாரத்தில் மணி எழு அடித்தது. எங்கும் அமாவாசை யிருட்டு. சென்னையை விட்டுப் போட் மெயில் புறப்பட கால்மணிநேரமே இருந்தது. வண்டி தவறாமல் ஏறிச்சென்று என் உயிர்த் துணைவனைப் பார்ப்பேனோ என்று மிகவும் பதைத்துப்போனேன். எதையும் எடுத்துக்கொள்ள நேரமில்லை. என் சொக்காயில் பத்து ரூபாய் நோட்டு ஒன்றிருப்பது தெரியும். அந்த நிமிஷமே என்னைத் தூக்கிக்கொண்டு அவசரமாக நடந்து எதிர்ப்பட்ட டிராம் வண்டியைப் பிடித்து எழும்பூர் ஸ்டேஷன் சேர்ந்து டிக்கட் பெற்றேனோ இல்லையோ வண்டியும் நகர ஆரம்பித்தது. ஓட்டமாய் ஓடி வண்டியைப் பிடித்து ஏறிப் பெருமூச்சு விட்டேன்.

ஃ

என் நண்பன் ரங்கசுவாமியைக் காணவேண்டும் என்ற மனோவேகத்தினாலும், தந்தி கண்டதுமுதல் என் மனம் குழம்பிப் போயிருந்தபடியினாலும், அன்றைய மெயில் வண்டி மெதுவாகவே ஊர்ந்து போவதுபோல் எனக்குத் தோன்றிற்று.

ஃ

ரங்கசுவாமியும் நானும் உயிருக்குயிரான நேயர்கள். குழந்தைப் பருவத்தில் பள்ளிக்குப் போக ஆரம்பித்தது முதல் உண்பதுவும் உறங்குவதும் சேர்ந்தேதான். ரங்கசாமி வெகு இனிமையாகப் பேசுவான். அவனைச்சுற்றிச் சதா நாலு மனிதர்களுக்குக் குறையாமல் வட்ட மிட்டுக்கொண் டிருப்பார்கள். பாலியத்தில் அவனும் நானும் ஒரே பாயிற் படுத்து எத்தனையோ பேச்சுக்கள் பேசியிருக்கிறோம். அதில்

ஒருவரிடம் பெற்ற கடனை நேரில்தர நினைத்து நாள் போக்குவதைவிட மணியார்டர்மூலம் அனுப்பிவிடுவது நாணயத்துக்கு ஒரு மரியாதையைத் தருவதுடன் கடன்பளுவும் தீர்ந்த சுகத்தைத் தரும். இவ்விதம் செய்து பார்.

பிற்காலத்தில் நட்பின் அறிகுறியாக இருவருக்குள்ளும் விவாக சம்பந்தம் செய்து உறவின் முறையாக வேண்டும் என்று அவன் சத்தியம் வாங்கிக் கொண்டதும் ஒன்று. அதை நினைத்ததும் என் கண்களில் கண்ணீர் பெருகி ஓடிற்று. என்னுடன் கூடப் பிரயாணம் செய்துகொண்டிருந்தவர்கள் இதைக் கவனிக்கவில்லை. அவரவர் கவலை அவரவருக்கு. என்னை அறியாமலே என் கையானது தான் பற்றியிருந்த குட்டையால் என் கண்ணீரைத் துடைத்தது.

ஃ

ரங்கசாமி தற்சமயம் திருச்சி கலெக்டர் ஆபீஸில் தலைமைக்குமஸ்தா உத்தியோகம் வகித்து வருகிறான். எனது கோடை விடுமுறையில் நான் குடும்ப சஹிதமாய்த் திருச்சிக்குச் சென்று ஒரு மாத காலம் அவன் விருந்தாளியாக இருந்து திரும்புவது சென்ற பதினைந்து வருடங்களாக நடந்து வந்த சங்கதி. ஆனால், நான் ரங்கசாமியைப் பார்த்து இப்போது நான்கு வருடங்களாயின. இதனால் எங்களுக்கிடையில் ஏதோ வேற்றுமை உண்டாகி விட்டதாக ஒருவரும் நினைத்தல் கூடாது. சதா நமது அண்டையிலிருந்தே இனிக்கப்பேசி நட்புரிமை பாராட்டிச் சமயம் நேருங்கால் கைவிட்டவர்கள் எத்தனை பேரில்லை? "அவன் உன்னைத் தூஷிக்கிறான், இவன் உன்னை வைதான்" என்று கூறி நட்பைப் பிரித்தவர்களும் உண்டல்லவா? இத்தகைய ஸம்பவங்கள் எதுவும் எங்களுக்குள் நேரவில்லை. எப்படியோ லௌகிகத் தொல்லையில் சந்திக்கப் பல தடைகள் நேர்ந்து நான்கு வருஷங்களும் ஆகிவிட்டன. எனினும், உள்ளன்பு கொண்டோர் நீண்டநாள் கழித்துச் சந்திப்பினும், தங்களைத் தாங்களே மறந்து கட்டிக்கொண்டு கண்ணீர் உதிர்த்துப் பழைய அன்பு வெள்ளம் ஒருங்கே பொங்கிப் பெருகப் பரவசமாவதும் வழக்கம் தானே. இத்தகைய வழியிலேயே எங்கள் நட்பும் இருந்தது. தேகத்தால் பிரிந்தபோதிலும் சிந்தையைவிட்டு ஒருபோதும் நீங்கியவர்களல்ல.

ஃ

கடைசி முறையாக நான் அவனைக் கண்ட காலத்து அவன் உருமாறி இருந்தான். சதா விநோதமாய்ப் பேசிக்கொண்டிருக்கும் சுபாவமுள்ளவன் ஒரு உன்மத்தன்போல் உட்கார்ந்துகொண்டே இருப்பதும், கேட்டதற்கு மாத்திரம் பதில் சொல்லுவதுமான நிலைமைக்கு வந்துவிட்டான். அதற்கு அவன் தம்பி கோபாலன் பின் வருமாறு காரணம் கூறினான். ரங்கசுவாமியின் குமாரன் கிட்டு அவ்வருடம் B. A. பரீக்ஷைக்குப் போயிருந்தான். அதில் அவன் அவ்வருடம் தவறிவிடவே, இரங்கசாமி பலவாறு கேவலமாகக் கிட்டுவைப் பேசிவிட்டதாயும், அன்றிரவே கிட்டு பெட்டியைத் திறந்து ஏதோ பெரிய தொகையுடன் வீட்டைவிட்டு ஓடிப் போய்விட்டதாகவும் கேள்விப்பட்டேன். ஓடிய புத்திரன் விஷயமாக ரங்கசாமி பல இடங்களில் தேடியும் அவன் விஷயம் ஒன்றும் தெரியாததால் மனச்சோர்வு கொண்டு அதே ஏக்கத்தில் இந்நிலைக்கு வந்துவிட்டான் என்று தெரிந்துகொண்டேன். பிறகு அவனுக்கு நான் பற்

(1) வீட்டுக்காரர் வாடகை கொடுப்பவரிடம் காட்டும் பல்லிளிப்பும், உறவும், (2) தாசி தனக்குப் பணம் தருபவனிடம் காட்டும் சரசமும், (3) வியாபாரி தன்னிடம் பண்டம் வாங்க வருபவனிடம் உணர்த்தும் அன்பும் அந்த நிமிஷம் வரைக்கும்தான். அவரவர்களின் காரியம்ஆனதும் அன்பு பறந்துவிடும்.

பல கடிதங்கள் எழுதியிருக்கிறேன். அவன் ஒன்றுக்கும் பதில் தந்தவனல்ல. அதுமுதல் இந்நான்கு வருடகாலமாக நான் அவனைப் பார்க்கவும் கூடவில்லை.

ஃ

இந்நிலையில் நான் திருச்சியை அடைந்தேன். பரதனைக் காண அவாவுடன் வந்த ராமனைப்போல் அவன் வீட்டிற்கு ஓடினேன். வீட்டின் கூடத்தில் ஒரு மெத்தையின்மீது அவன் குப்புறப் படுத்துக்கொண்டிருந்தான். என்னை அறியாமலே கன்றிழந்த தாயெனக் கதறினேன்; ஒரு பக்கம் திரும்பித் தன்முகத்தை எனக்குக் காட்டினுன். அவன் கண்களில் வழிந்தோடின கண்ணீரை என் அங்கவஸ்திரத்தினுல் துடைத்தேன். அவன் வாய் திறந்து "நான் ஒன்று நினைக்கத்தெய்வமொன்று நினைத்தது; குழந்தை ராஜத்தை நல்ல இடத்தில் விவாகம் செய்துகொடு; நான் இனிப் பிழைக்கமாட்டேன். உன் அருமைப் பெண் ராஜத்தை என் மருமகளாக அடைய நான் பாக்கியம் செய்யவில்லை" என்ருன்.

ஃ

"அடே! ரங்கசாமி! என்ன அசட்டுத்தனமாய்ப் பேசுகிருய்? உனக்கு ஒன்றும் இல்லை. பயப்படாதே!" என்று தேறுதல் சொன்னேன்.

ஃ

ரங்கசாமியின் முதுகின்மீது எலுமிச்சங்காயளவு வீக்கம். அக்கட்டியை (ஆபரேஷன்) கீறி ஆற்ற வேண்டுமென்று உள்ளூர் டாக்டர் மானுவேல் துரை கூறினர். எனக்குத் தற்சமயத்தில் ரணசிகிச்சையில் தேர்ச்சிபெற்றுச் சென்னையில் புகழ்கொண்டு விளங்கும் டாக்டர் கிருஷ்ணன் (Dr. Krishnan M. D.) தவிர மற்றவர்களிடம் நம்பிக்கை இல்லை. சென்னையில் வந்து தொழில் ஆரம்பித்து இந்த ஒரு வருட காலத்திற்குள் பிரபல ஆங்கிலேய டாக்டர்களால் கைவிடப்பட்ட ரணசிகிச்சைகளில் பெயர்பெற்று இங்கிலாந்திலும் மெச்சப்பட்டவர் டாக்டர் கிருஷ்ணன் ஒருவர்தான். "சென்னைக்குக் கூட்டிப்போய் கிருஷ்ணனிடம் காட்டினுல் நலம்" என்றேன். "இவ்வளவு பலவீனமான நிலையில் எங்ஙனம் கூட்டிச் செல்வது" என்ருன் கோபாலன். நான் அனைவருக்கும் தேறுதல் கூறி மிகுந்த சௌகரியத்துடன் ரங்கசாமியை இரண்டாவது வகுப்பு வண்டியில் ஏற்றி அவன் மனைவியும், கோபாலனும் தொடரச் சென்னையை அடைந்தேன். ஒருவருடனும் பேசாத ரங்கசாமி ராஜத்தைத் தன்னண்டை உட்கார்ந்துகொள்ளும்படி கூறினுன். அன்றைய தினம் அவள்தான் அவனுக்குக் கஞ்சி கொடுத்தாள். என்னவோ ஏமாறிய மருமகள் ஆசை போலும்!

ஃ

ராஜத்திற்கு இப்பொழுது வயது பதினுன்கு. சிறுவயதில் கிட்டு என் வீட்டுக்கு வந்த காலங்களில் 'உன் கணவன் வந்திருக்கிருன்' என்று நாங்கள் கேலி செய்வதுண்டு. அந்தக் காலம் கடந்துவிட்டது. இப்பொழுது ராஜம் பள்ளிக்கூடத்தில் முதல் ஸ்தானம் வகிக்கிருள். ராஜத்தின்

வாடகை வீட்டைக் காலிசெய்வதற்கு இரண்டுமாதமுன்பே காலிசெய்யப்போவதை ரிஜிஸ்தர் கடிதமூலம் தெரிவித்து அதன் ரசீதையும் அக்கடிதத்தின் பிரதியையும் பத்திரப்படுத்து. பிறகு நீ வீட்டைக் காலிசெய்தால் இது ஆனி, ஆடி, கத்திரிக்காய் மாதம், வீட்டைக் காலி செய்யலாகாதென்று வீட்டுக்காரர் தடுக்க முடியாது. எந்தச் சிறு சங்கதியிலும் காகித ஆதாரவு நல்லது.

அழகை ஊரில் உள்ளோர் உவமை கூறுவதும் எனக்குக் காதில் விழுந் திருக்கிறது. இவ்வித எல்லா சந் தோஷமும் இப்போது தத்தளிப்பாய் விட்டது. கிட்டுவும் மறைந்தான். அவன் தந்தையின் கதியும் எந்த நிமி ஷத்தில் எப்படியாகுமோ! ஈசன் செயல்!

ஃ

ரங்கசுவாமி மறுநாள் டாக்டர் கிருஷ்ணன் வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். ரண சிகிச்சை அறைக்கு வருவதைத் தவிர மற்றவைகளை அவர்கீழ் உள்ள உதவி டாக்டர்களே கவனித்துவந்தனர். வீக்கம் பழுத்துவிட்டதாயும், அன் றையதினமே ரணம் கிறேப்பட வேண் டும் என்றும் உதவி டாக்டர் கூறி னர். ராமசாமி சிகிச்சை அறைக்கு எடுத்துச் செல்லப்பட்டான். நாங் கள் வெளியில் "திக்கு, திக்கு" என்று மார்பு அடிக்க உட்கார்ந்திருந் தோம். சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு ஆள் வந்து "டாக்டர் உங்களைக் கூப்பிடுகிறார்" என்றான். ரங்க சாமிக்கு என்ன ஆபத்து வந்துவிட் டதோ என்று உடல் நடுங்கினவண் ணம் சிகிச்சை அறையில் நுழைந் தேன். உதவி டாக்டர் தன் மார் பின்மீது ரங்கசாமியைத் தாங்கிக் கொண்டிருந்தார். டாக்டர் கிருஷ் ணன் ரணசிகிச்சை செய்துகொண் டிருந்தார். கொஞ்சநேரம் கழித்து ரங்கசாமிக்கு மயக்கந் தெளிந்தது. அவன் என்னை நோக்கி வீரிட்டுக் கதறி "கண்டேனடா! கண்மணி கிட்டுவை! என் கவி தீர்ந்தது!" என் றான். எனக்கு ஒன்றும் விளங்க வில்லை. இடையே டாக்டர் கிருஷ் ணன் ஓடிவந்து என் இரு கைகளைப் பிடித்துக்கொண்டு "மாமா! சௌக்கி யமா? என் ராஜம் சுகம்தானா?" என் றார். நான் அந்த சமயம் இருந்த நிலையை விவரிக்க சாத்திய மில்லை. கிட்டுவே கிருஷ்ணனாக இருந்ததை டாக்டருடைய தடபுடல் உடை யிலும், தலைப்பாகை - மூக்குக் கண் ணாடியிலும் நான் கண்டுபிடிக்க முடி யாது போனதுபற்றி வெட்கமுற் றேன். இருந்தாலும் ஒருவாறு தேறி "ரங்கசுவாமியைப் பற்றிக் கவலையில் லையே?" என்றேன். கிருஷ்ணன் சிரித்துக்கொண்டே "அது என் சொந்த சொத்து! கவலையை விடுங் கள்!" என்றான்.

ஃ

முதலிலேயே கிட்டு தன் அப் பாவைப் பார்த்துவிட்டானாம். ஆனால், அப்பொழுது தன்னை அவருக்குக் காண்பித்துக்கொண்டால், "என்ன நமது மகன்தானே" என்று அலக்ஷிய மாய் நினைத்துவிடலாமென் றெண் ணித் தன்னைப்பற்றித் தெரிவித்துக் கொள்ளவில்லையாம். உதவி டாக்ட ரின் தோளில் சாய்ந்துகொண்ட பிறகு முதுகு பக்கத்தில் கட்டியைப் பார்த்து மிக்க விசாரப்பட்டானாம். அதற்குப் பீஸ் ரூபாய் 50—கேட்டு விட்டுத் தன் அறைக்குப் போய்விட, பிறகு மறுபடியும் வந்து ரணசிகிச்சை செய்து பிறகே தன்னை வெளியிட்டா னாம். தந்தை கோபித்த தினத்தில் பெருந்தொகையையெடுத்துக்கொண்டு நேராக லண்டனுக்கு வாசிக்கப்போய்

"அவன் கை வைத்த இடம் முன்னுக்கு வந்ததில்லை, அவன் தொட்ட தெல்லாம் நாசம், சதா தரித்திரச் சனி" என்னும்படியாகச் சிலர் இருக்கிறார் கள். அவர்கள் வெங்கடராமன் என்பதை V. ராமன் என்றும், ஜெகநாதன் என்பதை J. நாதன் என்றும் மாற்றினாலும் அதிர்ஷ்டதேவதை பிரஸன்ன மாகக் காணோம். அவர்களைக் காணும்போதே முகம் சொல்லிவிடுகிறது.

விட்டதாகவும், வீண் செலவு எதுவும் செய்யவில்லையென்றும், தானே தன் அப்பாவை வந்துபார்க்க எண்ணியிருந்த சமயம் அவரே தன்னிடம் வந்துவிட்டாரென்றும் சொன்னான்.

ஃ

இடையில் ஒரு மாதம் கழிந்தது. ரங்கசாமி முற்றிலும் குணமடைந்து பழய நிலைக்கு வந்தான். இளைத்திருந்த தேகமும் தேறிற்று. ஒருநாள் யாவரும் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருந்தோம். "இந்தக் கேஸுக்கு இன்னம் பீஸ் (Fees) அனுப்பாமலிருக்கின்றீர்களே" என்றார் என்னைப் பார்த்து டாக்டர். "ஒருவாரத்தில் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறேன்" என்று நான் புன்னகையுடன் கூறினேன்.

ஃ

ராஜத்திற்கும் டாக்டர் கிருஷ்ணனுக்கும் விவாகம் இனிதாய் நடைபெற்றது. எங்கள் பாலிய வாக்குத்தத்தமும் நிறைவேறியது. காதலர்களும் ஆநந்தமயமாய் வாழ்க்கையை நடத்தலாயினர். ஃ

வெண்ணெய் திரண்டு வருகையில் தாழி உடைந்துவிடும்போலிருந்த நிலைமையெல்லாம் மாறி, இவ்வாறாக மங்களகரமாய் அமைந்ததும் "இராஜத்தின் பாக்கியம்" தான்.

பண்டித - K. விஜயராகவ ஐயங்கார்.

தூண்டிவிடுவோரிடம் மயங்காதே

தான் ஆத்திரப்பட்டவர்கள்மீது நீயும் பகைக்கும்படி உன்னைச் சிலர் தூண்டிவிடலாம். அந்தத் தூண்டுதலில் மயங்காதே. நீ ஆத்திரப்படுவதற்குச் சரியான காரணத்தையும் அவர்கள் சொல்லலாம். அது உண்மையாகவும் இருக்கலாம். ஆயினும், அது அத்தனை பிரமாத விஷயமா?— என்பதை உன்னிலேயே யோசி. சிறு விஷயத்தையும், பெரிய விஷயம்போல் காட்டித் தூண்டிவிடுவார்கள். நீ உடனே எந்தக் காரியத்தையும் செய்துவிடாதே. அந்த சமயம் ஆத்திரத்துடன் நீ செய்யும் வேலையை இரண்டு நாள் ஆறப்போட்டுப் பிறகு பார். ஆத்திரப்பட்ட காரியம் பிறகு அத்தனை அவசியமில்லாத காரியமாயும், மன்னித்துவிடத் தக்கதாயும், அல்பமென்று பொறுத்துக்கொண்டு போகக் கூடியதாயும் ஆகிவிடும். ஆதலின், தூண்டிவிட்ட வேளையில் நீ துடுக்காக எதையும் செய்யாமல் நிதானித்து நின்றால் பல பகைகள் நேராததுடன், பழய சிநேகங்களும் கெடாதிருக்கும். அல்ப ஆத்திரமும், தூண்டுதலும் எவ்வளவோ பொல்லாங்கைப் பிறருக்குச் செய்யவும், வெகு காரமாகக் கடிதமும் எழுதவும் ஏவிவிடுகிறது. பிறகோ, அதைச் செய்யாமலே இருந்திருக்கலாகாதாவென்று தோன்றுகிறது.

முக்கியத்திலே முதலில் கவனம்



தாசி தன்னில்மயங்கியவன் எழுதும் ஒவ்வொரு கடிதத்திலும் ஒரு நகைக்கோ, பணத்திற்கோ சங்கதி ஏதாவது யிருக்கிறதா, கடிதத்துடன் ஏதாவது ரூபாய் நோட்டு வைத்திருக்கிறானா என்று அதையே முதலில் கவனித்துக்கொள்கிறான். (2) வி. பி. வியாபாரியும் தனக்கு வந்த கடிதங்களில் எந்தெந்தக் கடிதங்கள் வி. பி. யனுப்பும்படி பணலாபத்தைக் காட்டியிருக்கின்றன வென்பதையே முதலில் பார்த்துக்கொள்கிறான். (3) வெளியூர் பிரயாணியும் தனக்கு வந்த கடிதத்தில் தனது முக்கியஸ்தர்கள் க்ஷேமமா என்பதையே பிரதமத்தில் அறிய விரும்புகிறான். (4) விவாகத்திற்குக் காத்திருப்பவர்களும்—பெண் வீட்டுக்காரர்கள் சம்மதித்துவிட்டார்களா ?— மாப்பிள்ளை வீட்டார் தலையசைத்தானதா என்பதைத் தான் முதலில் கடிதத்தில் ஆராய்கிறார்கள். (5) வேலைக்கு மனுப்போட்டவர்களும் தங்களுக்கு வரும் கடிதத்தில் காலி யில்லை என்கிற வார்த்தை எங்கு வந்துவிடுகிறதோ என்று கவலையுடன் அதையே முதலில் நோக்குகின்றனர். (6) இவ்விதமே மோக நோக்கிலும் எது லாவண்யத்தை அதிகப்படுத்தவல்லதோ அதையே முதலில் கவனிக்கின்றனர். (7) ஒருவரைத் தேடிச் செல்பவன் 'அவர் வீட்டில் இருக்கிறாரா?' என்பதைத்தான் முதலில் விசாரித்துக் கொள்கிறான். (8) ஒரு சங்கதிக்கு ஒருவரைச் சென்று காணுகையில் அவர் சந்தோஷ முகத்துடன் இருக்கிறாரா என்பதே முதலில் குறிப்பாய்ப் பார்க்கும் சங்கதி. (9) இலையில் படைத்த சாதத்திலும் தமக்குப் பிரியமான காய்கறிகள் உண்டா என்பதிலேயே முதல் பார்வை. (10) எவ்வளவு மறைத்திருந்தாலும் முக்கியத்தைக் கவனிக்கிறதிலேயே முதல் திருஷ்டி. (11) "வைத்திய சோதிட வகையில் பிழைத்துக்கொள்வானா? ஆயுள்பாகம் சரியாயிருக்கிறதா? என்பதே பிரதமத்தில் கவனிப்பு. (12) அதிகமான சீக்குபட்டிருந்தானென்று எழுதப்பட்டிருப்பின், — இப்போது பரவாயில்லை—என்கிறவரி யிருக்கிறதா என்பதைத்தான் முதலில் கவனித்துக் கொள்ளப் புத்தி போகிறது. அதற்குப் பிறகே மற்றதை யெல்லாம் மெதுவாகப் பார்க்கத் தொடங்குகிறார்கள். அவரவர்களின் ஆத்திர அவசரம் எதிர்பார்க்கிற முக்கியமானதை முதலில் பார்த்துக்கொள்ள வைக்கிறது. அந்த "அவசரம்" தீர்ந்த பிறகு சாந்தமான மனதுடன் மற்றவைகளைக் கவனிக்க ஆரம்பிக்கிறார்கள். இவ்விதமே ஒருவனை ஏமாற்றப் பார்க்கிறவர்களும் இவன் இந்த வேளையில் ஏமாறக்கூடியவன்தானா என்பதையே முக்கியமாய் முதலில் கவனிக்கிறார்கள். அவரவர்களின் சுயநலம் அப்படிச் செய்யத் தூண்டுகிறது.

வாடகைவீடு—அது பங்களாவானாலும் இரவல் வீடுதான். தாசி—எவ்வளவு அழகியானாலும் அவளும் இரவல்தான். சிறு கூரைவீடாயினும் சொந்த வீடு என்ற கௌரவம் வேறேதான். அழகற்றவர்களாயினும் தன் மனைவி—தன் குழந்தைகள் என்பதிலுள்ள மதிப்புக்கு இவ்வுலகில் எதுவும் ஈடாகாது.

வியாஜ்யத் தொல்லை

இக்காலத்தில் அற்ப விஷயத்துக்காகத் தொடரும் வியாஜ்யம் முடிவு பெறுவதற்குள் ஆயுளே முடிந்துவிடுகிறது. வாதி பிரதிவாதிகள் இருவரும் செய்யும் பணச்செலவு தீர்ப்புத் தொகையைவிட அதிகமாகிறது. வாதி தொடக்கத்தில் தன் வழக்கின் தன்மையை வக்கீலுக்குச் சொல்லவேண்டும். வக்கீலோ இப்போதுதான் ஆகாசத்திலிருந்து விமானத்தில் இறங்கி வந்தவர்போல் ஈஸி சேரில் சாய்ந்துகொண்டு வழக்காளிக்குப் பாததரிசனம் கொடுக்கிறார். "எந்த வழக்கையும் ஜெயித்துத் தருகிறேன்" என்று சொல்வதில் வக்கீல் அதிவீரர். அவரிடம் சிக்கிக்கொள்வதற்கு முன் அவர் பேசும் வார்த்தை கற்கண்டை மிஞ்சிய ருசியுள்ள குல்கந்தாக இருக்கும். கொழுத்தகடா அகப்பட்டுக்கொண்டதென்றும், இனி இவனால் நாம் நல்ல ஸம்பத்தையடையவேண்டிய நற்காலம் வந்துவிட்டதென்றும் வக்கீல் எண்ணிக்கொள்கிறார். வழக்காளி எதிராளியின் மீது பழிவாங்கு மெண்ணத்தோடு கடன் வாங்கியாவது வக்கீலின் தக்ஷிணையை முந்திச்செலுத்தி அப்போதே கேஸ் ஜெயித்துவிட்டதென்று எண்ணிக்கொள்கிறான். இதென்ன நம்பிக்கையோ? என்ன ஸந்தோஷமோ? நியாயாதிபதி தீர்மானித்த பிறகே நிச்சயிக்க வேண்டும். வக்கீல் சிலவிஷயங்கட்கு ஹைகோர்ட்டு ஸித்தாந்தம் இருக்கிறதென்றும், சில விஷயங்களுக்கு இரண்டு ஸாக்ஷிகளைக் கொண்டு நிரூபிக்கலாமென்றும் தைரியம் சொல்லி ரூபாயைப் பெட்டியில் கொட்டிக் கொள்கிறார். ஆனால், எல்லா வக்கீல்களும் இப்படியென்று எண்ணிவிடக்கூடாது. எத்தனையோ வக்கீல்கள் யோக்கியமாய், தாங்கள் வாங்கிய பணத்துக்குப் பத்து பங்கு உழைத்து மகோபகாரம் செய்கிறார்கள்.

ஃ

சில வக்கீல்கள் கக்ஷிக்காரன் எவ்வளவு சொன்னாலும் அவனுக்கு முன்பே தெரிந்ததுபோல் அபிநயித்து ஏகஸந்தக்கிராகிகள் போல் காட்டி "எல்லாம் ஞாபகத்திலிருக்கின்றன" என்பர். இந்த வக்கீல்களுக்குப் பணத்தையும் கொடுத்து, இவர்களைக் கோர்ட்டில் ஆஜர்ப்படுத்துவதற்காகக் கக்ஷிக்காரர்கள் படும் பாடு சொல்லத் தரமன்று. கக்ஷிக்காரன் வக்கீலுக்கும், வக்கீலின் குமாஸ்தாவுக்கும் பணத்தைச் செலுத்திவிட்டால் போதுமென்று நினைப்பான். அது முற்றிலும் பிசகு. தானே உழைக்கவேண்டும். அப்போதுதான் கேஸ் ஜெயிக்கும். இதன்றி ஸாக்ஷிகளைத் தக்கபடி உபசரிக்க வேண்டும். தன் வேலைகளைக் கெடுத்துக்கொண்டு கோர்ட்டில் காத்துக் கிடப்பதிலுள்ள அசௌகரியங்களை யாரால் விவரித்துரைக்க முடியும்? 'இன்ன வேளையில் நியாயாதிபதி

'அவருக்குப் புத்தி போதாது; அந்த சம்பளமே அதிகம்' என்று கர்வித்துச் சொல்லுபவர், நாளை தன் வேலைக்கே ஆபத்து வந்து நீங்கிவிடும்படி நேரப்போவதை அறிகிறதில்லை. தனக்கு இருக்கிற செல்வாக்கைப் பிறர்க்கு நன்மை செய்ய உபயோகிப்பதே தன் க்ஷேமத்தைக் காத்துக்கொள்ள வழி.

கேஸை விசாரிப்பார்' என்று அறிய முடியாது.

ஃ

இதன் இடையே வழக்காளிக்காக வந்திருக்கும் ஸாக்ஷிகளிற் சிலர் பசியுண்டாயிற்றென்று போய்விடுவார். சிலர் தாம்பூலம் வேண்டுமென்பர். சிலர் வீட்டுச் செலவுக்குப் பணமில்லையென்று கடுகடுத்துப் பேசுவர். வக்கீல் மற்றொரு கோர்ட்டுக்குப் போவதாயும், கேஸ் விசாரணைக்காகப் பெயரைச் சொல்லியழைத்தால் உடனே தமக்கு வந்துதெரிவிக்கும்படியும் சொல்லிப் போய்விடுவார். இப்படிக் கஷ்டப்பட்டுக் கேஸை விசாரிக்கத் தொடங்கும் போது வாதியைப் பிரதிவாதி வக்கீல் குறுக்கு விசாரணை செய்கிறேனென்று அஸந்தர்ப்பமும் அனுவசியமுமான பற்பல கேள்விகளைக் கேட்பார். வழக்காளி சாமர்த்தியவானாயிருந்தால் வக்கீலின் மனம் உடையும்படி பதில் சொல்வான். இல்லையேல் முந்திச் சொன்ன உண்மைகளெல்லாம் இல்லை இல்லையென்று உளறி வழிவான். வியாஜ்யத்தில் புகுந்து எத்தனையோ குடும்பங்கள் பாழாய்ப் போயின. கூடியவரை வழக்குகளை வாதிப் பிரதிவாதிகளே மத்யஸ்தர் முன்பாகத்தீர்த்துக்கொள்ளுகிற புத்தியைப் பெறுவது சிலாக்கியம். இல்லாவிடில் மானக்கேடு, காலக்கழிவு, பொருட்கேடு முதலியவற்றை அநுபவிக்கவேண்டியது தான்.

எவ்வளவோ தங்கட்கு உதவிசெய்தவர்களை அவர்களின் வியாதிப் படுக்கையின் காலங்களில் மறந்து, அவர்கள் தங்களுக்கு அநியாயங்களைச் செய்தார்களென்று எங்கும்பறை சாற்றி, அவர்களை எட்டிப் பாராமலே தூர இருந்தபடி திட்டிக் கொண்டு கிடக்கிறார்கள். இவர்களுக்குக் கால முழுதும் எவ்வளவோ உழைத்திருப்பவர்கள் ஏமாறிய நெஞ்சுடன் அலறுகிறார்கள். இந்தப் பாவம் விடுமா? ஏமாற்றியவனை ஏமாற்றவும் காலம் வரும்.

உன் பெயரைச் சொல்லி "என்னை அவருக்குத் தெரியும்" என்று ஆரம்பித்துப் பெண் விசாரிக்க வருகிற மனுஷர்களிடம் உன் பெயரை சக்க வைத்துக்கொள்ளாதே. முழுதும் அவர்களை ஆழமாய் அறிந்திருந்தாலொழிய அவர்களைப்பற்றி உன்னைக் கேட்பவர்களுக்கு நீ எதிலும் படாமல் குட்டிச் சுவர்போல் பிடிகொடாதிருந்துவிடு. அதுவே பின்பு நற்பெயருக்கு வழி.

சுயநலமே நோக்கமாய், தன் காரியமே கவனமாய், அதற்காகவே அருகில்வந்து உட்கார்ந்து கலகலவெனச் சிரித்துப்பேச ஆரம்பிப்பவன் எத்தனை அழகுடைய புருஷனாயிருந்தாலும், அவன் குணத்தை முழுதும் அறிந்தவனின் முன்பு அல்பனாகவே அவன் அருவருத்து ஒதுக்கப்படுகிறான். அவனும் அதை யுணர்ந்து இங்கு நமது பருப்பு வேகாதென்று எழுந்து சென்றுவிடுகிறான்.

சிறுமணித்திரள்

(முன் பக்கம் 311-லிருந்து)

—கண்டறிந்த அநுபவமணிகள்—

710. வீண் டாம்பீகப் பொருள்களில் ஆசைப்படாதே. அது உன்னைப் பெரிய அபசாரபாட்டையில் கொண்டு சேர்த்துவிடும்.

711. பெரிய எண்ணமே எப்போதும் கோள். ஆனல், சுவரின்றிச் சித்திரம் வரைய ஆசைப்படாதே.

712. சிநேகிதர்களைவிரும்பு.ஆனல், பணம் செலவுசெய்து கிடைக்கும் நேசர்களை விரும்பாதே. அது உன்னிடத்தில் நாலு காசுக ளிருக்கும் வரையே நிலைநிற்கும். அத்தகைய நட்பு நட்பு ஆகாது.

713. அநேக சிநேகிதர்களை விரும்பாதே. நல்ல சிநேகிதர்களாய் ஒருவர் யிருவரைத் தெரிந்தெடுத்துக்கொள். அவர்கள் உன்பொருட்டு அவர்களின் சுகபோகங்களையும் வெறுக்கத்தக்கவர் களா யிருக்கட்டும்.

714. தூரத்திலுள்ள சிநேகிதர்களுக்கும் நூலாசிரியர்களுக்கும் அடிக்கடி கடிதம் யெழுதித் தொந்தரவு கொடாதே. பாவம்! அவர்களுக்கு எத்தனை வேலைகளோ?

715.உலகமெனும் காட்டில் அநேக முட்புதர்கள் நிறைந்து கிடக்கின்றன; அதினுள்ளேயே உனது தினவாழ்க்கையின் பாட்டை யிருக்கிறது. சற்றே மமதையுடன் நடப்பாயானல் இன்னல் எனும் முட்கள் தைத்துக் கொள்ளும்.

716. நிமிர்ந்து நட. பிறரைக் கண்டு வீணே பயப்படாதே. பொய்யான உலகில் உனது ஜீவியம் இன்னும் எத்தனை நாள்?

717. உண்மையை நிலைநாட்டுவதில்உனது சுகபோகங்களை வெறுப்பதற்குத் தயங்காதே.

718. உன்னைப் பலர் பலவிதமாக நினைக்கலாம். அப்படி நினைப்பதற்காக ஒன்றும் தயங்காதே. கடவுளுக்கு எற்கும் காரியத்தைச் செய்வதில் முதன்மையுள்ளவனயிரு.

719. உன்னை அவர் மதிக்கவில்லையா? நீ அவரை மதியாதே. ஆனல், நேராகவோ மறைமுகமாகவோ அவருக்கு இன்னல் தா எண்ணதே. அதற்குக் கடவுள் இருக்கிறரெனத் தேர்க.

720. நீ செய்த அடாத செயல்களுக்கெல்லாம் தண்டனை கிடையாதென மமதை யுறுகிறாய். ஆனல், மனிதன் செய்த துர்க்கிருத்தியங்களின் எதிரொலியை அவன் ஆயுட்காலத்திற்குள் அனுபவிப்பான். அதுவே கடவுளின் சட்டம்.

721. நீ உனது சிநேகிதன்தானே என எண்ணிப் பணம் கேளாதே.

ஒருவர் ஒன்றை விரும்பிக் கேட்கும்போது அவர் முகத்தில் இடித்தாற் போல்——“முடியாது”—என்று சொல்லிவிடாமல்—“ஆகட்டும்” என்று தலையசைத்துப் பிறகு மௌனமாக இருந்துவிட்டால், கேட்டவரும் நமது ஜாடைதெரிந்து விலகிவிடுவாரென்று பெரியபதவியிலுள்ள ஒருவர் கூறுகிறர்.

நீ அவனிடம் பணம் கேளாதிருக்கும் வரையே அவன் உனது ஆத்ம நண்பன். பணம் கேட்டுவிடின் நீ அவனுக்குப் பிறகு பகைவன்தான்.

722. உனது வாழ்வில் பல தோல்விகள் வரலாம். அதைக் கண்டு மனம் தளர்ந்துவிடாதே. எப்போதும் ஊக்கமுள்ளவனுயிரு. என்றுவது அதிர்ஷ்டக் காற்று உன்பக்கம் வீசும்.

723. உன்னை உனது சுற்றந்தார் போற்றவேண்டுமா? உனது தோழர்கள் மதிக்கவேண்டுமா? அப்படியானுல் எவ்வளவு பணம் சேமித்து வைத்திருக்கிறய்?

724. உனக்குச்சம்சாரவாழ்க்கையில் ஈடுபட மிகமிகப்பிரியம். ஆனுல் உனது மாதவருமானம் 50 ரூபாயாக உயர்ந்துவிட்டதா? அல்லது, உன் வருமானத்தில் மிச்சம் பிடிக்கும்படிச் சிக்கனமாகச் செலவிட முடியுமா?

725. நீ அறிவாளியாக வேண்டும், அழகாய் வியாசம் வரையவேண்டுமென எண்ணுகிறய். அப்படியானுல் அமிர்த குணபோதினியின் சந்தாதாரராய் எப்போது ஆகப் போகிறய்?

726. 60-பேருக்கு ஏககாலத்தில் போதிக்கும் கலாசாலை புரோபசரைக் கண்டிருப்பாய். ஆனுல் 60,000 பேருக்கு ஏககாலத்தில் தக்க யோசனை கூறும் ஞான சட்டசபைத் தலைவரைக் கண்டிருக்கிறயா? இல்லையானுல் எப்போது காணப்போகிறய்? ஒரு ரூபாய் சந்தா செலுத்தின் அந்த ஆசிரியர் ஒவ்வொரு மாத முதல் வாரத்தில் உங்கள் வீடுநோக்கி வந்து யோசனை கூறுவார். அவரே அமிர்த குணபோதினி ஸ்ரீராமாநுஜர்.

727. உனது தகப்பனுர் சட்டசபை மெம்பராக ரூ. 10,000-ம் செலவு செய்தார். ஆனுல் நீ ஒரு ரூபாய் அமிர்த குணபோதினிக்கு சந்தா செலுத்தினுல், ஞான சட்டசபையில் உன்னை மெம்பராகப் பதிவு செய்துகொள்ளலாம். சட்டசபைக் கூட்டத்துக்கு மாகாணத் தலைமை ஸ்தலத்துக்குப் போகவேண்டும். ஆனுல், அமிர்த குணபோதினி சட்டசபை உங்கள் வீட்டில் ஒவ்வொரு மாதமும் முதல்வாரத்தில் கூடிவிடும். அச்சபைக்கு சர்வாதிகாரி ஸ்ரீ இராஜகோபாலராவார்.

728. 5-நிமிஷந்தானே என அதை அசட்டை செய்தாய். அதுவே உனது வியாபாரத்தில் 10,000 ரூபாய் நஷ்டத்தைக் கொண்டுவந்து விட்டதென்பதை எண்ணிப் பார்.

729. உனது தாயாரும் தர்மபத்தினியும் உன்மேல் ஆழமான அன்புள்ளவர்கள்தான். ஆனுல், நீ இறந்தால் அவர் இறப்பதுண்டோ? ஆனுல், உன்னை அவர்கள் ஒருவேளை மறவாதிருக்கலாம். அவ்வளவே.

730. தாசியைக் கேவலமாய்த் தூற்றுகிறய். ஆனுல், உனது தர்மபத்தினிக்கு 4-தினங்கள்வரை கேட்கும் சாமான்களை வாங்கிக் கொடாமலிருந்து பார். அதிலிருந்து புது அநுபவம் பெறுவாய்.

731. அவர் லக்ஷாதிபதி, அவருக்கென்ன என நீ எண்ணுகிறய். ஆனுல், அவர் மனக்கோட்டைக்குள் நிறைந்து கிடக்கும் குப்பையெனும் அல்லல் உனது மனக்கோட்டையினுள் இல்லை.

வேலையாள் மனக்கஷ்டத்தோடு சோர்ந்து உற்சாகமற்றுப் போகும்படி செய்கிற எஜமானன், வேலையாளின் இயற்கைச் சக்திகளால் தான் அடையக்கூடிய கனத்த லாபத்தை இழந்துவிடுகிறுன். இது விதையிலிருந்து தானே முளைத்த இலையைக் கிள்ளிவிடுவது போலாம். இலையைக் கிள்ளிய பிறகு செடிமுளைக்குமா? பழிப்பவருக்குள்ள பெருமை உழைப்பவருக்கு இல்லையே!

732. உனது நண்பனின் கடித உரையைக் கண்டு சந்தோஷங் கொண்டாய். ஆனால், உடைத்துப் பார்த்தவுடன் முகமாறுதல் கொண்டு விட்டாய். ஏன்? அதில் பணம் அனுப்ப எழுதியிருந்தது போலும்!

733. நீ ஒரு முதலாளியிடம் வேலைக்கிருக்கிறாய்; அவரையே நம்பியிருக்கிறாய். ஆனால், அவரிடத்து உனது ரிக்கார்டுகளையோ உனது குடுமியையோ—கொடுத்து வைக்காதே! சிக்கிக் கொள்ளாதே! முதலாளி, தொழிலாளிக்கிடையே எப்போதும் மனஸ்தாபமெனும் பிரிவுக் கட்டை நடுவே கிடக்கும். அது எப்படி எப்படியாமோ யார் கண்டது?

734. உன்னுடன் வேலை பார்க்கும் ஒருவரை வெளியேற்றச் சதி செய்கிறாய். ஆனால், நீ எத்தனை நாள் அந்த உத்தியோகத்தி லிருக்கப் போகிறாய்? அது உனக்கு இருப்புப் பட்டையத்துடன் கூடியதல்ல வென்பதை உணர்ந்தால் திடுக்கிட்டுப்போவாய். நீ மற்றவனை வேலையைவிட்டுத் துரத்த, அதன் பாவப்பலன் உன்னை முதலாளியே வேலையை விட்டுத் துரத்தும்படி யாக்கிவிடலாம்.

735. நீ அவர் தொழிலைக் கண்டு கொண்டதாய் உனது பழய முதலாளி முணுமுணுக்கிறார். அவர் அதை எங்கிருந்து கொண்டுவந்தார்? கண்ணகியின் கால் சிலம்பதுபோல் பிறக்கும்போதே உடன் கொண்டுவரவில்லையே!

736. உன்னைப் பெற்றவுடன் உனது அன்னை எவ்வளவோ சந்தோஷப்பட்டாள். ஆனால், அவளே இப்போது உன்னைக் கண்டு துக்கிக்கிறாள். உனது துர்க்கிருத்தியங்களை எப்போது மாற்றப்போகிறாய்?

737. தேனை நீ பருகியிருப்பாய்; ஆனால், அன்பு எனும் கொம்புத் தேனைப் பருகாவிடில் அதை எப்போது பருகப் போகிறாய்?

738. ரோடு போடவில்லை எனக் குற்றம் சொல்கிறாய். ஆனால், அந்த கௌன்ஸிலர் 10-ரூபாய் கொடுத்து உன்னை விலைக்கி வாங்கிவிடவில்லையா? (ஓட் பெறுங்காலத்தில்)

739. 10,000-ரூபாய் இயந்திரமானாலும் நான் போகாமல் எப்படி ஓடுமென எண்ணுகிறாய். 4-நாள் நீ வீட்டி லிருந்துகொண்டால் உனக்கு மேல் திறமையுள்ள ஒருவர் அதை ஓட்டுவதைக் காண்பாய்.

740. கஷ்ட மேன்பதைப்பற்றிக் கனவுகூட கண்டதில்லையென உன்னைப் புகழ்ந்துகொள்கிறாய். அதனால்தான் உலக அநுபவமில்லாத சர்வ முடமாயிருக்கிறாய். தெரிகிறதா?

741. வீட்டில் பெரிய கலகமென விசனிக்கிறாய். ஆனால், உனது ரகசியத்தை அந்தக் குள்ள நரியாகிய மனிதனிடம் ஏன் வெளியிட்டாய்?

M. P. குருசாமி நாடார்.

குடிவந்த ஆரம்பத்தில் யாரும் நல்லவர்கள்தான். நமக்கு உதவியாகவும் அவர்கள் இருக்கலாம்தான். பிறகுதான் இருக்கிறது சண்டையும், மனஸ்தாபமும், வீதி சிரிக்கும் திருவிழாவும்! இதை முன்பே யோசிப்பது நலம்.

உன்னிடம் நாலுகாசு தங்கியிருப்பதால்தான் நீ படுக்கையிற் படுத்துவிட்டதும், "உடம்புக்கு என்னப்பா?" என்று வெகு பிரியமாய்க் கேட்க எல்லோரும் வருகிறார்கள். அவ்விதம் கேட்கும் வேளையில்—"இந்த விசாரிப்பு நமது காசு செய்யும் வேலையல்லவா?" என்று நீ நினைத்துக்கொள்.

என் கண்மணியின் நினைவு.

இரவு இரண்டு மணி வரையிலும் எனது ரயில்வே உத்தியோக சாலையின் தொழிலைச் செய்து கொண்டிருந்துவிட்டு, இனி எதுவும் எழுதுதற்கு இயலாதென்றும், மீறி எழுதின் ஒன்றிருக்க ஒன்று வரைய நேருமென்றும், கிறுகிறவென்று சுற்றுகிற மயக்கத்திற்குச் சற்றே சயனித்துக் கண்ணயர்ந்தால்தான் சாந்தி ஏற்படுமென்றும் எனக்குள் நிச்சயமாய்த் தெரிந்த பிறகு அவ்விதமே வெளியில் நல்ல நிலாவில் இனிய காற்றில் படுத்துறங்கினேன். அதுகாலை என்னுள் தோன்றிய கனவின் விவரம் பின் வருவதாகும்:—

ஃ

நான் விவாகத்தின் நிமித்தம் ஒரு வீட்டிற்குச் சென்றிருக்கிறேனென்று காண்கிறது. திருமங்கலியதாரணத்தின்போது மூடுபல்லக்கொன்று என்னைத் தாண்டி உட்சென்றது. அது அவ்வூர் ஜமீன்தாரணியினுடையதென்று எனக்கு நன்கு தெரியும். அந்தப் பல்லக்குடன் பல நங்கையர்களும் தொடர்ந்து வந்திருந்தனர். அதில் ஒரு நங்கை என் பக்கத்தில் வந்து நின்றுகொண்டாள். விவாக வீட்டில் ஸ்திரீ புருஷ பேதம் இல்லையாதலின் எவளோ பெண்மணியொருத்தி என் பக்கலில் நிற்கின்றாளென்று நினைத்துவிட்டு உள்ளுக்குச் சென்ற பல்லக்கைப்பற்றி நெடுநேரம் கவனித்தபடி இருந்துவிட்டுப் பிறகு என் அருகே நிற்கும் பெண்ணரசியின் பக்கம் திரும்பினேன். ஆ! என்ன விந்தை! மாண்டு, மசானம் ஏறி, நான் கொள்ளியிட, அதன் பிறகு எரிந்து பிடிசாம்பலாகி, அச்சாம்பலும் காவிரி நதியிற் கலந்துபோய், இவ்வுலகத்தினின்றே மறைந்துவிட்ட, ஜெனன மரணக் கணக்கிலும் மரித்ததாய்ப் பதிவான என் காதற்கிழத்தி, துணைவி, நான் ஜீவதுணையாய்ப் பற்றியிருந்த என் வாழ்வின் மணிவிளக்கு, நான் முதன் முதலில் இவ்வுலகினிடை "என் மனைவி" என்று நினைத்த என் தங்கக் கிளி, எப்போதும் என்னைப் பிரியாது என் பக்கத்திலேயே இருந்துவந்த பவளக்கொடி, நான் நம்பியிருந்த நாயகம், நாளைக்கும் எண்ணி எண்ணி ஆவிசோரக் கண்ணீர் பெருக்குகின்ற என் நினைவின் திலகம் ஆன மணிவல்லி ஸர்வாபரணாலங்கிருத பூஷிதையாய் நிற்கக் கண்டேன்.

ஃ

ஆ! நீயா நிற்கிறாய்! யாரோ அருகில் இருப்பதாயல்லவோ இவ்வளவு நேரமாக எண்ணிவிட்டேன். என் கற்கண்டே! கனிரஸமே! என் வாழ்வே! வாழ்வின் மணியே! இவ்வையகம் எனக்கு இனிக்க வைத்த என் திருவே! என் இன்பமே! மறுபடியும் என்னிடம் வந்து விட்டனையா! மஹா பாக்கியம்—என்று கண்மணியின் கழுத்தில் கையிட்டுத் தழுவியபடி குதூகலமாய்த் துள்ளி

மனைவி சொன்னதும் அந்தக் காரியத்துக்கு உடனே இணங்கிவிட்டு, பிறகு என் மூடத்தனமாய் அதற்குச் சம்மதித்து நடந்தோமென்றும், கொஞ்சம் யோசிக்காமற் போனோமே யென்றும் வருந்திக் கலங்குவோர் சிலருண்டு.

னேன். மணிவல்லியும் புன்னகை பூத்து மௌனமாய் நின்ருள். பின்னர் பேசத்தொடங்கி, உள்ளே போவோம் வாருங்கள் என்ருள். இருவருமாக ஒரு அறைக்குட் சென்ருேம். மணிவல்லி உட்கார, நான் அருகில் அமர்ந்து என்னை இனிப் பிரியவொண்ணு தென்று கெஞ்சினேன்.

ஃ

"பிரிகிற விஷயம் ஒரு பக்கம் இருக்கட்டும். மனத்தை விட்டு, சிந்தையை விட்டு நாம் இருவரும் பிரிந்தவர்களல்ல. உங்களைப் பார்க்கும் நினைவுடனேயே இவ் விவாகத்திற்கு வந்தேன். நீங்கள் இங்கு அவசியம் வரக்கூடு மென்று எனக்குத் தெரியும். இனி நாம் இருவரும் ஒன்று சேர்ந்து நிற்றல் எவ்வாறு? நீங்களோ வேறு விவாகம் செய்து கொண்டீர்கள். பிறந்த முதற் குழந்தைக்கும் என் பெயரை ஆசையுடன் வைத்திருக்கிறீர்கள். எனக்குச் சிறுபோதில் கற்பித்துக் கொடுத்த "அறஞ்செய விரும்பு" முதலியவற்றை யெல்லாம் அப்பாலகிக்கும் ஆசையுடன் கற்பித்து வருகின்றீர்கள். இன்னும் உங்களை அந்த நாளில் நான் சுற்றிக் கொண்டிருந்தது போன்று இப்பொழுது உங்கள் செல்வக் குமாரன் உங்களைச்சுற்றி நிற்கிருன். ஆகவே, என்னைப் பிரிந்த துயரத்தை ஒருவாறு சாந்தி செய்துகொள்ள இந்த இருவரின் உதவியும் துணையும் உங்களுக்கு இருக்கிறது. நானே இவ்விருவரின் ரூபமாய்த் தோன்றி யிருக்கிறேனென்று எண்ணியவாறு என்னை மறக்கப் பார்ப்பது உத்தம மாகும். என் நினைவே உங்களின் உள்ளத்தில் சதாபெருகி நிற்கையில் என்னை நீங்கள் மறந்தது மில்லை. உங்கள் மனத்துள் ஸதா என் உருவைத் தோன்ற வைத்து வருவதினின்றே நானும் தங்களை மறந்தவளல்ல வென்றும் நீங்கள் நிச்சயமாய்ப் பாவிக்கலாம். இந்நிலையில், அடிக்கடி மனத்துள்ளும், நினைவின் வழியிலும் ஸதா என்னைக் கண்டுவரும் நீங்கள், நான் எப்பொழுதும் உங்கள்பக்கத்தில் இருப்பதாகவே திருப்தி கொள்ளலாமே. உங்களுக்குக் கிடைக்காதது இந்த சூக்ஷ்ம சரீர மொன்றுதான். அது ஒன்று போக, எப்பொழுதுமே நான் உங்களிடமே இருப்பவளாகின்றேன். இனிப் பிரியக்கூடாது என்று கண்ணீரும் கம்பலையுமாய் என்னைக் கெஞ்சுகிறீர்கள். நான் உங்களின் அருகில் இல்லாவிடிலன்ருே கெஞ்சவேண்டும். விசனத்தை விட்டுவிடுங்கள். நேற்றிரவு என் ஆசைத்தம்பி, நான் தினமும் தலைசீவிக் சிங்காரித்துவிடும் என் தம்பி, அவ்விதம் சிங்காரித்து உடனே எல்லாவற்றையும் கலைய வைத்து விட்டு, அதற்காக அவன் அழ, அந்த அழுகையைப் பார்த்துச் சிரித்து விட்டு, மறுபடியும் ஒழுங்காய் தலைசீவி விட்டு நான் கொஞ்சும் என் தம்பி, தங்கள் மேஜைக்குமேல் ஸதா இருந்து வரும் என் படத்திற்கு மல்லிகைப்பூ மாலை சூட்டியதைக் கண்டு அவனது பிரிவுக்குக் கதறிக் கண்ணீர் பெருகினேன். ஆனுல், அவனைக் காண மனமில்லை. ஒருவாறு மறந்து சாந்தமாயுள்ள மனத்திடையே என் உருவத்தைத் தோற்றச் செய்து வன்நோக வைக்கவேண்டு மென்றே அவனிடம் நெருங்க வில்லை. தங்களைச் சாந்தப் படுத்துவதற்காகவே இப்பொழுதுதங்களிடம் வந்தேன். என் படத்தை உங்

முகம் அழகாக முதலில் தெரிகிறது. ஆனுல் அந்த முகத்தின் குணமோ பழகிய பிறகு கடைசியில்தான் காண முடிகிறது. நல்ல முகமென்று மயங்கி ஏமாறினோர் எத்தனையோ பேர்! கடிதத்தாலும் நம்பி ஏமாறியவர் பலர்!

கள் கண்களுக்குச் செவ்வனே தெரியாத உயரத்தில் வைத்திருக்கிறீர்கள். அதை இனி எடுத்து உங்களின் பார்வைக்கு நேராகவுள்ள இடத்தில் வைத்துக்கொண்டால் அதுவே தங்களின் மனப் பிணிக்குப் போதிய மருந்தாகும். என் ஸ்தூல உடலின் கண் நினைவைச் செலுத்தாமல் என் சூக்ஷ்ம உருவினிடத்தே சிந்தையைக் கொண்டு உள்ளத்தில் கண்டு அநுபவியுங்கள்'' என்றாள் மணிவல்லி.

❖

அதற்கு நான் "நீ இப்போது என் முன்பு தென்படுவதுபோலவே இனி என்னுடன் என்றும் இருக்கவேண்டும். படத்திற் பார்த்து ஒரு பயனுமில்லை. உன்னை நேரில் இப்போது காண்பதுபோல் படத்தில் காண முடியவில்லை. இவ்வுருவின் அழகும் இன்பமும் வேறு. படத்தில் அமர்ந்துள்ள போலியுருவ ஊமைப்பான்மையின் தன்மை வேறு. ஆதலின் உன்னை விட்டு ஒரு கணமும் பிரியேன்'' என்றேன். நெடுநேரம் என்னுடன் பேசிய படி யிருந்தாள். வெகு அழகாய்த் தோன்றினாள். "இருங்கள்! கல்யாணப் பெண்ணைப் பார்த்துவிட்டு வருகிறேன்'' என, அதற்கு நானும் இசைந்தேன். அவளும் அன்புடன் சென்றாள். வெகு நேரத்திற்குப் பிறகும் மணிவல்லி வாராதது கண்டு உள்ளுக்குச் சென்று எல்லாம் தேடிவிட்டு வெளியில் வந்து என் தாயாரைக் கண்டு மணிவல்லி எங்கே யென்று கேட்க, அதற்கு அவர் "மணிவல்லியா?— அவள் பள்ளிக்கூடம் போயிருப்பாள்'' என்றார். இந்த மணிவல்லியல்ல; முந்திய என் மணிவல்லி இப்போது வந்து இவ்வளவு நேரமாக என்னுடன் பேசிக்கொண்டிருந்தது; மணப் பெண்ணைப் பார்த்து வரப் போவதாய்ச் சென்று இன்னமும் வரக் காணோம்'' என்றேன். உனக்கு என்ன பைத்தியம் பிடித்ததா? மணிவல்லி யாவது உன்னிடம் வரவாவது, நீ ஏதோ கனவு கண்டு உளறுகிறாய் என்றார். உடனே என் மணிவல்லியை நினைத்துக்கொண்டு கதறினேன். என் கண்களில் தோன்றிய நீர் தேகத்தின்மீது ஜில்லென்று படவும் நான் விழித்துக்கொண்டேன். கண்டது கனவென்று தெரிந்து மிகு சோகமானேன். மணிவல்லி தெரிவித்தவாறு உடனே உயரவிருந்த அவளது படத்தை எடுத்து என் திருஷ்டிக்கு நேராக இருக்குமாறு வைத்து, இக் கனவையும் ஒரு கடிதத்தில் எழுதத் தொடங்கினேன். மனைவியை மரணத்திற்குக் கொடுத்துவிட்டு, பிறகு அவளைக் கனவில் கண்டு அனுபவிப்பாருக்குத்தான் இந்தக் கனவின் சுவை மிக்க அபூர்வமாய் அநுபவமாய் விளங்கும். மற்றவர்கள் விநோதமாய் இதைப் படித்து முடிக்கலாம். அவர்களுக்கு இந்த அநுபவம் வரவேண்டாம்.

உலக சுபாவத்தை நன்குணர்ந்தவனிடம் நேசிப்பதும், ஒப்பாரி உறவுகள் பிடிப்பதும் வெகு கஷ்டமாயிருக்கிறது. ஏனெனில், அவனுக்குத் தெரியாமல் மறைப்பனவற்றையெல்லாம் அவன் வெளியில் உடனே எடுத்துச் சொல்லிவிடுவதில் மனதுக்கு மிக்க நாணமாய் விடுகிறது. மறுக்கவும் முடிகிறதில்லை.

அதிக அன்புள்ள நண்பர். ஒரு தவிப்புடனே அவரைக் கேட்கிற அவசரமான காரியத்துக்கு மட்டும் அவர் பதில் தராமல், வேறென்னவோவற்றிற்கெல்லாம் வெகு அழகாக விடை எழுதுகிறார். அதன் மூலம் அவரது பட்டுக்கொள்ளாத குணம் தெரிந்து மற்றவர்களும் ஒதுங்கி யிருந்துவிடுகிறார்கள்.



1. ஒரு காலத்தில் எவ்வளவோ அன்பாய், நேச ரத்தினங்களாய் இருந்துவிட்டு மற்றொரு காலத்தில் மாறுபட்ட உள்ளத்தினராய், உள்ளத்தில் அன்பின் பசை சற்று மில்லாதவர்களாய் மாறி, முன்பு நேசித்த அன்பினர், உறவினர் யாவரையும் கையுதறி விடுகின்றனர் சிலர்.

2. எவன் ஸத்தியத்தையே துணைக்கொண்டு அதர்மத்துக்குப் பயந்து நடக்க முயல்கிறானோ, அவனுக்கே எந்த நாளிலும் கஷ்டமும், அபவாதமும், சோதனையும் நேர்கிறது. எவனை நண்பர்களும் சுற்றத்தாரும் வெகுகாலம் தம்முடன் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அவனையே எமன் கொண்டுபோய் விடுகிறான்.

3. ஒருவர்க் கொருவர் ஆகாமற் போகும்படிக் கலகக்கார நாய்கள் கணவன் காதில் 'தப்புத்தாளம்' கொட்ட, அவன் சிறியெழுந்து மனைவியையும், அவள் வீட்டாரையும் பகைத்து மற்றொரு பெண்ணை இரகசியத்தில் மணந்துகொள்கிறான். மறுவருஷம் அந்த புதுப்பெண் "திரும்பி வராத பச்சைப் பல்லக்கு" ஏறிவிட, இரண்டுங்கெட்டு சந்தியில் நிற்கிறான்.

4. மகனுக்குப் பேசிய பெண்ணை இரகசியத்தில் தந்திரமாக மணம் புரிந்துகொள்ளும் ஐம்பது வயதுள்ள தந்தைகளும் இருக்கிறார்கள்.

5. ஒருவனைச் சூழ்ந்து நிற்போரிற் பலர் உள்ளுக்குக் கபடர்களாய், உள்ளத்தி லொன்றும் உதட்டிலொன்றுமானவர்களாய் இருந்து, அப்பால் அவனையே பல இடங்களில் தூற்றி அவன் மானத்தைக் கெடுத்து விடுகிறார்கள்.

6. "அக்காள் தலைமயிரைப் பிடித்து இழு," "தாத்தாவைச் சீ நாயே என்று சொல்," "மாமாவை உதை," "தூ-என்று காறித்துப்பு," என்று இத்தகைய போதனைகளை ஆரம்பத்திலேயே குழந்தைகளுக்குப் புகட்டுகின்றனர் அறிவற்ற பெற்றோர். பிறகு குழந்தைகள் அந்நிய மனிதரை "சீ - நாயே" என்று காறி யுமிழும் போது, மூடப்பெற்றோர் தாங்கள் அவ்வாறு முதலில் பழக்கிவைத்ததைச் சிந்திக்காமல் கோபங்கொண்டு அவர்களை நையப் புடைக்கின்றனர்.

7. எவர் எப்படி வேண்டுமானாலும் உன்னைத் தூற்றிக் கொள்ளட்டும். கடவுளுக்கும் உன் மனஸாக்ஷிக்கும் சரியாக நீ நடக்கிறாயா என்று உன்னைக் கேட்டுக்கொண்டு அவ்வளவில் திருப்தி பெற்றுக்கொள் என்கிறார் ஒருவர்.

8. "எனக்கென்று ஒரு காசும் வைத்துக் கொள்ளாமல் சத்தியத்தையே துணைக்கொண்டு என்னைச் சேர்ந்தவர்களென்று எல்லாம் செலவிட்டு ஒட்டாண்டியானேன். என்னுடன் இருந்து குலாவியவர்களெல்லாம் என்னிடம் கடுகத்தனையும் விசுவாசமில்லாமல், நன்றி யறிவற்றவர்களாய், நான் செய்ததையெல்லாம் மறந்து, என்னைக் கண்ட இடங்களில் தூற்றுகின்றனர். நான் அவர்களுக்குச் செய்த உபகாரங்களையும், என்னைத் தூற்றுவோர்களின் சங்கதிகளையும் உன்

நுழைந்து அலசிப் பாராத 'நாயக ளும் பேய்களும்' அவர்களுடன் சேர்ந்து துள்ளிக் குதிக்கின்றன. நான் இவ்வளவு காலம் அவர்களுக்கு உழைத்ததெல்லாம் வீணாய் முடிந் தன. ஆயினும், ஒவ்வொருவரையும் உள்ளுழம் பார்த்துத் தெளிந்து விழித் துக்கொண்டுவிட்டேன். இனி எவ ருடைய மயக்குதலிலும் சிக்கிக்கொள் ளப் போவதில்லை" என்று மனம் நொந்து கூறுகிறார் ஒருவர்.

9. வீட்டி லிருக்கும்போது தலை விரிகோலமாய் அழுக்கடைந்த பழைய வுடை உடுத்து விகாரமாகக் காணப் படும் பெண்கள் வெளியில் புறப்படும் போதோ நல்ல ஆடை ஆபரணங்க ளால் அலங்கரித்துக்கொண்டு, வாச னைத் திரவியங்கள் பூசிக்கொண்டு, நறுமலர் சூடி மலர்ந்த முகத்துட னிருக்கிறார்கள். வீட்டுக்குள்ளும் அப் படி இருந்து கணவனையும் வீட்டை யும் வசிகரப்படுத்தக் கூடாதா ?

10. தமிழ் பத்திரிகையை யேன் கட்டியழுகிறாய் ? இதில் என்ன "இன்டரஸ்ட்" இருக்கிறது? இங்கி லீஷ் பேப்பர்களைப் படித்தால் அந்த லாங்வேஜ் விர்த்தி யடையும்" என்று கூறி நம்மவரிற் சிலர்க்குக் கொஞ்ச நஞ்ச மிருக்கும் பாஷாபிமானத்தை யும் ஓட்டிவிடுகின்றனர்—ஆங்கிலங் கற்றுத் தாய்பாஷையை யசட்டை செய்யும் கோடாரிக்காம்புகள்.

11. "பார்த்தாலும், நினைத்தாலும், படித்தாலும், படிக்கப் பக்கம் நின்று கேட்டாலும், இத்தனைக்கும் தித்திக் கும் இனித்த சுவைக்கரும்பாம் "அமிர்த குணபோதினி"யின் நல் வரவால் என் காதலியின் 'உள்ளம்' மகிழ்ந்தது; 'திருமுகம்' மலர்ந்தது; செவ்விய அதரத்தில் இளநகை தவழ்ந் தது" என்று படித்த நங்கையை மணந்த நண்பரொருவர் கூறுகிறார்.

12. "உயர்ந்த அந்தஸ்திலிருப்ப வனும், யாரையும் வணங்கி யறியாத வனுமான நான் உன்னைக் கண்டு, ஐம்பொறிகளும் கலங்கி உள்ளமும் உயிரும் உருகியோட, உன் செங்கமல பாதங்களில் விழுந்து கிடக்கின் றேனே. ஆசைக் கிளியே! சற்று தயை புரி" என்று கூறிக் கேவலமாக ஒரு மங்கையிடம் ஒழுங்கு-முறை-தப்பி நடந்துகொண்டதால் ஒரு பணக்கா ரன் அடிபட் டிறந்தான்.

13. சில பணக்காரர்கள் 'சந்தி லும் பொந்திலும்' வீடுகளைக் கட்டி வைத்துக்கொண்டு, தரகர்களை ஏவி அழகிய மங்கையரை அழைத்துவந்து குடிபுகுத்தி வாடகைபெற்று, தங்கள் பண ஆசையை நிறைவேற்றிக் கொள் ளுகின்றனர். இவர்களை உத்தமர்கள் என்று நம்பி உலகம் ஏமாறுகிறது.

14. கற்புடைய மங்கையரைக் கெடுக்கப் பார்ப்பது, சாணையில் பிடிக்கப்பட்ட பெரிய கத்தியின் நுனியில் நாக்கை உராய்ந்து கொள்ள எத்தனிப்பது போலாம்.

15. பொருள் தேட அறியாத புருடனும், குடித்தன வேலை தெரி யாது தடித்தனமாய்த் திரியும் பெண் களும் கூடிக்கொண்டால் அந்தக் குடித்தனம் குட்டிச்சுவர்தான்.

16. பிரபல கிரந்த கர்த்தாவின் பெயர் மனிதர் கூட்டத்தில் சொரூ பந் தெரியாது மறைந்து கிடக்கின் றது. ந. சு. சங்கரலிங்கம்.

என்ன ஆச்சரியம்! எவ்வளவு நேசம்! எவ்வளவு உறவு! போட்ட கடிதத் திற்குப் பதிலே யில்லை. முக்கிய சங்கதிக்குப் பதில் கேட்டும் காணோம்!

வாடகைப்பத்திரம் எழுதாமல் வீட்டுக்குள் சேர்த்துப் பின், வாடகைக்கு அந்தவர்களை இலகுவில் எழுப்ப முடியாமல் தத்தளித்தவர்கள் அநேகம்.



பந்நா தேவி

(273-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரோஜிஷாவுக்குத் திகில் உண்டாயிற்று. வழியில் பீரங்கிகளை இழக்கலானான். பின்னால் எதிரிகளால் துரத்தப்படுவதானான். இனி சண்டையில் வெற்றி பெறுவது அரிதென்றெண்ணி ஆண்மை குன்றினான்.

ஃ

ஆனால் ராஜபுத்திரர்க்கோ ஊக்கமும் உற்சாகமும் கிளம்பின. தம்மவர் எதிரிகளின் பீரங்கிகளை வழியில் பிடுங்கிக்கொண்ட செய்தி எங்கும் பரவ, அடுத்த நாட்டு ராஜபுத்திரரும் இதுதான் ஏற்ற சமயமென்று பெரோஜிஷாவை எதிர்க்கக் கிளம்பினார்கள். நாகோரிலிருந்தும் திரள்திரளாக ராஜபுத்திரவீரர் குதிரைகளிலேறித் தம் சேனையுடன் வந்தார்கள்.

ஃ

பெரோஜிஷாவின் படைக்கு நாளுக்குநாள் கஷ்டம் அதிகரித்தது. அவர்களுக்கு உணவு கிடைப்பதற்கில்லை; திரும்பி கூர்ச்சரம் போவதற்கு மில்லை. இனி உணவின்றித் தாம் உயிர் துறப்பது உண்மையாதலால், மதில்களை யுடைத்து உள் நுழைந்து தானியங்களை வாரிவருவதிலும் உயர்ந்தவழி வேறில்லையெனக் கண்டார்கள். ஆகவே, அவர்கள் கோட்டையினடியில் வெடிமருந்து வைத்துக் கொளுத்த அம் மருந்தின் வெடியால் மதில் பிளந்தது. உடனே 'தீன் தீன்' என்று கூவிக் கொண்டு மதில்மீது ஏறினார்கள். உமேத்சிங்கு இவ்வெடியதிர்ச்சி கேட்டுத் தன் விடுதியைவிட்டுப் படைகளைக் கூட்டி எதிரிகளை எதிர்க்கலானான். இப்போது பெரோஜிஷா தன் படைகளைத் திருப்பி உமேத்சிங்கைத் தடுக்கவேண்டியதாயிற்று. கலீம்சிங்கு தன் ஐந்நூறு போர்வீரருடன் பெரோஜிஷாவின் படைகளைச் சந்தித்து அங்கங்கே அவர்களை எதிர்ப்பது போலக் காட்டி உமேத்சிங்கு தங்குமிடத்தில் அவனுக்கு உதவிசெய்தான்.

ஃ

இனி பெரோஜிஷா மேலே போவதற்கில்லை. இனி சண்டை

ஒருவன் கேட்கிற கடன் கால்ரூபாய் ஆனாலும்கூட, அதைத் திருப்பித் தரும் எண்ணமில்லாதவனிடத்தில் ஏன் ஏமாறித் தந்து நஷ்டப்பட என்று ஓதங்கும் தன்மையோடு அந்த வேளையில் கை பின்னுக்கு இழுக்குமாம்!

செய்யினும் பயனில்லை யென்றெண்ணித் தன் சேனையைத் திருப்பிக் கொண்டு தன் விடுதி சேர்ந்தான். உமேத்சிங்கின் படையும் தம்மிடம் போயினர். ஃ

பெரோஜிஷாவுக்கு அன்றிரவு தூக்க மில்லை. அவன் என்னாத எண்ணம் எண்ணினான். எண்ணி யெண்ணி இதயம் நொந்தான். கொட்டாரைப் பிடிப்பதாயின் உமேத் சிங்கைத் தூரத்தவேண்டும். உமேத் சிங்கைத் தூரத்தினாலொழிய கூர்ச்சரத்தார் வருவதற்கில்லை. ஆகவே, பொழுது விடிந்ததும் கொஞ்சம் சைன்னியத்தை அங்கு நிறுத்தி மற்றெல்லோரும் உமேத்சிங்கை எதிர்க்க ஏற்பாடு செய்தான்.

VI

பொழுது விடிந்தது. பெரோஜிஷாவின் காலாட்படை சண்டைக்குப் புறப்பட்டன. அதற்குக் காவலாகக் குதிரைப்படை இரு பக்கங்களிற் சென்றன. பெரோஜிஷா ஓர் அழகிய யானைமீதேறி மேலே பூச்சாக் குடை கவிழ, மேழே உடல் காப்பாளர் சூழத் தன்சேனையின்பின் சென்றான். அவன் படையினர் பதினையாயிரவரும் வரிசை வரிசையாக அணிவகுத்து நின்றார்கள். இப்பெரும் படையை ரஜபுத்திரர் [illegible] சிறு சேனையால் ஜெயிக்கத் த[illegible]

ஃ

உமேத்சிங்கு நெடு[illegible] யோசித்துக் கடைசியில் தன் சேனையைப் பின்வாங்கக் கட்டளையிட்டான். பின்னுக்குப் போய்த் திடீரென்று திரும்பிப் பகைவரை எதிர்ப்பது யுத்த வீரருக்குள் ஓர் உபாயம். ரஜபுத்திரர் ஓடவும், எதிரிகள் அவர்களைத் துரத்த, ரஜபுத்திரர் சடுதியில் திரும்பிப்பகைவர்மீது சரமாரிபெய்து துப்பாக்கிகளாற் சுட்டனர். அப்பால் கொஞ்சத் தூரத்தில் தக்க ஓர் இடம் தேடிச் சிறிது இளைப்பாறினர். அங்கு பெரோஜிஷா படையினர் வந்து எதிர்க்க, அவர்கள் மறுபடியும் முதுகு காட்டி யோடுவதுபோலாடித் திடீரெனத் திரும்பி எதிர்த்தனர். இவ்வாறு ரஜபுத்திரர் பெரோஜிஷா படையினரை கோட்வாரிலிருந்து வெகுதூரத்திற் கொண்டு சென்றார்கள். கடைசியில் எதிரிகள் அருகில் வரவும், ரஜபுத்திரரெல்லோரும் வலப்பக்கம் திரும்பினார்கள். சலீம்சிங்கு இரண்டாயிரம் காலாட்படைகளைக் கூட்டி வந்து இடப்பக்கத்திலுள்ள எதிரிகளது குதிரை வீரரை எதிர்த்து அவர்களை அவர்களது காலாட்சேனையின் மத்தியில் துரத்தினான்.

ஃ

இவ்வெற்றியால் ரஜபுத்திரருக்கு ஆணவம் அதிகரித்தது; இறுமாப்புண்டாயிற்று. அவர்கள் வலப்பக்கத்தில் இருக்க வேண்டுமென்பது இம்மத்சிங்கு இட்ட கட்டளை. அவர்கள் அக் கட்டளையைக் கவனிக்காமல் பெரோஜிஷாவின் காலாட் படையைத் துரத்தினர். மகம்மதிய காலாட் படையும் குதிரைப்படையும் திரும்பி ரஜபுத்திரரைத் தாக்கினர். அதனால் ரஜபுத்திரரில் அநேகர் மடியலாயினர். பலர் காய மடைந்தனர். எங்கும் இரத்தவெள்ளம் ஆயிற்று. இவர்களுக்கு இப்போதுதான் செய்த பிழை இன்னதென் றேற்பட்டது. சலீம்சிங்கு தன் ஐந்நூறு குதிரை வீரருடன் எதிரிகள் வராவண்ணம் தடுத்ததால் மிகுந்தவர் உயிர் தப்பினார்கள். பின்னர் இம்மத்சிங்கும் சலீம்

வாடகையைக் கிரமமாகக் கொடுக்கிற நாணயஸ்தனிடத்தில் வாடகை பெறுகிற வீட்டுக்காரரில் சிலருக்கு நன்றி விஸ்வாசம் இருப்பதில்லை. ஏனோ.

சிங்கும் எதிரிகளை இருபக்கமும் தாக்கினார்கள். இருதாத்தாரும் ஏற்றத்தாழ்வின்றி நெடுநேரம் போர் புரிந்தனர்.

ஃ

கோட்டைக்குள் ஓர் உயர்ந்த கோபுரத்தின்மீது மன்சிங்கும், பந்நாதேவியும் உட்கார்ந்து சண்டையைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். எங்கும் செந்தூள் பறப்பதும், இடையிடையே கத்தியும் கேடயமும் மின்னுவதுமா யிருந்தன. நெடுநேரமானதும் செந்தூளிற் சிறிது கோட்வார் பக்கம் பறந்துவரக் கண்டார்கள். இதென்ன?— எதிரிகள் வீராய்க் கோட்டைக்குள் நுழைய வருகின்றாரோ?—அல்லது, ரஜபுத்திரர் தோல்வியுற்று உயிர்தப்பி ஓடி வருகின்றாரோ?— என்று இவ்வாறு ஐயுற்று ஏங்கினர். ஆனால், வரவர பஞ்சவர்ணக் கொடி தோன்ற, வருபவர் ரஜபுத்திரர் என்றறிந்தார்கள். அப்பால், அரிகந்தத்தார் கொடி காணப்பட்டது. அக்கொடிக்குரியவராகிய உமேத்சிங்கு கோட்டைக்குள் இருக்கும் மன்சிங்கின் படைக்கு உதவிசெய்ய வருவதாய்த் தெரிந்தது. எதிரிக ளெல்லோரும் இரண்டணியாக முன்பின் நின்று கோட்டையண்டை ரஜபுத்திரரை எதிர்க்கலாயினர். உமேத்சிங்கு உடனே பகைவரை எதிர்க்காமல் சற்று நிதானித்தான். பெரோஜிஷா அவன் அஞ்சுகின்றானென்றெண்ணி அகங்களித்தான். சிறிது நேரத்தில் "இதுதான் சமயம்; ரஜபுத்திரரைத் தாக்குங்கள்" என்ற சத்தம் உண்டாயிற்று.

(மறு ஸஞ்சிகையில் முடிவு.)

ப. சி. கோவிந்தசாமிராஜா.

செருப்பு கற்பித்த புத்திமதி!

அறுந்துபோன ஒரு பழஞ்செருப்பை நெடுநேரம் உழைத்துத் தைத்துச் சரிசெய்து தந்தவனுக்கு ஒரு பிரபு காலணாவை எறிந்தார். "ஐயோ! சாமி! வெகுநேரம் பாடுபட்டேன்; முக்காலணாவாவது தாருங்கள்" என்று அந்த ஏழை கெஞ்சியும், பிரபு அதை லக்ஷ்யம் செய்யாது சென்றுவிட்டார். ஏழையின் வயிற்றெரிச்சலில் அந்த செருப்பை மறுதினம் ரயிலில் வைத்து மறந்து இறங்கி இழக்க நேர்ந்தது. கூலி குறைத்ததற்குப் பலன் அதுவென்று பிரபுவின் மனதில் படவே, அன்றுமுதல் பேசிய கூலிக்குமேல் காலணா அரையணா சேர்த்துத் தரத் தொடங்கினார். ஒரு மேஜையைத் தூக்கிச் செல்ல இரண்டணா பேசி, கடைசியில் அது போதுமாவென்று கேட்க, அதைத் தூக்கியவன் இன்னும் காலணா சேர்த்துத் தந்தால் போதுமென, பிரபு அவனுக்கு அரையணா அதிகம் தந்து அனுப்பினார். இது காணாமற்போன செருப்பு கற்பித்துக்கொடுத்த புத்திமதி!



இன்று கூடிய நமது கடையில் ஏமாறாத பிரமாதச் செட்டியார் துப்பறிய வருகிற துடுக்குக்காரர்களைப் பற்றி அடுக்கடுக்காக மடக்கிக் கொட்டினார். "வீட்டுக்குப் புதிதாக வருகிற மனிதர்கள், ஏதோ வந்தோம், இருந்தோம், கண்டோம், உண்டோம், கழிந்தோம், புறப்பட்டோம்-என்று போகாமல், வீட்டின் சங்கதிகளை யெல்லாம் என்னவோ மகா உறவு நேசம்போலவும், மகா பாத்தியப்பட்ட பச்சடிகள் போலவும், பெரிய உதவிகள் செய்து கைதூக்கி விடப்போகிற கருணைக் கட்டிகள் போலவும், உள்ளுக்குள் கைவிட்டு ரொம்ப பிரியத்துடன் விசாரிக்கத் தொடங்கிக் கொள்கிறார்கள். இடையிலே அதற்கு அருகிலே ஏதேனும் கதவு போட்டிருந்தால் அதையும் திறந்து வெகு உருக்கமாய் ஆராயத் தொடங்கிவிடுகிறார்கள்! உங்களுக்கு எவ்வளவு நிலம் இருக்கு?—மத்தியானப் புசிப்பிலே சாதத்திலே கல் அதிகம் என்று கேட்டேனே; அரிசி கடையிலேயே வாங்குகிறீர்கள்?—நெல் வரத்து கிடையாதா?—வீடு என்ன சொந்த வீடுதானே?—அது உங்கள் பேருக்குத்தானே?—சம்பாத்தியம் எவ்வளவு வருகிறது?—வியாபார-உத்தியோக மேல் விருத்திகள் எப்படி யிருக்கிறது?—கடன் ஏதாவது உண்டா? நகை எவ்வளவுக்கு இருக்கிறது?—மாதாமாதம் ஏதாவது தொகை பாங்கியில் கட்டிச் சேர்த்து வருகிறீர்களா?—இதுவரை எவ்வளவு பணமுடிப்பு சேர்த்து வைத்திருக்கிறீர்கள்?—என்று மெதுவாக வீட்டின் உள் சங்கதிகளை யெல்லாம் வெகு பக்குவமாக இளித்துப் பிதுக்கிக் குலுக்கிச் சிரித்துக் கேட்கத் தொடங்குகிறார்கள். இத்தகைய பெத்தண்ணாக்களிடம் ஏமாறி உளறிவிடக்கூடாது.

ஃ

என்னவோ அவர்களுடைய பேச்சு வக்கணையிலே மயங்கி நாம் உள்ள உண்மையை ஆத்திரத்துடனோ, வருத்தத்துடனோ, எரிச்சலோடோ, அல்லது அவர்களிடம் ஒரு மனோ ஆறுதல் பெறுவதற்கோ சொல்லிவிட்டாலோ, அவர்கள் அவற்றைத் தூக்கிக்கொண்டு இன்னோரிடம் போய், அந்த இடத்திலே அதை—நமது கதையை—அவிழ்ப்பார்கள்! என்ன பிரதர், நான் அவர்கள் வீட்டுக்குப் போயிருந்தேன்; அந்த வீட்டின் பவிசியெல்லாம் ஒரே நாளில் கண்டுகொண்டேன்; ஒரு காசுக்குக்கூடக் கதி கிடையாது; வீட்டுக்குச் சாணி போடாமல் எருமுட்டைத் தட்டிவிடுகிற அவ்வளவு சமர்த்துக்காரர்கள்; சமர்த்து சந்தியில்தான் நிற்கிறது; சாதத்திற்கு இவ்வளவு நெய் ஊற்றுவதற்குக்கூட வழியில்லை.. மூட்டை நெல்லோ, அரிசியோ

'அவனோடே இனி நான் பேசுவதா?'—என்ற கோபத்தில் இவன் நிற்க, அவனோ இது எவ்வளவு நேர உறவென்று மூட்டை முடிச்சுகளுடன் ஊரை விட்டேபோய்விடுகிறான். இவன் கோபத்தை வைத்துக்கொண்டு என் செய்ய?

வாத்து கிடையாது; அன்றன்று கடையில் வாங்குகிறார்கள்; என்னவோ வெளிக்குப் பிரமாதத் தடபுடல்; உள்ளேயோ தரித்திரம் பிடுங்கித்தின்கிறது—என்று வாய்க்கு வந்தபடி கூட்டியும் நீட்டியும் கொட்டி அளப்பார்கள். இன்னும் நம்மை எவ்வளவோ கேவலமாகவும் தாழ்த்துவார்கள். இத்தகையோரிடம் நாம் உளறிவிடுவது பெரிய பிசகு. ஒரு வியாபாரியின் கடையினுடைய கொள்வினை கொடுப்பினையாகிய வர்த்தக ரகசியம் எவ்வளவு மர்மமாய் வெளியிடாமல் காப்பாற்றப்படுகிறதோ, அதற்கு மேலும் பத்து பங்கு ரகசியமாய் நமது குடும்பத்துச் சங்கதிகள் நமது வீட்டுவாசல் தாண்டாதபடியும், பிறர் செவிக்கு எட்டாதபடியும் மூடி வைக்கவேண்டும். மூடி வைக்கிற உடமை மூன்று உலகம் பெறும். மூடியிருப்பதற்குள்ள மகிமை திறந்திருப்பதற்கு இல்லை. நமது உள் விஷயங்களை மெதுவாக ஆராய்ந்து சுரண்ட வருகிற இத்தகைய 'தோலிருக்கச் சுளை விழுங்கி'களை வாயடக்குவதற்கு,—அவர்கள் நம்மிடம் நமது வீட்டுச் சங்கதிகளைக் கேட்க வரும் போது,—பின் வரும் சுலோகத்தின் பொருளைச் சொல்லிவிட்டால் வாய் அடங்கி மௌனக் கட்டைகளாய் விடுவார்கள். அந்த சுலோகத்தின் பொருளாவது:—

"தான் பிறந்த வருஷம்—தனக்கு இருக்கும் சம்பத்து—குற்ற மில்லாமல் எக்காலமும் புசிக்கும் ஔஷதம்—குரு உபதேசம் செய்த மந்திரம்—ஸ்திரீகளிடத்தில் அனுபவித்தபோகம்—தன் சாமர்த்தியம்—தன் மானம்—தன் வயதின் தொகை—கிருககிர்த்தியத்தின் சுகதுக்கங்கள்—ஆகிய இவைகளைப் பிறரிடத்தில் தானாகச் சொல்லிக் கொள்ளலாகாது"

என்று இதை நாம் அவர்களுக்கு ஒரு கடிதத்தில் எழுதிக் காட்டிவிட்டால்,—அதுவும் சிரித்துக்கொண்டே காட்டிவிட்டால்,—அவர்கள் "அடேயப்பா! இந்த ஆள் நம்மைவிடப் பக்கா ஆசாமி, விழித்துக்கொண்டுள்ள மனிதன், ஏமாறாத எமன்" என்று தெரிந்துகொண்டு மவுனமாய்விடுவார்கள். எங்களின் சொந்த சங்கதியில் நீர் தலை நுழைந்துக்கொண்டு நடவ வர வேண்டாம் என்று சாந்தமாகவே சொல்லிவிட்டால் அதுவே அவர்களின் திருவாயை யடக்கும் வழி" என்று கூறினர். *

அதன்பின் அல்லா பிச்சை எழுந்தார். "உன் கஷ்ட நஷ்டத்தைத் தெரிந்து கொண்டிருக்கிற உன் நண்பனுக்கு நீ மறுபடியும் தெரிவிக்கப் போய், அதற்கு ஒரு ஆறுதலை அவனிடம் நீ பெற விரும்பாதே. அவ்வளவு சிரமமும் அவனுக்கு நீ கொடுக்காதே. அந்த உன் நஷ்ட கஷ்டங்களுக்காக அந்த நண்பனே முதலில் உன்னிடம் நெருங்கி கலந்து வருந்தித் தேறுதல் சொல்லவேண்டியது முறை. அவ்விதம் செய்யாமல் ஜாடையாக இருந்துவிடுகிற நண்ப(?)னிடம் நீ உன் பாடுகளை வலிய எடுத்துச் சொல்லப் புகுவது மௌட்டியமும் பயனற்ற காரியமுமாகும். அந்த வகையில் உன் நண்ப(?)னின் ஒதுங்

---

* யோக்கியமாயுள்ளவர்கள் ஊர்விட்டுப் புறப்படுகையில் தவிர், பால் முதலிய கடன்பாக்கிகளை அவர்களின் வீடு தேடிச்சென்று அழைத்துக் கொடுத்து எல்லா சில்லரைக் கடன்களையும் தீர்த்துவிட்டுப் புறப்படுகிறார்கள். வேறு சிலரோ நாற்புறமும் கடன்களை வைத்துத் திடீரென்று மறைந்துவிடுகிறார்கள்.

கிய தன்மையின் போக்கைக் கண்டு கொண்டு புத்தி பெற்றுக்கொள். நண்ப(?)னுடைய குணத்தையும் அந்தச்சமயம் உன் நெஞ்சுத் திராசில் நிறுத்தி வைத்து அறிந்துகொள். உனக்கு வேண்டியவர்கள் காலமாய் விட்டனரென்று நீ வருந்தி எழுதும் கடிதத்தைக்கூட ஒரு மூலையில் போட்டுவிட்டு, பிறகு அவன் உன்னைச் சந்திக்கும்போது, இறந்தவர்களைப்பற்றி எதும் தெரியாததுபோல் அவர்கள் சுகம்தானு என்று கேட்டு விட்டு, அப்பால், "அவர்கள் இறந்தா போய் விட்டார்கள்? எனக்குக் கடிதம் வரவேயில்லையே; வந்திருந்தால் உடனே எழுதியிருப்பேனே" என்று பசப்புகிற நண்ப(?)ர்களும் எவ்வளவோ பேர் உண்டு. அதில் இந்த ஒதுங்கிய நண்பனையும் ஒன்ருக நினைத்துக்கொண்டு மறந்து மனம் தேறுவதே சரி" என்ருர்.

ஃ

கோணல் பாளையம் கோலாகலப் பிள்ளை முரட்டுத்தனத்தைப் பற்றி மூக்கி மூக்கிச் சில அநுபவங்கள் தெரிவித்தார். "முரட்டுத்தனம் சில சமயங்களில் நல்ல வேலை செய்து நாலு காசு மிச்சப்படுத்தி, மனைவி குழந்தைகளுக்கு இரண்டு நகைகள் செய்ய இடமும் கொடுக்கிறது. வெட்டிக்குத் தின்றுகொண்டிருந்தவர்களும் வீட்டைவிட்டு விலகிவிட, வீட்டுக்காரனும் அவர்களைத் தாங்கிச் சமாளித்த களைப்பு தீர்ந்து வீட்டில் அப்படா என்று உட்கார முடிகிறது. நானும் வீட்டிற்கு உழைத்து வேலைகள் செய்து, அந்த வேலைக்கே இவ்வளவு பிண்டம் உண்டேனென்று பிறகு சொல்லிக் காட்டுகிற சிலரை,— அப்படி நீ பின்னல் சொல்லிக் காட்டவும் வேண்டாம்; நீ கூடஇருப்பதில் வீட்டில் அதிகம் ஆக்கிக் கொட்ட நேர்ந்து, அந்த அதிக வேலையில் நீயும் பங்குபெற்றுச் செய்யும்படியாகவும் வேண்டாம்; மனுஷ்யர்கள் அதிகம் சேராவிடில் வேலையும் அதிகம் இராது; ஏதோ கால்படி யரிசியோடு ஒரு காய்கறி குழம்போடு சமையல் வேலையும் தீர்ந்துவிடும்; தெய்வமே என்று எங்கள் பாட்டில் புசித்து ஹாயியாக இருப்போம்; நீங்கள் குந்தவும் வேண்டாம்; உழைத்ததாகப் பிறகு சொல்லவும் வேண்டாம்; இப்போதுதானே புறப்பட்டுப் போய் வாருங்கள்,"—என்று முரட்டுத்தனமானது அதிக திமிராகப் பேசிவிடச் செய்கிறது. அந்த வார்த்தைகளைக் கேட்டபிறகு வீட்டில் உட்கார முடிகிறதா? ரோஷம் பிறந்து நாலு திட்டு திட்டி முகத்தைக் கோணிப் பேசி உடனே புறப்பட்டுக்கொள்கிருர்கள். நடுவே எவராவது குறுக்கிட்டுத் தங்களைப் போகவேண்டாமென்று சொல்லக்கூடுமென்று அப்படி இப்படி கொஞ்சம் நடைபோடுகிருர்கள். பக்கத்து வீட்டில் தங்கள் மூட்டையுடன் போய்க் குந்துகிருர்கள். எவராவது தங்களைத் தேடிவந்து சமாதானப்படுத்தி அழைப்பார்களென்பது இவர்களின் எண்ணம்! கடைசியில் எவர்களும் வந்து அழைக்காமல் போகவே அப்படியே புறப்பட்டுப் போய்விடுகிறவர்களும் உண்டு. மறுபடியும் உள்ளே கொஞ்சம்நுழைந்து தங்கிக்கொள்ளப் பார்ப்பவர்களும் உண்டு. பின்னும் தங்க நினைத்தால், மறுபடியும் சூட்டோடு சூடாக முரட்டுத்தனத்தை இரண்டாவது முறை

எல்லாம் பணப்பையிலிருக்கிறது அண்ணேன்! பணமுண்டானல் வேண்டிய மனுஷ்யர்கள் கிடைப்பார்கள். எத்தனை வண்டிகளானலும் வாடகைக்குக் கிடைக்கும். எல்லாக் காரியமும் ஒரு நொடியில் கைகூடும். பணத்தின் சக்தி ஒரு தனி சக்தியல்லவோ! பணம் கையிலிருந்தால் கவலையேது? பயமேது?

யும் காட்டினுல்தான் கிளம்புவார்கள். ஏனெனில், இந்தக் குதிரைகள் ஒரு சவுக்கடியில் புறப்படாது. இரண்டு மூன்று சவுக்கடி கொடுத்தால்தான் வீட்டை விட்டு வெளியேறும். ஆகவே, மற்றொருதாரும் முறட்டுத்தனம் காட்டி ஓட்டித் தொலைக்க வேண்டிவருகிறது. முறட்டுத்தனம் கெட்டதென்றாலும், குடும்பம் வீண்செலவு செய்து குட்டிச்சுவாராகாதபடி அது க்ஷேமப்படுத்துகிறது. பின்னுல் இந்த முறட்டுக்காரன் இவ்விதம் செட்டாக வாழ்ந்து நல்ல புஷ்டியான பணக்காரனுய் விட்டால், இவன் எவரெவர்களைத் துரத்தினுனே அவர்களே அவனை அவன் பணத்துக்காக மதித்துப் புகழத் தொடங்கிக் கொள்வார்கள். அவ்விதமான புகழ்ச்சிப் பாட்டைத் தங்களைக் குந்தவைத்துக்கொண்டு அநேக சமயங்களில் தாங்கி ஏழையான வனுக்கு ஒருபோதும் பாடமாட்டார்கள்" என்று சொன்னுர். இத்துடன் நமது கடையும் முடிந்தது.

'பஹதூர்' போன்வண்டு செட்டியார்.

மனுஷ்ய ஜென்ம மெடுத்தால் (1) தத்துவக் ஞானியாகவாவது, (2) வித்வானுகவாவது, (3) மண்டலாதிபதியாகவாவது, (4) தனவானுகவாவது, (5) குணவானுகவாவது, (6) பெரிய காரியங்களைச் சாதித்துக் கீர்த்தி பெற்றவனுகவாவது, (7) தர்மவானுகவாவது, (8) உதாரகுணமுடையோனுகவாவது, (9) சுத்த வீரனுக வாவது, (10) கவிகளால் பாடல் பெற்றவனுகவாவது இருக்கவேண்டும்.

ஒரு புலவரின் அநுபவ மோழி.

பழைய வழியில் பத்து பாடல்கள் எழுதி முடிப்போமென்றால் கடவுள் அதற்கு இடம் தரேன் என்கிறுர். புது வழியில் புத்தமுதாகப் புதுக்குமாறு புன்முறுவலுடன் புதுக்கட்டளையொன்றைப் புதுவிதமாய் இடுகின்றுர். புதிய அறிவினுடைய பொக்கிஷப் புதையலையும்—அது மறைந்துள்ள இடத்திலிருந்தும் புரட்டி எடுத்துக் காட்டுகிறுர். அவ்வழியில் நானும் புகநேர்ந்து சிந்தனைகளை வளர்த்துப் புதியதொன்றைப் புனைந்து பூர்த்திசெய்து புளகித முறுகின்றேன். ஒரு வியாசம் எழுதுங்காலையிலும் இவ்விதமே புதுவழியிற் போக வைக்கின்றுர். இதில் என் செயல்—அசைவு எதுமில்லை. அனைத்தும் அப்பெருமான் றன் அருளுகையே. அவர் காட்டிய பாதையிலே நான் செல்கின்றேன்.

விடுகதை வினா ?

1. ஒரு தோட்டத்திற்கு ஏழு வாசற்படிகள். ஒவ்வொரு வாயிற்படிக்கும் ஒவ்வொரு காவற்காரனுண்டு. ஏழு வாயிற்படிகளையுங் கடந்து சென்றால் தோட்டத்தில் ஒரு எலுமிச்சைமரம் பழங்களுட னிருக்கிறது. ஒருவனுக்கு அந்த மரத்திலுள்ள பழங்களில் ஒன்று தேவை. அத்தோட்டத்திற்குச் செல்லவேண்டுமானால் அங்குள்ள காவற்காரர்கள், திரும்பிவரும்பொழுது கையிலுள்ள பழங்களில் பாதி கொடுக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். அப்படி 7-காவற்காரர்களுக்கும் அவர்கள் கேட்டபடி கொடுத்தபிறகு பார்த்தால் கையில் ஒரு பழந்தானிருக்கவேண்டும். பழங்களைக் கொடுக்கும்போது அறுத்தல் கூடாது. அப்படியானால் அவன் பறிக்கவேண்டிய மொத்த பழங்கள் எத்தனை ?

2. வேதனும் மாணிக்கமும் நண்பர்கள். இருவர்களும் மாங்கனி பறிக்க மாந்தோப்புக்குச் சென்றனர். அவர்களில் மாணிக்கத்துக்கு மரம் ஏறத் தெரியாது. ஆகையால், வேதன் தான் மரமேறிப் பறிப்பதால் பறிக்குங் காய்களில் 2 பங்கு கொடுக்கவேண்டு மென்றான். மாணிக்கம் அதற் கிசைந்தான். உடனே வேதன் மரமேறிக் காய்களைப் பறித்து அவர்கள் தீர்மானத்தின்படி பாகித்துக்கொண்டு இல்லஞ் சென்றனர். வழியில் மாணிக்கம் வேதனை நோக்கி நீ 2 பங்கு எடுத்துக்கொண்டதால் எனக்கு இன்னும் ஒரு கனி தருக என்றான். வேதனும் அப்படியே கொடுத்தான். அச்சமயம் பார்த்தால் இருவரிடமும் காய்கள் சரியாகவிருந்ததென்றால் வேதன் பறித்த கனிகள் எத்தனை ?

D. இரத்தின முதலியார்.

II

3. ஒருவனுக்கு மூன்று மனைவி. அவர்களுக்குச் சேலையெடுக்கத் தன்னிடம் எவ்வளவு பணம் இருக்கிறதோ அவ்வளவு பணம் முதல் மனைவியிடம் வாங்கிச் சேர்த்து அவளுக்கு 4-ரூபாய்க்கு ஒரு சேலை எடுத்துக் கொடுத்துவிட்டு, மீதி பணத்துடன் இரண்டாம் மனைவியிடம் அவ்வளவு பணம் வாங்கி அவளுக்கு 4-ரூபாய்க்கு ஒரு சேலை எடுத்துக் கொடுத்துவிட்டு, அதிலுள்ள மீதியின் அளவு மூன்றாம் மனைவியிடம் வாங்கி அவளுக்கு 4-ரூபாய்க்கு ஒரு சேலை எடுத்துக் கொடுத்துவிடுகிறான். பிறகு மீதி அவனிடம் இல்லை. அப்படியானால் அவன் முதலில் வைத்திருந்தது எவ்வளவு ? K. சுப்பிரமணியம்.

4. தலையில் எட்டும், இடையில் ஐந்தும், கடைசியில் மையும் சேர்ந்தால் என்ன ?

III

5. பாத்திபிடித்துத் தண்ணீர் பாய்ச்சிடுவார்.
விதைகொண்டு விதைக்கமாட்டார்.
விளைந்தவுடன் வெட்டிக்கொள்வார்.
அது என்ன ?

சு. அ. சிவநாடன்.

விடை:—(1) 128-பழங்கள். (2) 6-காய்கள். (3) ரூ. 3-8-0. (4) அருமை. (5) உப்பு.

பழமொழிக் குறிப்புகள்

2—அற்ப குணம்.

(முன்பக்கம் 233-லிருந்து)

196. "அற்ப சிநேகம் பிராண சங்கடம்"

அற்பபுத்தி யுள்ளவர்களென்று முதலில்தானே தெரிந்துகொள்ள முடிகிறதில்லை. பழகியும், நேசம் செய்துமே ஒவ்வொருவருடைய குணத்தையும் அறியவேண்டியிருக்கிறது. ஒரு காசுக்குக்கூடக் கணக்கு வைத்துக் கேட்டுப் பெற்றுக்கொள்கிற மனுஷ்யனுடைய தன்மையைப்பற்றியும் யோசிக்கத்தான் வேண்டிவருகிறது. முதலில் அவனை ஏழையென்று விட்டுவிடுகிறோம். நாமே கணக்குக் கேட்டு வலியக் கொடுத்து அனுப்புகிறோம். பிறகு நாளடைவில் அவனது அற்பமான சுபாவம் கொஞ்சம் கொஞ்சமாக வெளிவர ஆரம்பிக்கிறது. நமக்கு ஒரு பெரிய லாபம் ஓரிடத்திலிருந்து வரவேண்டியிருப்பதைப் பார்த்துச் சிலருக்குப் பொறுக்கிறதில்லை. ஆயினும், அவர்கள் நமக்கு நேசமாகவே இருக்கிறார்கள். இருந்துகொண்டே, நமக்கு அந்த லாபம் கிடைக்குமுன் தாங்கள் அதை அபகரித்துக்கொண்டே, நமக்குக் கிடைக்காமற் செய்துவிட்டோ, நம்மீது புகார் கூறித் தடுத்துவிட்டோ, வெளிக்கு ஏதும் தெரியாத பூனைகள்போலும் இருக்கிறார்கள். சிலர் இரவல் பெற்றுச் சென்று தங்களிடமே வைத்துக்கொண்டு காணாமற் போயிற்றென்று வெகு தைரியமாய்ச் சொல்லி சமாளித்துவிடுகிறார்கள். அவனைப்போலத் தாங்கள் உயர்வதற்கு முடியவில்லையேயென்று பொறாமை கொள்ளுகிறார்கள். இவர்களெல்லாம் நமக்கு வேண்டிய நண்பர்கள்தான். இவர்களின் அழுகிப்போன அற்பகுணம் பிறகுதான் தெரிகிறது. தெரிந்த பின்னரேனும் அவர்களின் சகவாசத்தை விட்டொழிப்பது உத்தமமாயிருக்கும். ஏனெனில், அற்பகுணம் படைத்த பதர் எங்கும் தனது அற்ப குணத்தைக் காட்டிவிடுவான். சில சமயங்களில் அவனிடம் சில உயர்ந்த குணங்களும் தென்படலாம். ஆனால், அதற்காக அவனைச் சேர்த்து வைத்துக்கொள்வது கூடாது. அது ஆபத்துக்கே வழி. இதற்கு ஒரு கதையும் சொல்லலாம்.

197 "செல்லும் செல்லாது என்பதற்குச் செட்டியார் இருக்கிறார்"

என்ற பழமொழியும் அற்பகுணத்தை விளக்குதற்கே தோன்றியது. ஒரு ஊரில் தனிகன் என்ற பணக்காரச் செட்டியார் ஆயிரம் மொகராக்களடங்கிய ஒரு சுருக்குப் பையை இடுப்பில் கட்டிக்கொண்டு வழிப்பயணம் போய்க்கொண்டிருந்தார். வழியில் வெகு ஏழையான ஒரு பாட்டைசாரி போவதை அவர் பார்த்து அவன் நல்ல திடகாத்திரனாக இருந்தபடியால், இவனை நாம் சிநேகம் பண்ணிக்கொண்டால் ஒருக்கால் வழியில் யாராவது வழிப்பறிப்

பவர்கள் வந்தாலும் நமக்கு உபகாரமாக இருப்பான் என்று உத்தேசித்து, தனிகர் அவனிடம் கொஞ்சங் கொஞ்சமாய் நெருங்கிப் பேசி அவனைத் தனது சிநேகிதனாகப் பண்ணிக்கொண்டார். அவனும் கபடமற்றவனாகத் தென்பட்டபடியால், 'இவனால் நமக்குப் பய மில்லை' என்றும் ஒருவாறு ஊகித்துக் கொண்டார். இவ்விருவரும் சூரியாஸ்தமனம்வரையில் வழி நடந்து பாட்டையில் ஒரு சத்திரமும் சாவடியும் தென்பட்டபடியால் 'இனி இருட்டில் வழி நடப்பது சரியில்லை' என்று அவர்கள் கையிலிருந்த கட்டமுதைப் புசித்து விட்டுப் பகலெல்லாம் வழி நடந்தவர்களாகையால், அலுத்துச் சாவடியில் படுத்துக்கொண்டார்கள். "மடியில் கன மில்லை, வழியில் பய மில்லை" என்ற பழமொழியின் உண்மைப்படி செட்டியாரின் சிநேகிதனான பாட்டைசாரி காற்றுவேண்டினவனாகையால் ரஸ்தா ஓரமாகவே நிர்ப்பயமாகப் படுத்துக் கொண்டான். செட்டியாரோ அவன் அருகாமையில் சாவடித் திண்ணையில் படுத்துக்கொண்டார். இவரோ மடியில் கன முள்ளவர். இவருக்குத் தூக்கம் எப்படிப் பிடிக்கும்?

இப்படி யிருக்கும்போது சற்றேறக்குறைய பாதி ராத்திரியாய்விட்டது. இரண்டு திருடர்கள் அவ்வழியாய்த் தங்கள் குறிப்பை உத்தேசித்து எங்கோ போய்க்கொண்டிருந்தார்கள். ரஸ்தா ஓரமாய் நடந்துவருகையில் அவ்விருவர்களுள் ஒருவனுடையகால் சாலையோரம் தூங்கும் பாட்டைசாரியின் மேல் பட்டது. அவன் "இதென்ன அண்ணே! வழியில் ஒரு பெரிய கட்டை கிடக்கிறது" என, அதற்குப் பாட்டைசாரி கள்ளன் இவ்வளவுடன் நம்மைப் புடைக்காமல் விட்டானே என்று களிப்பதற்குப் பதிலாகத் தன்னைக் கட்டையென்று இகழ்ந்ததற்குக் கோபித்தவனாய் "என்னடா பயலே! உங்கள் வீட்டுக் கட்டை ஒரு பணம் துணியில் முடிந்துகொண்டு தூங்குமோ?" என்றான். அதைக் கேட்டதும் கள்ளர்கள் "இது நல்ல சகுனம். உதை இவனை. ஒருபணம் போகும் வழியில் வெற்றிலைப் பாக்குக்கு உதவும்" என்று சொல்லி அவனை உதைத்து ஒரு பணத்தையும் பிடுங்கிக்கொண்டார்கள். அப்படி எடுத்துக்கொண்டவுடன் பணம் செல்லுமோ செல்லாதோ என்று அவர்களுக்குச் சந்தேகம் வரவே, அதை ஒரு கள்ளன் மற்றொருவனைப் பார்த்து "என்ன அண்ணே! இந்த அற்பப் பயல் பணம் செல்லுமோ செல்லாதோ" என்று சொல்லிக்கொண்டே ஒரு கல்லில் போட்டுத் தட்டிப் பார்த்தார்கள். அதற்காவது நமது பாட்டைசாரி வாயை மூடிக்கொண்டிராமல், அதி அல்பனும் புத்திஹீனனு மாகையால், "என்ன சந்தேகம் உங்களுக்கு; செல்லும் செல்லாததற்கு அதோ செட்டியார் இருக்கிறார்; கேட்டுக் கொள்ளுங்கள்!" என்று "எங்கப்பா குதிருக்குள் இல்லை" என்ற பழமொழியின் நியாயமாகச் செட்டியாரைக் காட்டிவிட்டான். செட்டியார் என்றால் கள்ளர்களுக்குக் களிப்புண்டாக்கும் ஆத்மாவாயிற்றே. அதைக் கேட்ட பிறகும் அவர்கள் சும்மா போவார்களா? செட்டியாரிடம் உடனே சென்று அவரை நன்றாய்ப் புடைத்து அவரிடம் என்ன இருக்கிறதென்று பார்த்தார்கள், அவர் இடுப்பில் மொகராக்கள் நிறைய இருக்கக்கண்டு அவ்வளவையும் எடுத்துக்கொண்டு போனார்கள். அற்ப சிநேகம் பண்ணியதில் செட்டியாருக்குப் பிராண சங்கடம் ஏற்படாமற்

கண்டித்து வண்டி வாடகை அதிகம் கேட்பதைவிட உங்கள் பிரியம் போல் கொடுங்கள் என்பதில் அதிக வசீகர மிருக்கிறது. —காரியமும் கனியும்.

போனாலும், பிராணனுக்குமேல் விலைபெற்ற மொகராக்கள் முற்றிலும் போயின. ஆகவே, அற்ப சகவாசம் என்றைக்கும் பிராண சங்கடமே.

198　"மலையை மலை தாங்கும், மண்ணாங்கட்டி தாங்குமா?"

பெரும்பான்மையான வீடுகளில் புருஷனும் மனைவியும் அவர்களைச் சேர்ந்த சிலருமாக அவ்வளவோடு குடித்தனமாக இருப்பார்கள். அவர்களுக்குள்ளாகவே தின்றுவிட்டுக் காலங் கழிப்பார்கள். அவர்கள் வீட்டுக்குப் பிறரும் போகார்; அவர்களும் பிறருக்கு இடார்கள். செட்டான செலவில் காலணா கீரையை ஆக்கி வைத்துக்கொண்டு சாதத்தை விழுங்கிப் பொழுதைக் கழித்துவிடுவார்கள். இத்தகைய செட்டுக்காரர்களில் ஒருவன் தனது நண்பனின் ஊருக்குப் புறப்பட்டுச் சென்றான். அந்த நண்பனோ சொல்ப சம்பாத்திய முள்ளவன்தான். ஆனாலும், அவன் வீடு வருவார் போவாருக்கெல்லாம் பசிதீர உண்டு உறங்கிச் செல்லக் கூடிய ஆதரவான ஸ்தானமாயிருந்தது. அடிக்கடி எவராவது வந்துகொண்டே இருப்பார்கள். அந்த நண்பனும் முகம் சுளிக்காமல் வந்தவர்களைத் தங்கள் சொந்த வீடுபோல் இருந்து தங்கிப் புசித்துப் போகும்படி உபசாரம் செய்வான். அதில் ஒரு சந்தோஷமும் பட்டுக்கொள்வான். அவனுக்கு வருமானம் சொற்பமாயிருந்தாலும் மலையை மலைதாங்குவதுபோலக் கடவுளும் அவனைத் தாங்கி வேறு சில வருமானங்களும் கிடைக்கச் செய்து அவன் செலவுகளைச் சரிகட்டிவர அநுக்கிரகம் செய்துவந்தார். செட்டுக்காரன் ஒரு வாரம் வரையில் நண்பன் வீட்டிலிருந்துவிட்டுத் தன் ஊர் வந்ததும் நண்பன் வீட்டைப் போலவே தன் வீட்டையும் நடத்த எண்ணினான். இரண்டொருநாள் வருவார் போவாருக்கு இட்டு உபசரித்தான். அவன் இப்பொழுது குணம் மாறித் தாராளமாயிருக்கிறானென்று வேறு சிலரும் அவன் வீட்டுக்குள் விருந்தினராக வந்தார்கள். தற்செயலாக அந்த நண்பனே வந்து மூன்று நாள் தங்கும்படியாய்விட்டது. இவனால் பொறுக்கக் கூடவில்லை. முகத்தைச் சுளித்துக்கொண்டான். வந்த நண்பனும் ஜாடை கண்டு சிரித்தபடி ஊருக்குப் புறப்பட்டுவிட்டான். அவன் சென்றதும், இவன் மறுநாள்முதல் தெருவாயிற்படியை மூடிவிட்டு ஊருக்கு உபசரித்தது போதுமென்று நிறுத்திவிட்டு, வீட்டுக்கு வந்தவர்களைச் சிடுசிடுத்து அனுப்புவதானான். வந்தவர்களும் இவனுடைய தாராள வாழ்வு தீர்ந்துவிட்ட தாக்கும் என்று ஒதுங்கிவிட்டனர். ஆகவே, அற்பன் தன் யோக்கியதைக்குப் பொருந்தாத காரியத்தை எடுத்துச் செய்ய முயன்றாலும் கடைசியில் அது முடியாமலே போய்விடும். அவனுடைய அற்ப குணம் சீக்கிரம் வெளிப்பட்டுவிடும் என்பது கருத்து. மலையை மலை தாங்கும். அது போல் பெருந்தன்மையான பெரிய குண உயர்வு கொண்டவர்கள் எதையும் சமாளித்துத் தாங்கும் பொறுமையைக் கைக்கொண்டு புகழப்படுவார்கள். மலையை மண்ணாங்கட்டி தாங்காததுபோல் அற்பர்கள் தாங்கள் பெரிய தன்மையைக் காட்ட முயன்றாலும், தங்களின் அல்ப புத்தியை முடிவில் காட்டிவிட்டு அவமானப்படுவார்கள்.　　(தோடநம்.)

செவ்வாய்க்கிழமை யென்று எண்ணாமல் ரயில் ஏறிச்சென்றவன் சுகமாய் ஊர்போய்ச் சேர்ந்தான். நல்லநாளாய் புதன்கிழமை புறப்பட்டவன் 1916-ம் வருஷத்தில் புயல்காற்றில் ரயில்வண்டி பாக்கம் ஸ்டேஷனில் விழுந்துவிடத் திண்டாடினான். நல்ல நாள் பார்த்த பஞ்சாங்கத்தினுடைய லக்ஷணமிது!



பெரியாரின் மொழிகள்



(294-ம் பக்கத் தொடர்ச்சி)

552. Those friends thow hast, and their adoption tried, Grapple them to thy soul with hooks of steel; But do not dull thy palm with entertainment. Of each new hatch'd unfledged comrade. SHAKESPEARE.

உன்னுடைய சிநேகிதர்களின் நடவடிக்கைகளை நன்றாகக் கவனித்துப் பின்பு அவர்களை உன் மனதோடு இரும்புக் கம்பிகளைக்கொண்டு கட்டுப் படுத்துவாயாக. ஆனால் புதிதாக வந்த அதிக பழக்கமில்லாத அறிமுகமானவர்களுக்கெல்லாம் விருந்தளித்து வீண் செலவு செய்யாதே.

—ஷேக்ஸ்பியர்.

553. The friendships of the world are oft confed'racies in rice, a leagues in pleasure.

ADDISON.

உலகத்தின் சிநேகிதங்களெல்லாம் அநேகமாகத் தீய செயல்களின் கூட்டுறவுகளாகவோ, அல்லது இன்பத்தைப் பயக்கும் சங்கங்களாகவோ இருக்கின்றன. —அடிஸன்.

P. G. குலசேகரன்.

II

554. Love is Sunshine, hate is shadow, Life is checkered shade and sunshine; Rule by love. LONGFELLOW.

அன்பு சூரிய வெளிச்சம் போன்றது (உயிரளிப்பது). அப்பியம் அந்தகாரம் ஒத்தது (கேடு சூழ்வது). வாழ்க்கையோ இன்பமும் துன்பமும் கலந்து பரிணமிப்பது. (எனவே,) அன்பினால் ஆட்சி செய். லாங்பெலோ.

555. Think and speak and act like an accountable creature.

DICKENS.

எண்ணம், வாக்கு, செய்கை இம் மூன்றிலும் பொறுப்பாய் நடந்து கொள். டிக்கன்ஸ்.

556. The means that heaven yields must be embraced, And not neglected. SHAKESPEARE.

தெய்வ கிருபையாய் ஏற்படும் வழிகளை அலக்ஷியம் செய்யாது பயன் படுத்திக்கொள்ளவேண்டும்.

ஷேக்ஸ்பியர்.

557. So long is Time is, is Atonement. LONGFELLOW.

காலம் உள்ளவரை, செய்துவிட்ட பிழைகளைக் குறித்து வருந்திக் கடைத்தேற வழியும் இருக்கின்றது.

லாங்பெலோ.

558. May mercy be showed to me as I show it to others.

DICKENS.

இதர ஜீவர்களிடம் நான் காட்டும் இரக்கம் எனக்கும் கிடைப்பதாக!

டிக்கன்ஸ்.

அவர்கள்மீது உனக்கு எவ்வளவு ஆசை வைத்தாலும் அவர்கள் ஒன்றுபடாமல் மேலும் மேலும் கலகநெருப்பை வளர்த்துத் தூரச் செல்கிறார்கள்.

559. We do pray for mercy, And that Same prayer doth teach us all to render, The deeds of mercy. SHAKESPEARE.

பிழை பொறுத்து அருளவேண்டுமாய் நாம் பகவானைப் பிரார்த்திக்கிறோம். இந்தப் பிரார்த்தனையே நம்மையும் தயை உள்ளவன் ஆகக் கற்பிக்கிறது. ஷேக்ஸ்பியர்.

560. You can't make a head and brains out of a brass knob with nothing in it. DICKENS.

சரியான சாதனமின்றி எதையும் உருப்படுத்தல் அசாத்தியம். டிக்கன்ஸ்.

T. R. ஸ்ரீநிவாஸன் B. A.

III

561. God gives birds their food, but they must fly for it.

பறவைகளுக்குக் கடவுள் உணவளிப்பது திண்ணம்; ஆனால், அதைப் பெறுவதற்கு அவை வெளியில் பறந்து செல்லவேண்டும்.

562. It matters not how a man dies, but how he lives.

ஒரு மனிதன் எவ்விதம் இறக்கிறான் என்பது முக்கியமல்ல; அவன் எவ்விதம் வாழ்ந்தான் என்பதையே கவனிக்கவேண்டும்.

563. Never mind who was your grand father. What are you?

உனது முன்னோர்கள் இருந்தது எவ்வாறாயினும் ஆகுக. நீ எவ்விதம் இருக்கிறாய்?

564. Catch not at the shadow and lose the substance.

நிழலை (தோற்றத்தை)ப் பிடித்துக் கொண்டு, வஸ்துவை (உண்மையை) விட்டுவிடாதே.

565. To lose a friend is the greatest of losses.

ஒரு நண்பனை இழப்பதே மிகப் பெரிய நஷ்டமாகும்.

R. இராமகிருஷ்ணன் M. A.

கலகத்தின் முக்கிய விசையைக் குறைத்துவிடு.

வீட்டுக்குள்ளே ஒரு சண்டை. அந்த இடத்திற்கு நம்மை ஒருவர் அழைக்கிறார். நாம் அங்கேபோய் இதென்ன கூச்சலென, நம்மை யழைத்தவர்—யாராலேவந்த கூச்சல்—என்று கோபமாய் நமது முகத்துக்கெதிரே கையைக் காட்டுகிறார். உடனே நாம் சும்மா கிடந்த என்னை வீணில் அழைத்துவந்து இவ்விதம் காட்டுவானேன்?—கலகம் தானே யடங்கித் தொலையட்டும், என் இடத்திற்கு மறுபடியும் போய்விடுகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டால், நம்மை அழைத்துச் சென்ற கலகப்பிரியர் ஏமாறி கலகம் செய்ய வழியின்றி அடங்கிவிட, கலகமும் பிறகு ஓய்ந்துவிடுகிறது. நாம் சம்பந்தப்படும்போதுதான் கலகத்துக்கு விசை அதிகரிக்கிறது. எப்பக்கமும் சேராமல் நாம் தூர இருந்துவிட்டாலோ பல்லுப்போன பாம்பாகிவிடும்.

திண்டாட்டத்தின் ஆட்டம்!



ஆட்டம்—பாட்டம் நாட்டம்—கோட்டம்—கூட்டம்—நீட்டம் எல்லாம் ஓட்டமாகி வாட்டம் வரும் வேளையில் திண்டாட்டம் நெருங்கித் திக்குமுக்காடக் கழுத்தைத் திருகுதல் செய்கிறது அய்யனே! தோல்வாயனுகிய விகடன் என் கோல் கையைக் கொண்டு அதன் வால் வகையையும் சேர்த்து மேல்இருந்து கீழ்வரையும் அளந்துபிளந்து எழுந்து பார்த்ததில் என் கருத்திலே விழுந்ததை இங்கே தீட்டி நீட்டிக் காட்டுகிறேன். கேட்டுக் கொள்ளுங்கள்! ஃ

திண்டாட்டத்தின் சங்கதி ரொம்ப ரொம்ப பெரிசு அப்பா! கோர்ட்டுக்குப் போய் ஆழந் தெரியாமல் காலையிட்டுக்கொண்டு, கையிலுள்ள துட்டு துக்காணிகளெல்லாம் அங்கே அழுதுவிட்டு, தாலிக் கயிற்றி லிருப்பதைக்கூட உரிந்து உரிந்து விற்கும்படியான திண்டாட்டம் என்ன ஒரு லேசா! 10-ரூபாய் வசூலுக்கு 100 ரூபாய் கோர்ட்டுச் செலவு செய்துகொண்டு திண்டாடுதல் கொஞ்சமா? ஃ

புதுக் கலியாணம் கட்டிக் கொள்ளுகிற சிறுமியும் சிறுவனும் தனி சமுசாரம் பண்ணிக்கொள்ளலாமென்கிற அற்ப புத்திகொண்டு, இந்தண்டை அண்ணன் தம்பி, அந்தண்டை மக்கள் மனுஷரையெல்லாம் உதறிப்போட்டு அவர்களைப்பிரிவினைபடுத்திக்கொண்டு, யாருடைய ஒட்டு உறவும் வையாமலும், வீட்டண்டையே சேர்க்காமலும் ஒதுங்கிக்கொண்டுவிட்டு, பின்னாலே தங்களுக்கே ஒவ்வொரு நோய் நொடி ஆபத்து நேர்ந்துவிட்ட காலத்து, இவர்களை வந்து எண்டியம்மா, ஏண்டா தம்பி என்று எட்டிப் பார்க்க எவருக்குமே மனம் வராமலே போய்விட, இவர்களும் அவர்களின் சகாயத்தைக் கோர வாயில்லாமலும், ஒண்டி ஓரியாக ஒரு வெந்நீர் தண்ணீர்கூட வாயில் வார்க்கத் திக்கில்லாமலும் தங்களுக்குத் தாங்களே திண்டாடுகிற திண்டாட்டக்காரர்கள் எவ்வளவோ உண்டல்லவா? ஃ

கோட்டம் - அநீதம், அழுக்காறு. பாட்டம் - பலகாரம். நாட்டம் - நோக்கம், விருப்பம். வாட்டம் - குறைவு, சாய்வு, திருகுதல் - திருப்பி முறித்தல்.

அப்பன் வைத்துச் செத்த சொத்திலே கொஞ்சம் துட்டு கையிலிருந்தால், அதற்கேற்றபடி சிறு வியாபாரங்கள் நடத்திச் சொற்ப சம்பாதனையால் காலத்தைத் தள்ளலாமென்றில்லாமற்படி ஜெகப்புரட்டர்கள், ஊர் புரட்டர்களின் ஆகாசக் கோட்டைப் பேச்சை நம்பியும் அவர்களின் துணைகொண்டும் பெரும்பெரும் வியாபாரங்களெல்லாம் செய்யலாமென்று தடபுடலான ஏற்பாடுகளெல்லாம் செய்து கொண்டு, கையிலுள்ள துட்டு துக்காணியும் துடைத்துக்கொண்டு, கடனும் தலைமேலேறிக்கொண்டு நடு வீதிக்கு வருகிற திண்டாட்டக்காரர்களையும் கண்டிருக்கலாம்!

ஃ

இன்னொரு திண்டாட்டக்காரர்கள் யாரையா? பெரிய கண்டிராக்ட் எடுத்து வேலை தொடங்கி, அதைச் சரியாய் நிறைவேற்ற முடியாமல் குறைபட்டுப் போகிறவர்கள்தான்! கொஞ்சம் துட்டைக்கொண்டு பெரிய வீடு-பங்களா கட்டிக்கொள்ள எண்ணி உள்ள துட்டெல்லாம் இழுத்துக் கொண்டபிறகு, அரைவாசிக் கால் வாசிக் கட்டடத்திலேயே வேலை நிறுத்த முண்டாகிப்போய், 'முட்ட முடியக் கட்டடம் நிறைவேற என்ன செய்கிறதப்பா? எங்கே கடன் கேட்கலாம்' என்று ஏங்கித் திரிந்தும், அல்லது கட்டுகிற வீட்டையே அடமானம் வைத்து இன்னும் பணத்தைக் கொல்லத்துக்காரனுக்கும் தச்சனுக்கும் சிற்றாள்களுக்கும் அழுதுகொண்டு அல்லாடுகிற திண்டாட்டக்காரர்களும் எத்தனை எத்தனையோ!

ஃ

வேறொரு திண்டாட்டக்காரர்களின் சங்கதியிருக்கிறது. இது என்ன திண்டாட்டம் என்று கேட்கிறீர்களோ? உங்களுக்கும் உண்டு, உங்கள் அப்பன் பாட்டன் முப்பாட்டன் பாட்டிகளுக்கும் உண்டு. என் அப்பன் பாட்டனுக்கும் உண்டு. வீரன், சூரன், படித்தவன், படிக்காதவன், சாஸ்திரி, சூஸ்திரி, கலைக்கியானி, காலக்கியானி முதலான அனைவர்களுக்கும் உண்டு. ஒவ்வொருவரும் இந்தத் திண்டாட்டத்தில் ஈடுபட்டே தான் தீரவேண்டி யிருக்கிறது. வேண்டாமென்றால், அதிலும் பெண்ணுக்கு விடவே மாட்டார்கள். வேண்டாம் என்பவர்களும் ஈடுபடாமல் இருக்க முடியாது. அது ஈடுபடுவதற்கு அவங்கப்பனை இழுத்துவிட்டுக் கொண்டே, தூண்டுதல் போட்டுக் கொண்டே யிருக்கும். தங்களுக்குத் தாங்களே இதில் ஈடுபட்டுக் கொள்கிறதுமுண்டு. பெற்றோர் பிறந்தார் இதில் இழுத்துவிட்டு மாட்டி விடுகிறது அவர்களின் தலைமேல் விழுந்த பாரமாய்க் கொண்டு நடத்திவிடுகிறதும் உண்டு. அப்படிச் செய்யாமற் போனால் அது பாபமென்றும், அந்தத் திண்டாட்டம் சாமி செய்துவைத்த ஏற்பாடென்றும், வேதக் கட்டளையென்றும் சொல்லிக்கொள்ளுகிற திண்டாட்டம் அது. என்னதான் அவ்வளவு மகத்துவமான திண்டாட்டம் அது என்கிறீர்களோ—அது புருஷன்—பெண்ஜாதி என்கிற திண்டாட்டம்தான்! கொள்ளுகிறவரையில் கொண்டாட்டம்! கொண்ட பிறகு திண்டாட்டம் என்கிற பழமொழியும் இதற்குத்தான் சொல்லி யிருக்கிறது!

ஃ

சமுசாரங்களிலே திண்டாட்டம் எப்பொழுதும் உள்ளதுதா னென்றாலும் வெளிக்குத் தெரியாத ஒரு முக்கிய திண்டாட்டம் இருக்கிறது! அது

கொடுத்த வீட்டுவாடகைக்கு ரசீது வாங்கிப் பத்திரப்படுத்துவது நல்லது. வாடகை தரவில்லை யென்னும் அயோக்கிய வீட்டுக்காரர்களுமுண்டு.

தான் முக்கிய சங்கதி. அதாவது, அந்தாங்கம்—வெளியாங்கம், அகப் பொருள்—புறப்பொருள், உள்நோய்—வெளிநோய், உள்நாட்டம்—வெளி நாட்டம் இவைபோல்வன ஒவ்வொன் றிலும் இரண்டிரண்டு தன்மைகள் இருக்கின்றன. இதிலே வெளிப்படை யான இல்வாழ்வில் சண்டை, சச் சரவு, வீண்செலவு, விரோதம், வாழ்வு, சாவு முதலியவைகளில் வாக்குவாதம், கொள்ளல், கொடுத்தல் முதலிய திண்டாட்டங்கள் இருக்க, இதிலே உள்வாழ்வான அந்தரங்க திண்டாட் டங்கள்தான் பெரிது! பெரிது! கஷ் டம்! கஷ்டம்! அந்த அந்தரங்க திண்டாட்டந்தா னென்ன வென் ருலோ, ஸ்திரீ புருஷ சம்பந்தத்தில் 'ஊடல்' என்கிற ஒரு தத்வ முண்டு. இதில்தான் அநேக தப்பும் கேடுகளும் நேரிடுகின்றன, ஸ்திரீ புருஷ பந்தத் தில், அதாவது விவாகம்—மணம்—கல்யாணம்—என்று மாப்பிள்ளைக் குப் பெண்ணை ஏற்படுத்துவதில் பத்துவித பொருத்தங்கள் பார்க்க வேண்டுமென்பதும், அதில் எவ் வளவோ சகிர்தம் இருக்கிறதென்ப தும் கவனிக்கப்படாமலே போய், அந்தஸ்து, பணம், படிப்பு, வித்தை இதைப் பார்த்துக்கொண்டு, ஏதோ லக்கனம், ராசி, நக்ஷத்திரம் மாத்திரம் பஞ்சாங்கக்காரன் சொல்வதைக் கொண்டு மேளதாளங் கொட்டி மண முடித்துப் போடுகிருர்கள்! பிறகு தான் இருக்கிறதையா திண்டாட்டம்!

ஃ

இப்படி மணமுடித்துக் கொண்ட வர்களிற் சிலர் அந்தரங்கத்தில் படும் திண்டாட்டம் மெத்த மெத்த! சில சம்பந்தத்தில் ஸ்திரீ ராக்ஷஸகணம், புருஷன் தெய்வகணமா யிருந்தால் இவ்விரண்டு கணத்திற்கும் ஒவ்வாமல் திண்டாடுகிருர்கள். சில இடங்களில் ஸ்திரீ புருஷர்களின் தேக வாசனை யானது முடைநாற்றம், கொக்குக் கவுச்சி, மிருக நாற்றம், பறவை நாற் றம், பிணவடி, கற்ருழை நாற்றம், பாக்குவாசனை, பச்சைப்பயிறு நாற் றம் கொண்டிருப்பதால் இதனுலும் ஒருவருக்கொருவர் நெருங்கிச்சயனிக் கச் சகியாமல் திண்டாடுகிருர்கள். வாய் நாற்றம் சகிக்க முடியாமலும் விலகுகிருர்கள். இதனுலேயே ஒரு வரைவிட் டொருவர் வெகு சீக்கிரத் தில் பிரிந்துபோய் வேறு புருஷர் வேறு ஸ்திரீகளின்மீது கண் போடும் படியும் ஆகிவிடுகிறது! இதற்காகத் தான் ஸ்திரீகள் மஞ்சள் குளிப்பதும், புருஷர் சாந்து சந்தனம் ஜவ்வாது முதலிய வாசனைகளைப் பூசிக் கொள் வதுமான வழக்கத்தை முன்னோர்கள் ஏற்படுத்தி வைத்திருக்கிருர்கள்! வாய் நாற்றத்தை அந்தச் சமயம் போக்கிக் கொள்ளவே வாசனைப் பாக்குத் தாம்பூலம் மடித்துக் கொடுக்க வும் செய்திருக்கின்றனர். மஞ்சள் குளிப்பதில் மேற்படி துர்நாற்றங்களை மூடிக்கொண்டுபோவதும் நிவர்த்தி யாவதும் உண்டு. மஞ்சள் பூசும் ரக சியம் வீணுக்கல்ல. அது பெரிய வசிய சங்கதி.

ஃ

சில இடங்களில் ஆண்-பெண் தன்மைகளில் பொருத்த மின்றியும் திண்டாடுகிருர்கள்! சில இடங்களில் இன்பசுகம் இருவர் மனதிற்கும் சரிப் பட்டுத் திருப்தி கொள்வதற்கில்லாம லும் திண்டாட்டம்! சில இடங்களில் புருஷன் சரியான ஆண் மகனைப் போலவே தோன்றினபோதிலும் உள்

ஆனி-ஆடிமாதம் வீட்டைவிட்டு வேறிடம் குடிபோகக்கூடாதாம். இந்த சாஸ்திரங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிறவனுக்குப் பிழைப்பு கெட்டுப்போவதே லாபம். சாஸ்திரம் அதிகம் பார்ப்பதில் சஞ்சலமே மிகுதி.

தத்துவத்தில் புருஷத்வம் அற்றவனாக இருக்கிறான். அதை நபும்ஸகம் என்று சொல்லப்படுகிறது. அதனாலும் திண்டாடுகிறார்கள். இது மிக மிகப் பரிதாபமான கண்ராவியான புலம்பத்தக்க திண்டாட்டம்! அப்படியே ஸ்திரீகளிலும் சிலர் எப்போதும் ருதுவாகாமலே போய்விடுகிறார்கள்! இவர்களை அலிபிறப்பு என்று சொல்லப்படுகிறது. இத்தகையோருக்கு **ஸ்திரீ சிருங்காரம்** என்கிற கடவுள் அருளிய தத்துவம்—அதாவது ஸ்திரீயின் கை ஆடவன்மீது பட்டவுடனே அவன் தேகம் மின்சாரசக்தி பாய்வது போல் பரபரவென்று ஊடலுண்டாகி ஆவல் தோன்றச் செய்வதுதான்—இந்த சிருங்காரம் பெண்ணிடம் இல்லாது போயிருப்பதைக் கண்டு திண்டாடுகிறார்கள்! சில நங்கையர் ஆண்மாரிகளாய் பெண்களுக்குரிய நாணம் முதலிய யோக்கியதைகளே அற்றுக் கிடப்பதில் அவர்களை மணந்த ஆடவர்கள் திண்டாடுகிறார்கள்! சில இடங்களில் புருஷன் அக்கினி சம்பந்தமுடையவனும், ஸ்திரீ வாயு சம்பந்தமுடையவளுமாக இருந்தால் ஒருவருக்கொருவர் தேகம் பொருந்திக் கொள்ளாமல் அதனாலும் திண்டாடுகிறார்கள்! சில இடங்களில் வாழை மலடு, காக்காய் மலடு, பேய் மலடு முகாந்தரத்தால் திண்டாடுகிறார்கள்!

ஃ

சில இடங்களிலே கிழமாப்பிள்ளைகள் சின்னஞ் சிறுமிகளை விவாகம் செய்துகொண்டு அச்சிறுமிகளுக்கு விவாகசுகம் கிட்டாமல் அவர்களும் நடத்தை தவறிப்போக, அதனாலும் திண்டாடுகிறார்கள்! சில இடங்களில் மூத்த மனைவியருடைய மகன்களிடம் இரண்டாந்தார மனைவிகள் சிக்கிக் கொண்டு ஆசைக் கண்ணாட்டிகளாய் விடுவதால் அதனாலும் அவளை மணந்தவர்கள் திண்டாடுகிறார்கள்! திமிர் கொண்டமாமியும் மருமகனும் நடந்து கொள்ளுகிற நடத்தையாலும் திண்டாடுகிறார்கள்! சில இடங்களில் ஆடவனுக்குள்ள ரோகம் ஸ்திரீக்குத்தெரியாமலும், ஸ்திரீக்குள்ள ரோகம் ஆடவனுக்குத் தெரியாமலும் ஒருவருக்கொருவர் கோபித்துக்கொண்டு திண்டாடுகிறார்கள்! சில இடங்களில் கற்பழிந்துபோன பெண்களை எப்படியோ தெரியாமல் கல்யாணம் கட்டிக்கொண்டு அதனாலும் உள்ளுடைந்து திண்டாடுகிறார்கள். கர்ப்பத்திலுள்ளது தன் குழந்தைதானா என்று சந்தேகம் ஏற்பட்டுக்கொண்டு அதனாலும் திண்டாடுகிறார்கள்! சிலர் பகிரங்கத்தில் தன் மனைவியை விபசாரி என்று தூற்றி நகைக்கவிட்டு, பின் ஏன் வெளியில் சொன்னோம் என்று வாதனைப் பட்டுக்கொண்டும் திண்டாடுகிறார்கள்! வீட்டில் செல்வாக்கில்லாத புருஷனைக் கட்டிக் கொண்டு மற்றவர்களின் அதிகாரத்திற்கெல்லாம் உட்பட்டு புருஷன் மீதும் வெறுப்பாகித் திண்டாடுகிறார்கள்! சில பெண்கள் தமக்கை புருஷனாலோ, அத்தை மகனாலோ கெட்டுப் போய் அவன் எண்ணமே நெஞ்சில் ஊன்றியிருக்க, அது கிடைக்காமல் வேறு இடத்தில் வேறு புருஷனுக்கு வாழ்க்கைப் படப்போய் அதனாலும் திண்டாடுகிறார்கள்! சில இடங்களில் மனைவி தன்மீது பிரியமில்லாமற் கிடப்பதைக் கண்டு அவள்மீது சந்

பிறர் வீட்டிலேயே உண்டுவிட்டுத் தங்களின் குழம்பு சோறு மிச்சமாகும்படி செய்கிறவர்களை எந்த நாளிலும் தரித்திரத்திலேயே ஊறிநிற்கும்படிக் கடவுள் செய்துவிடுகிறார். தாராளமாகச் செலவிட்டவர்கள் என்றைக்கும் தாராளத் தன்மையுடனேயே தங்கள் காலத்தை முடித்துவிடுகிறார்கள்.

தேகமே கொண்டு அதனாலும் திண்டாடு கிறார்கள்! சில இடங்களில் மனைவியலா வீணில் அடித்துப்போட்டுத் தூத்திவிட்டு, பிறகு அவளை நினைத்துக்கொண்டு அதனா லும் திண்டாடுகிறார்கள்! ஸ தி ப தி க ள் இருவரிலும் ஒருவர் மரித்துப் போவதி லும் காலமுழுதும் திண்டாடுகிறார்கள்! ஆடவர்கள் அடிக்கடி வெளிநாடு போய் விடுவதில் அதனாலும் பெண்கள் திண் டாடுகிறார்கள். வி வா க மே யில்லாமல் வெகுகாலம் காத்திருப்பவர்களும் இன் னொருபக்கம் திண்டாடுகிறார்கள்! போதும் போதும்! வி க ட ன் இவ்வளவுடன் திண்டாட்டத்திற்குக் கு ம் பி டு போட்டு நின்றுகொள்கிறேன். திண்டாட்டங்களைத் தெரிந்து கொண்டு திண்டாட்ட மில்லாத வழியில் கொண்டாட்டம் போடுங்கள்! ராம்! ராம்! சுபம்! ஞ!! சுவாஹா!!!

அவர்
களின் வீட்டில்
நீ உண்பது வரு
ஷத்திற்கு ஒரு
முறையாகவும், அ
வர்கள் உன் வீட்
டில் உண்பது வா
ரத்தில் பல நாளா
கவும் இருக்கும்படி
உன் வாழ்க்கையை
ஒருமதிப்பாக
நடத்து

சொல்வார் வார்த்தையில் சிக்கிக் கெடுவது.

பிறர் சொல்லைக் கேட்கும் புத்தி தனது சொந்த புத்தியை இழந்துவிடுகிறது. வாங்கிய கடனை நாணயமாய் நாலுமைல் தூரத்திலுள்ள இடத்திற்கு மணியாடர் செய்து விடப் போகும்போது, அருகிலுள்ளவர் இவ்வளவு சமீபத்தி லிருக்கிற இடத்திற்கா மணியாடர் செய்வது—நேரில் போய்த் தந்துவிடலாமே யென்கிறார். பிறகு போவதற்குக் கூடாமலாகிவிட, அந்தப் பணமும் செலவாகிப்போக, எதிர் பாராதபடி கடன்தந்தவரே வந்துவிட, என்ன ஐயா இன்னுமா பணம் அனுப்புகிறீர் என்று கேட்க, மணியாடர் செய்ய இருந்தேன் என்று இவன் கூற, அவர், சரி, பணம் இப்போதாவது கொடும் என, இவன் தற்சமயம் பணம் இல்லையென, அதற்கு அவர் நேரில் வந்தும் தராத நீரா யோக்கியமாய் மணியாடர் செய்ய எண்ணினீர்—என்று இகழ்ந்து பேசிக் கண்டிக்க, இவ்வளவு பாடும் தொல்லையும் சொல்வார் வார்த்தையைக் கேட்டதிலிருந்தும் நேர்ந்த சங்கதி. அன்றே மணியாடர் செய்திருந்தால் நல்லது.



ஆடுகிற மேஜையும், ஆட்டங் கொடுக்கிற கட்டிலும், ஆடும் பல்லும் காரியத்திற்குப் பெரிய தடையாகுமாம்!

ஃ

தான் ஒரு உதவி கேட்காமலும், பிறர் கேட்டதை எல்லாம் தந்து கொண்டும் இருக்கும் வரையில்தான் நட்பாம்! உறவாம்! பல்லிளிப்பாம்!

ஃ

ஒப்பாரிக்கு வைத்துக் கொள்ளுகிற உறவுகள் பிறகு ஏமாறச்செய்து ஒப்பாரிவைத்து அழும்படியே அழுகிப்போய் முடியுமாம்!

ஃ

எத்தனை சோப் தேய்த்துக்குளித்தாலும், அவரவர்களின் தேக வீச்சு நாற்றம் அவர்களின் உடையில் எறிவிடுமாம்! ஃ

துரோகம் செய்ய வேண்டியது தன்னை நம்பியவர்களுக்குத்தானும்! ஆனால், வெளிக்கு மட்டும் விசுவாசப் பூனைபோல் காட்டவேண்டுமாம்!

ஃ

அதிகமாகக் குலாவுகிறவன்தான் மெதுவாகத் தட்டிக்கொண்டு போகிற தங்கக்கம்பியா யிருப்பானும்!

ஃ

மூளைக்கையிலேயே வஞ்சகக் குட்டிகளானவர்கள்குள்ளமாய்த்தான் போவார்களாம்! ஃ

கருப்புராணியம்மா அவன் ஆயுசிலே சிவப்புக்குட்டி போடுவது பஞ்சமாயும் அபூர்வமாயும் இருக்குமாம்!

ஃ

இலவசத்திலேயே நக்கிப் புஸ்தகத்தின் முதுகு பக்கத்தையும் மூலைகளையும் கெடுத்துப் படித்துவிட்டுக் கொடுத்துவிடுகிற புள்ளிகளில் ஒரு 200-பேர் விகட சபைக்கு வேண்டுமாம்! ஃ

பிறருக்கு முன் அன்பில் ஏமாறிக் கொடுத்துவிட்ட புஸ்தகங்களை இரவலில் படிக்கக் கேட்டாலும் ஏழேழு ஜென்மத்திற்கும் கிடைக்காதாம்!

ஃ

சாப்பிட்டுவிட்டுப் போங்கள் என்கிற உபசாரமெல்லாம், அங்குப் புசிக்காத வரையில்தானும்! அல்லது, அவரவர்களுக்கு ஆகவேண்டிய அவசர காரியம் இருக்கும்போதுதானும்!

ஃ

ஒரு குட்டி போட்டவுடன் அப்பனையும் அம்மாவையும் பிரித்துவிட்டால்தான், மறுபடியும் குட்டிபோட்டு வீட்டுச் சொத்தைக் கெடுக்காமலிருப்பார்களாம்! ஃ

எலியும் பெருச்சாளியும் இல்லாத வீடு பாவம் செய்த விடியாதவீடாம்!

ஃ

இங்கேயே மூட்டுப்பூச்சி, கொசு, ஈ முதலியவற்றின் தொல்லைகளைப் பட்டுவிட்டால்தான் நாளைக்கு நரக வாதனை ஒரு கஷ்டமாகப் படாமல் தேறலாமாம்! ஃ

எவன் இலவசத்திலேயே விழுங்குகிறானே, படிக்கிறானே அவன்தான் புத்திசாலியாம்!

ஒருவனைக் கெஞ்சிக் கடன் வாங்கி வந்தால் அந்தப் பணத்தில் கடன் வாங்கிப்போக ஒருவர் வருகிறார். அப்போது நம்மிடமிருந்து அவருக்குத் தரத்தான் வேண்டுமென்று கடன் வாங்கித் தந்தவர் பிறகு ஜாடையாக ஒதுங்கி விடுகிறார். கடன் பெற்றோரும் தராமல் மௌனமாயிருந்துவிட, பிறகு நாம் அவர்களைத் தேடிச்சென்று கேட்கவேண்டியிருக்கிறது. இது வீண் தொல்லை.

பதங்களின் சேர்க்கை

(முன்பக்கம் 317-லிருந்து.)

73. சமர்த்தன், (சம — மிகவும்) + (அர்த்தன் — பயனடைந்தவன்) வல்லவன்.

74. சமாதானம், (சமம்—ஒற்று) + (ஆதனம்—இருக்கை) கலக்கமின்மை.

75. சமானஸ்தர், (சமானம்+ஒற்றுமை) + (ஸ்தர்—இருப்பவர்) ஒத்தவர்.

76. சண்பகாவதி, (சண்பகம்—ஓர் புஷ்பம்) + (வதி—இடம்) சண்பகப் புஷ்பங்க ளிருக்கப்பட்ட இடம்.

77. சம்பாஷணை (ச—கூடு)+(பாஷணம்—பேச்சு) கூடிப் பேசுகை.

78. சம்பாதி, (சம்—மிகவும்)+ பதி or பாதி—அடை) தேடு.

79. சர்வார்த்த சாதனம், (சர்வம்—அனைத்தும்) + (அர்த்தம்—பொருள்) + (சாதனம் —உறுதிப் பத்திரிகை) முற்றிலும் பொன்மயமான சாதனம் போன்றமை.

80. சலக்கிரீடை, (சலம்—நீர்)+ (கிரீடை-விளையாட்டு) நீர்விளையாட்டு.

81. சலசரம், (சலம்—நீர்)+(சரம்—அசைவு) மீன்.

82. சலபாதை, (சலம்—நீர்) + உபாதை—தொந்தரவு) சிறுநீர் தொந்தரை.

83. சலபானம், (சலம்—நீர்) + (பானம்—குடித்தல்) நீரருந்தல்.

84. சற்குணம், (சற்—நன்மை) + குணம். இனிய குணம்.

85. சற்பாத்திரம், (சற்—நன்மை)+ பாத்திரம். ஒழுக்கமுடையோன்.

86. சாஷ்டாங்கம், (ச—கூட) + அஷ்டம்—எட்டு)+(அங்கம்—உறுப்பு) தெய்வ வணக்கம்.

87. சார்வ பௌமம், (சர்வம்—எல்லாம்) + (பூமி—உலகம்) ஒருவனைப் பணியாது உலகாள்வோன்.

88. சிங்காதனம், (சிங்கம்—மிருகராஜன்) + (ஆதனம்—பீடம்) அரச ரிருப்பிடம்.

89. சித்திரக் கிரீவன், (சித்திரம்—அழகு) + (கிரீவம்—கண்டம்) அழகான கழுத்தை யுடையோன்.

90. சித்திராங்கன், (சித்திரம்—அழகு) + (அங்கம் — தேகம்) அழகிய தேகமுள்ளவன்

91. சிரக்கம்பம், (சிரம்—தலை) + (கம்பம்—அசைவு) தலையசைத்தல்.

92. சிரஞ்சீவி, (சிரம்—வெகுகாலம்) + (சீவி—வாழ்) தீர்க்காயுளுடையோன்.

93. சிதேவி, (சி—சம்பத்து) + தேவி. இலட்சுமி

94. சுகிர்லாபம், (சுகிர்தம்—சிநேகம்)+(லாபம் — From லபி ;. பேறு) நட்புப்பேறு.

95. சுகுணம், (சு—நல்ல)+குணம். நற்குணம். (தொடரும்).

ஏகநாதன்

VIII

முன் குறிப்பு :—தன்னைப் பிராமணர்கள் தூஷித்துச் சென்றதைச் சிந்தித்த ஏகநாதன் ஸஞ்சலத்துடன் தன்னுள்ளே 'நான் செய்தது தவறோ?' என்று ஆராய்வதானான். உயர்வு-தாழ்வு யாவும் சுயகாரியத்திற்காக அமைத்த சூழ்ச்சியேதான். உயர்ந்தவர்வசமே உலகு எனில், பிறரால் அவர் உயர்த்தப் பட்டன்றோ உயர்ந்தா ராகவேண்டும். உயர்த்துவோர் இல்லாவிடில் உயர்ந்தோர் ஆவது எவ்வாறு? மற்றவர் போற்றிய பிறகே ஒருவன் பெரியவனாக மதிக்கப்படுகிறான். பெரியோனுக்குள்ள கௌரவமெல்லாம் அவனைப் போற்றுபவர்களாலேயே உண்டாகின்றது. பெரியோன் என்பவன் தன்னைப் போற்றுபவரின் மனம் மகிழ அவர்களுக்கு வேண்டிய யாவும் செய்துவிக்கும் அடிமைபோல்வான். ஒருவருக்குச் சிலாக்கியமாகப்படுவது மற்றவருக்கு அருவருப்பாகத் தோன்றலாம். அதற்குப் பேதப்பட்ட மனமே காரணம். எருதின் பின்னே வண்டி செல்வதுபோல் மனதின்பின்னே மனிதனும் போகிறான். பேதப்பட்ட மனது மாறினால் உயர்வு தாழ்வு இனம் ஒழிந்து எங்கும் அன்பையே காண்பான். அந்த அன்பு ஒன்றையே நாடும் நான் பஞ்சமர்-பிராமணர் என்ற பேதம் எண்ணாது தாழ்ந்தவராயினும் அன்பையே கவனித்து அவர்களுக்கு அன்னம் முதலில் உதவினேன். பிதுர் தினமாகிய இன்று என் மனதார அன்பின்கண் சம்பந்தப்பட்டு நான் செய்த இது தவறாயின்—அக்குற்றம் செய்த என்னுடைய கைகள் என் முன்னோரது சாபத்துக்கு உட்பட்டு அற்று வீழ்வதாக என்று உரைத்துப் பிதுர்க்களைப் பிரார்த்திக்கின்றான். உடனே பிதுர்க்கள் மூவர் அவன்முன்பு தோன்றி—அவன் செய்தது சரி—என்று தெளிவித்து வாழ்த்தி மறைகின்றனர். ஞானியாகிய ஏகநாதனும் பிதுர்க்களை வணங்கி மனோசாந்தி எய்துகின்றான். இத்துடன் இது பூர்த்தி பெறுகின்றது. ஜாதிநோக்கி உயர்ந்தோர்—தாழ்ந்தோர் என்பதில்லை; எவர் மனம் பரிசுத்தமும் அன்பும் கொண்டு பக்குவப்பட்டுள்ளதோ அவரே உயர்ந்தோராவர்; பசி எவர்க்கும் பொதுவாதலின், இன்னாருக்கு இட்டால்தான் கோடி புண்ணியம், மற்றவர்க்கு இடில் பெரிய நாகம் எனல் மௌடீகம் என்பதும் இக்கதையின் கருத்தாகும்.

ஏகநாதன்.

ஏகநாதன் தனிமையில்:-உயர்வாம் தாழ்வாம்...உன்னிடில் இவையெ
நயனிலார் பேச்சே—சுயகாரியமா [லாம்
உலகினை மயக்கப் பலகால் செய்த
மாபெருஞ் சூழ்ச்சியே! மாபெருஞ் சூழ்ச்சியே!

உயர்ந்தார் மாட்டே உலகென உரைப்பர்
உயர்ந்தார் என்பார் உயர்த்துவார் அற்ருல்
உயர்வரோ அவரும்? உண்மையா எவனும்
அயலார் போற்ற ஆகுவன் பெரியனு,
போற்றுவன் இன்றேல் பெரியோன் இன்றே.
போற்றுவன் இருப்பின் பெரியோன் இருப்பன்.
பெரியோன் நிலையெலாம் போறறுவன் [தன்னுல்;
ஆதலின், பெரியோன் எவனும் போற்றும் [எவர்க்கும்
அரியபல் தொண்டெலாம் அடைவாய்ப் [புரிந்தே
போற்றும் அவர்க்கே பூண்டதோர் அடிமை [யாம்;
மேலும், ஒருவர்க் குவப்பாத் தோன்றுமவ் [வொன்றே
அருவருப் பெனவே ஆகும் பிறர்க்கே;
மனமே இதற்குள மாபெருங் கருவியாம்;
மனமே மனிதனும் : மனஞ்செய் வழியே
மனிதன் செயலும் எருதுபின் உருளையா;
மனமது மாறின் உயர்வும் தாழ்வும்
இனமிலா தழிந்தே அன்பே வடிவாய்
அறிவோடு விளங்கி ஆனந்த மயமாய்
செறிந்தே விளங்குமிச் சீரிய உலகம்;
ஆதலால், வேண்டுவன் அடியேன் இதுகால்
பஞ்சமர் பிராமணன் அஞ்சிய மனத்தனுய்
இன்றைய இத்தினம் என்னுடைய முன் [ஞேர்க்
கேற்புடைத் தினத்தை ஏற்பவர் என்னும்
தாழ்ந்தவர் தமக்கும் தூயதாம் அன்னம்
ஆழ்ந்த அன்பால் இட்டுமே முடித்தனன்
குற்றமே இக்கரம் இற்றைநாள் செய்யின்
அற்றுமே வீழ்க, அவைதாம் முன்னவர்
சீறுஞ் சினத்தால்.

[என அன்போடு கூறிப் பரிதபித்தான்.
உடனே மூன்று உருவங்கள் தோன்றின:
—அவை ஏகாதனின் பிதர்க்களாகும்.]

எவ்வளவு விலக்கியும் மறுபடியும் வ்லியவந்து உன்றழையும் பூனைகள் மிக்க பயங்காமானவைகள். மறுபடியும் தந்திரமாக விலக்கவேண்டியதே.

முதல் பிதுர் :— சீரிய குணமே
உருவாத் தோன்றிய அருமைப் புதல்வ !
ஞானக் கொழுந்தே ஆணநன் மணியே !
உன்னது முற்கால் உயரிய கடனால்
இன்று
இன்று நீ ஆய்ந்த அறிவால் அன்போடு
புரிந்த புனிதமாம் அரிய கருமம்
ஒன்றால் பிறப்பும் இறப்பும் உருவமும்
ஒன்றாய் ஒழிந்தன—அருமைச் சுதந்திரம்
பெற்றனம் யாமும் பெருமையா உய்யவே.

இரண்டாம் பிதுர் :— வாழிய மைந்த ஊழியி னளவும்
ஆழிசூழ் உலகில் வாழிய பெரிதே ?

மூன்றாம் பிதுர் :— ஆய்ந்த அறிவுள அற்புதக் குழந்தாய்!
தூயதோர் நிலைதனை ஆய்வோ டமர்ந்தனை
பார்ப்பனும் பறையனும் பாரினில் ஒன்றே !
உன்னிரும் இதயத் திழிந்திடும் அன்பின்
உன்னதப் பெருக்கால் மண்ணுள மக்கள்
சாதிப் பேச்சும் சமயசச் சரவும்
ஆதியோ டந்தமாய் அழிந்தே இறந்தன;
எவனோ பெரியன்? எவனோ சிறியன் ?
அவனவன் அவனுக் குயர்வே யாமெனும்
உயரிய ஞானமும் நியமமாய்ப் பெற்ற
நேரிய குணமுள ஆருயிர்ச் செல்வ!
நின்மனை தன்னோடு இன்பமாய் நீயும்
இப்பேர் உலகில் இருந்திடாய் மகிழ்ந்தே !

முற்றும்.

(All Rights Reserved by the Author.) மு. துரைப் பிள்ளை.

உலகப் புகழ்ச்சியைக் கவனிக்காதே. ஆனால், உன்னை இகழ்ச்சிசெய்யும் போதுமட்டும், அந்த இகழ்ச்சிக்குரிய குற்றம் உன்னிடம் உண்டா என்று சிந்தித்துக் கவலையோடும் ஆராய்ந்து அதை நீக்கிவிடப் பார்—பழகு.

மனைவி எவ்வளவோ நோவெடுத்து நொந்துபெற்ற பிள்ளையினிடத்துக் கணவனுக்குப் பிரியமிருப்பதில்லை. அதை அலக்ஷியம் செய்கிறான். அவ்விதமே ஆசிரியர்கள் எவ்வளவோ பாடுபட்டு எழுதின நூல்களை அதைப் பிரசுரம் செய்பவர் அலக்ஷியம் செய்து ஆசிரியர்களின் மனத்தைப் புண்ணாக்குகின்றனர்.

நன்றாக முன்பின் யோசியாமல் ஒரு காரியத்தை மீறிச் செய்துவிட்டுப் பிறகு அதை என் அவ்வளவு அவசரமாகச் செய்தோமென்று பலகாலும் குறைப்பட்டுக்கொள்வதும், வருந்துவதுமே அடிக்கடி நேரும் சம்பவமாயிருக்கிறது.



ஹாஸ்ய சஞ்சீவினி



ரமணி :— அவரை விவாகம் செய்ய முடியாது. அவர்மீதிருந்த அபிப்பிராயம் மாறிவிட்டது.

ராதா :— அப்படியானால் அவர் கொடுத்த வைரமோதிரத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுகிறதுதானே.

ரமணி :—எனக்கு அதன்மீதிருந்த அபிப்பிராயம் இன்னும் மாறவில்லை.

உபாத்தியாயர் :— இங்கிலாந்தின் முக்கிய பட்டணம் எது ?

பையன் :—அமெரிக்கா ஸார்.

உபாத்தியாயர் :—இங்கிலாந்து எங்கிருக்கிறதென்று கேட்கவில்லை. எது முக்கிய பட்டணம் என்றேன்.

S. R. வெங்கடாரமன் B. A.

II

தாயார் :—அந்தத் தகரச் சிமிளைக் காணோமே? வைத்த இடத்தில் அவள் வைத்துத் தொலைக்கிறதில்லையே ?

குமாரன் :—அந்த சிமிளின் விலை அரையணுதான். இதற்காக அவளோடு ஒரு சண்டை வேண்டாம். ஒரு டஜன் சிமிள் வாங்கிப் போட்டுவிடுகிறேன். இன்றைய பொழுது கலகமில்லாமல் போகட்டும் அம்மா.

தாயார் :—என்டா பாவி! நானு கலகம் செய்கிறேன்? என் வாயைத் திறக்கக்கூடாதென்கிருயே?

கந்தன் :—நெய் வாங்கிக் கட்டுமா என்ருயே, இன்று ஏன் வாங்குகிருய்?

நந்தன் :—வீட்டுக்கு வந்திருக்கிற விருந்தாளிக்குத்தான். செய்கிறது செய்கிறேம் ; நெய் ஊற்றவில்லையென்கிற சொட்டுச்சொல் என்னத்திற்கு ? நாம் சுளிக்காமல் செய்துவிடுவோம். அவர்கள் வேண்டுமானுல் முகம் சுளித்துக்கொள்ளட்டும்.

மனைவி :—நீங்கள் வலியவந்து சண்டை செய்வது கிரமமா ?

கணவன் :—நீ மீறுவதால் நானும் அதற்குமேல் போய் என் திமிரைக் காட்டுகிறேன். என்னை நல்லவனுக்குவது உன் கையி லிருக்கிறது.

நாயகி :—இந்த நகை நன்ருயிருக்கிறது. எப்படியாவது வாங்குங்கள்!

நாயகன் :—நீ பெருக்கிக்கொண்டு போகிற வீட்டுச்செலவைக் குறைத்துவிட்டுக் குந்தித் தின்னுவோரையும் வெளியில் அனுப்பிவிட்டால்—நீயே அந்த நகையை வாங்க உன் கையில் வேண்டிய பணம் மிஞ்சும். என் கண்ணே! காதே! தெரிகிறதா ?

மோசம் போனவன் :—என் வயிறு எரிகிறதே! அவன் வாழ்வானு? பாவி நடுவில்வந்து கெடுத்தானே.

பலதுங் கண்டவன் :—அவனுக்கும் இன்னும் கெட்டுப்போகக் காலமாக்கும் ? அதனுல்தான் உன் சங்கதியிலும் புகுந்து கை நனைத்தானுக்கும்?

பள்ளிக்கூடத்தை விட்டதும் புத்தக மூட்டையை ஒரு மூலையில் போட்டுவிடுவதே பலரது வழக்கம். இது படிப்பாகாது. பிராணன் போகும் போதுங்கூட அருகில் புஸ்தகமிருப்பதே உண்மையான படிப்பாகும். காலமுழுதும் படிப்பதே விர்த்திக்கு வழி. அதற்குப் பத்திரிகைகள் நல்ல துணை.

இவள் :—சேஷியோடு சண்டை போட்டதற்கு அவன் புருஷன் கண்டபடி என்மேலே குதிக்கிறான். அவன் ஆணுவத்தை அடக்கவேணும்.

அவள் :—யாரு மில்லாத சமயத்தில் அவன் இருக்கும்போது நீ திடீரென்று கூக்குரலிட்டு அவன் உன்னைப் பெண்டாள வந்ததாக அலறித் தெருவுக்குப் போய்க் கூச்சல் போடு. எல்லோரும் ஓடிவந்து அவனைத்திட்டி அறைவார்கள். உன் பேச்சையே எல்லோரும் நம்புவார்கள். என்னடி, உனக்கு இது தெரியாதா ?

———

வினு :—விரதம் நோன்பு இல்லாத நாளிலும் பசியடக்கிக் கண்ணீருடனும் விரதம் இருப்பதுண்டா.

விடை :—வீட்டில் கனத்த சண்டையாகி விடும்போது, அன்றைக்கும் பெரிய விரதம்தான்.

———

"வைத்தியர் என்ன சொல்லுகிறார் ?"

"அமிர்த ஸஞ்சீவி தருகிறாராம் !"

"அது குணப்படுத்துமா ?"

"ஆஹா, வைகுண்ட வழி காட்டும் அவர் தொட்ட கை விடிகிறதில்லை. அவர் போன வீட்டில் நோயாளி பிழைத்து எழுந்தது மில்லை."

———

அவன் :—ஊர்வலத்தின் கனத்த கூட்டத்தைப் பார்த்தாயா ?

இவன் :—இவ்வளவு செலவு செய்கிறவன் நாளைக்குப் பாயில் படுத்தால், இவ்வளவு கூட்டத்தில் ஒருவன் கூட எட்டிப் பார்க்கமாட்டான்.

———

தாசி :—என்னிடம் கூடவா கர்ப்பத்தடைக் கருவியை உபயோகிக்கிறது ? அது தர்மமா?

பிரபு :—என் கண்ணே ! பிறகு நீ என்னிடமாக ஒரு குழந்தையைப் பெற்று என் பெரியசொத்துக்கு வழக்காடாமல் இருப்பதற்குத்தான் !

———

நீலன் :—எங்கே ஒரு ஜோஷியம் சொல்லு.

வேலன் :—அழுது கொண்டு கொடுக்கும்படி வாங்கிய சொத்து, அழுதுகொண்டேதான் போகும். என் ஜோஷியம் பலிக்கிறதா என்று பார்.

———

பையன் :—அம்மா ! அத்தான் கையை அக்கா பிடித்து சும்மா இழுக்கிறாள். நீ அங்கே போய்ப் பாரு.

தாயார் :—இனி அப்படிச் சொல்லாதே. வெளியே விளையாடப் போ!

பையன் :—அக்கா உள்ளே விளையாடுகிறது—நான் மட்டும் வெளியே விளையாடுகிறதா ?

———

ஜான் :—அந்த ஹிந்து நண்பரை என் அவ்வளவு சீக்கிரம் அனுப்பிவிட்டாய் ?

ஆசீர்வாதம் :—இன்று வீட்டில் பேஷான புலாவ். அதைப் புசித்துவிட்டு அவர் முன்பு வந்து ஏப்பம் விட்டால், மாமிசம் புசிக்காத அவருக்கு அது பிடிக்காதே என்றுதான்.

———

"உனக்குக் கல்யாணம் எப்போது ? வயதும் அதிகமாயிற்றே"?

"என் பாட்டிக்குக் கல்யணாம் ஆகும்போதுதான் !"

———

நம்மை ஏவி ஒன்றைச் செய்யும்படி தூண்டிவிடுகிற மனிதர்களின் உள்ளெண்ணம் யாதாயிருக்கக்கூடுமென்று, அந்தக் காரியத்தைச் செய்யுமுன்னமே சிறிது யோசித்தால், செய்யப்போகும் காரியத்தை நிறுத்திவைக்கும்படியான யோசனைகளும் தோன்றலாம். அந்த சிறுயோசனை மிகு நலம்தரும்.



Letter XXVI.

(The Gentleman's Answer to the above.)

Dear Madam!

I return you a thousand thanks for your letter, and it is with the greatest pleasure that I can clear up to your satisfaction the matter you doubted of. Before I wrote to you, I comunicated the affair to my two cousins; but had not courage sufficient to mention it to my mother; however, that is now over, and nothing, she says, would give her greater pleasure, than to see me married to a young lady of your amiable character: may, so far is she from having any objections, that she would have waited on you as the bearer of this, had I not persuaded her against it as she has been these three days afficted with a severe cold, and I was afraid, that if she had ventured abroad so soon, it might be attended with dangerous consequences. But to convince you of my sincerity, she has sent the enclosed, written with her own hand, and what-

26-வது கடிதம்.

அதற்கு அந்தக் கனவானின் உத்தரம்.

அன்புள்ள பெண்ணே!

நீ எழுதிய காகிதத்திற்காக நான் உனக்கு ஆயிரம் வந்தனங்கள் சொல்வதுமல்லாமல், நீ சந்தேகப்பட்ட காரியத்தை மஹா சந்தோஷத்துடன் உனக்குச் சமாதானப்படுத்தவு மாட்டுவேன். நான் உனக்கு எழுதுமுன் தானே காரியத்தை எனது இரு மச்சிமாருக்கும் தெரிவித்தேன். ஆனால், அதை என் தாயாருடன் சொல்ல எனக்குப் போதுமான தைரியம் இருந்ததில்லை. ஆகிலும், இப்போது அதுவும் முடிந்ததால் எனது தாயார் நல்ல விருப்பத்துக்குரிய குணத்தினளாகிய உன்னை நான் விவாகம் செய்யப்பார்ப்பதிலும் தனக்கு அதிக பெரிய சந்தோஷம் தருவ தொன்றுமில்லை யென்கிறார். அன்றியும் தான் சொல்லும் ஆக்ஷேபமொன்று மில்லாமையால், இந்தக் காகிதத்தைத்தான் தானே உனக்குக் கொண்டுவரவும் மனதாயிருந்தார். ஆனால், அவருக்கு இந்த மூன்று நாளாய்க் கனமான ஜலதோஷம்பிடித்திருப்பதைப்பற்றி இத்தனைச்சீக்கிரத்தில் வெளியே புறப்பட்டாற் பொல்லாங்கு நேரிடுமென்று அஞ்சி, அவரைத் தடை பண்ணினேன். நான்

குடும்பவாழ்வில் நாம் விரும்பாத விஷயங்களை அற்பக் காரணத்திற்காக மறைத்துவைக்கவோ அல்லது திரித்துக்கூறவோ முயற்சிப்பது தவறு. அது ரகசியமாக அபிவிர்த்தியடைந்த ஒரு ஆபத்தான நிலைமையை நாம் திடீரென சமாளித்துத் தத்தளிக்கும்படி பிற்காலத்தில் நேரிட்டுவிடும்படி செய்யலாம்.

ever may be the contents I solemnly assure you that I am totally ignorant, except that she told me it was in approbation of my suit if you will give me leave to wait on you, I shall then be able to explain things more particularly.

I am, Dear Madam,

Your real lover,

M. Wilson.

சொல்லும் இந்த உண்மை உனக்கு நிச்சயப்படும்படி அவர் தமது கையால் தானே எழுதிய காகிதத்தை இதற்குள் அடக்கம்பண்ணி அனுப்பியிருக்கிறார். அதன் மத்தளிப்பு எப்படிப் பட்டதோ பரிச்சேதமெனக்குத் தெரியாது. ஆனால், அது என் இஷ்டப்படி தான் எழுதியிருக்கின்றதென்று என்னுடன் அவர் சொன்னதுண்டு. உன்னிடத்திற்கு வரும்படி நீ எனக்குச் செலவு கொடுத்தால் அப்போது காரியங்களை அதி விவரமாகத் தெரிவிப்பேன். இப்படிக்கு,

அன்புள்ள பெண்ணே!

உண்மையாக உன்மீது

காதலுள்ளவனுகிய

எம். வில்ஸன்

விலாஸம் மாற்றுவோருக்கு முக்கிய அறிவிப்பு.

நமது 'அமிர்த குணபோதினி' பிரதிமாதமும் சந்தாதாருக்குச் சரிவரக் கணக்கிட்டுக் குறித்த தேதியில் தபாலுக்கு அனுப்பப்பட்டுவந்தும், சிலர் சஞ்சிகை வந்து சேரவில்லையெனத் தெரிவிக்கின்றனர். இந்த நண்பர்கள் நமக்கு அறிவிப்பதோடுமன்றி, அவரவர்கள் ஊர் போஸ்ட் மாஸ்டருக்கும் தெரிவித்தால் சஞ்சிகைகள் ஒழுங்காகக் கிடைக்கக்கூடும். இடம் மாறும் சந்தா நேயர்கள் தங்களுக்கு சஞ்சிகை புதிய விலாசத்திற்கு வந்து சேரும்வண்ணம் முதலில் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு, நமக்குப் புது விலாசத்தைப் பிரதிமாதம் 14-ந்தேதிக்குள் அறிவிக்கவேண்டும். நமக்கு எழுதும் கடிதங்களில் தங்களின் இவ்வருடத்திய சந்தா நெம்பரையும் அவசியம் குறிப்பிட்டு எழுதக் கோருகிறோம். மானேஜர்.

"அந்தக் குழம்பை உன்னை யாரடி வைக்கச் சொன்னது?" "இந்தக் குழம்பு எவரைக் கேட்டுச் செய்தாய்?" "எண்டி அத்தனைக் கரண்டி நெய்யை ஊற்றிக்கொண்டாய்?"—என்று கணவன் தனது மனைவி செய்யும் வேலைகளில் குறுக்கிடுவானானால் மனைவி எதையுமே சமைக்க முடியாது. சம்பளப் பத்திராசிரியர்களின் பாடும் பத்திரிகையின் சொந்தக்காரர்களிடம் இப்படியே.

சென்னைக்குப் புதியவர்

ஒரு வண்டியைப்பேசி அதில் ஏறிக் கொண்டு செல்லுகையில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் எங்கும் மாடமாளிகைகளாய் இருந்தன. "ஒரு திக்கற்ற ஏழை சென்னைக்கு வந்து விடுவானானால், உடனே அவன் பெரிய பணக்காரனாகி விடுகிறான்" என்று என் ஊரில் அநேகர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அது உண்மையாகவே இருக்குமென்பதைப் பல அடுக்குமாளிகைகளைக் கண்டதும் தெரிந்துகொண்டேன். வீதிகள்தோறும் '—வர் அன்னசத்திரம்' என்று பலகைகளில் எழுதித் தொங்கவிட்டிருப்பதைப் பார்க்கவும், இவ்வூரார் விசேஷித்த தருமவான்கள் என்று நினைத்தேன். வண்டிக்காரன் ஒரு அன்னசத்திரத்தின் வாயிலில் என்னை இறக்கினான். "நான் சாப்பாட்டு விடுதிக்குப் போகவேண்டும், அன்ன சத்திரத்துக்கல்ல" என்றேன். வண்டிக்காரன் கண்டபடி தூஷித்து என் மூட்டையைத் தூக்கிக் கீழே எறிந்தான். என்னையும் எங்கே அடிப்பானோவென்று பயந்து, அவனுக்கு வாடகையைக் கொடுத்தனுப்பிவிட்டு, அன்னசத்திரத்து மனிதனை "போஜனம் கிடைக்குமா" என்றேன். அவன் "ஆறு அணா" என்றான். 'அன்னசத்திரம்' என்பதின் அருத்தத்தைத் தெரிந்துகொண்டு, "நான் ஏகாதசி விரதம்; இன்று துவாதசிக்கு ஆசாரமாக சமைத்துப் போடுவாயா?" என்றேன். அவனும் அதற்கு ஒப்பினான். பின் அதிதிக்காக ஒரு பிராமணர் வேண்டுமென்றபோது அங்கே உட்கார்ந்திருந்த பிராமணன் தான் வருவதாக ஒப்புக்கொண்டு ஸ்நானம் செய்யாமலே என் இலைக்கருகில் உட்கார்ந்தான். நான் "இன்னும் ஸ்நானம் செய்யவில்லையே" என்றதற்குக் "காலையிலே ஆய்விட்டது" என்றான். தனக்கு மலப்பிரவர்த்தி ஆய்விட்டதைச் சொன்னானோ என்னவோ!

ஃ

பிறகு என் இலையிலும் அடுத்தவர் இலையிலும் ஏதோ குழம்பை ஊற்றினான். அது சாதத்துடன் பிசைந்து கொள்ளப் போதவில்லை. வைத்த காய்கறிகள் எதுவும் புசிக்கக் கூடியதாயில்லை. நெய் வேண்டுமென்று கேட்டதற்கு ஒரு சிறு கிண்ணத்தில் கொண்டுவந்து இரண்டு சொட்டு நெய்யை ஊற்றிப்போனான். அதன் துர்வாஸனை எனக்குப் பிடிக்கவில்லை. மறுபடியும் குழம்பு பரிமாறும்படி கேட்டதற்கு அவன் திரும்பி வரவேயில்லை. கண்ணை மூடிக்கொண்டு சாதத்தை விழுங்கினேன். ஊறுகாய் கேட்டதற்கு அதுவும் காணோம்! இதற்குள் சோற்றுத்தவலையும் குழம்புமாய் எவர்களுக்கோ போடச் சென்றுவிட்டு மிகுந்த சாதத்துடன் என்னிடம் வந்தான். சூத்திரர்களுக்கு அவ்வளவு அன்னத்தையும் போட்டாயா என்றதற்கு, "இல்லை, பிராமணர்களுக்

ஒரு ரூபாய்க்காகக் கண்டித்துக் கொடூரமாகக் கேட்பவனிடம் நாமும் வெறுப்புமிகுந்து கண்டிப்பிலேயே நிற்க நேருகிறது. நம்மிடம் அன்பு பாராட்டிக் கேட்பவருக்கோ பல ரூபாய்கள் செலவிடவும் மனம் சம்மதிக்கிறது.

ருப் பரிமாறினேன்'' என்றான். சூத்திரர்கள் பார்த்த அன்னத்தைப் புசிக்க மனமொப்பாது தவிக்கையில், என் பக்கத்திலிருந்த பிராமணன் இலை சாதத்தை முழுதும் தின்றுவிட்டு வேறு சாதம் வாங்கிக்கொண்டான். எனக்கும் அதே சாதத்தைக் கொட்டினான். என் ஏகாதசி விரதபலன்களெல்லாம் வியர்த்தமாயிற்றேயென்று துக்கித்துக்கொண்டிருக்கையில், மிளகும் புளியும் மட்டுமே இட்ட சுடு ஜலத்தை ரசம் என்று என் இலையில் கொட்டிவிட்டுச் சென்றான். பிறகு மோர் வந்தது. அதில் விழுந்துசெத்த இரண்டு ஈக்களை நான் கண்டுகொள்ளாதபடி வெளியில் எடுத்துப் போட்டான். அதைப் பார்த்ததும் நான் இலையைவிட்டு எழுந்துவிட்டேன். அவனும் அதற்காகக் கவலைப்படாமல் பாத்திரங்களையும் மோரையும் எடுத்துக்கொண்டு போய்விட்டான். பின்பு இருவருக்கும் சேர்த்து முக்கால் ரூபா "அன்ன சத்திர"க்காரனிடம் தந்தேன். என்னுடன் புசித்த பிராமணன் "துவாதசிதக்ஷிணை வேண்டும்" என, அவனுக்கும் நாலு அணு கொடுத்துவிட்டு, அந்தப் பிராமணரின் உதவியால் ஒரு டிராம் வண்டியில் என் மூட்டையுடன் ஏறித் திருவல்லிக்கேணிக்குப் போய்ச் சேர்ந்தேன். ஃ

மேலே கூறியது நான் சென்னைக்குப் புதிதாக வந்தபோது நடந்த சம்பவம். அதற்குப் பிறகு சென்னையில் வைதீகத்திற்கு நல்ல கிராக்கி என்று தெரிந்துகொண்டு சென்னை வாஸத்துக்குத் தக்கவாறு என் ஆசாரங்களை மாற்றிக்கொண்டு சென்னையிலேயே தங்கிவிட்டேன். மனைவி மக்களையும் தருவித்துக்கொண்டேன்! நான் சென்னை வந்து 26-வருஷங்களாகின்றன. பத்து ரூபாய் சில்லரையுடன் சென்னை வந்த நான் ஐயாயிரம் பெறக்கூடிய சொந்த வீடுடன், ஒரு பதினாயிரத்துக்கு நிலபலம் சொத்துக்களோடும் 'வைதீகம்' செய்துகொண்டுசௌக்கியமாக இருக்கிறேன். லௌகீக தந்திரங்கள் தெரிந்தவர்களுக்குத்தான் சென்னையின் வாஸம் பொருந்தும். உங்கட்கும் அந்த சக்தி இருந்தால் உடனே சென்னைக்குப் புறப்பட்டு விடுங்கள். சென்னை திருவல்லிக்கேணியில் 3-எண்ணுள்ள வீட்டிற்கு வந்தால் வேண்டிய சௌகரியம் செய்து தரச் சித்தமாயிருக்கிறேன். என் மூன்று குமாரர்களில் ஒருவனை எனக்குத் துணையாக வைதீகத்தில் வைத்துக்கொண்டேன். மற்றவன் உத்தியோகத்தில் இருக்கிறான். கடைசி குமாரன் வக்கீல் பரீக்ஷைக்கு வாசித்துக்கொண்டிருக்கிறான். திக்கற்று ஏங்கிய எனக்குச் சென்னைதான் இவ்வளவு வாழ்வும் கூட்டி வைத்ததென்பது நான் மறுக்கமுடியாத உண்மை. சென்னைக்குப் பலர் வருகிறார்கள்தான். ஆனால், அவர்களின் அதிர்ஷ்டச் சுழி அவர்களின் வாய்—கை சாமர்த்திய மயக்கில்தான் இருக்கிறது.

பிறரது உதவிகொண்டு ஒரு காரியத்தை முடிக்கும் சந்தோஷத்தைவிட, அந்தப் பிறரைத் தருவிக்காமலே விலகி தன் கையையே துணையாகக்கொண்டு தானே முடித்துக்கொண்ட காரியத்தில் அளப்பரிய மகிழ்வுகொள்ள முடியும்.

"அமிர்த குணபோதினி"யின் அநுபவஞான போதகம் தமிழ்நாட்டில் வேறெந்தப் பத்திரிகையிலும் இல்லை. நீதி வழியில் போதிப்பதிலும் அநுபவ்வாயிலாக ஒவ்வொன்றையும் நன்கு விளக்குவதே அதிக பயன்தரும்.

"அமிர்த குணபோதினி"

பிரமோதூத வருஷத்திய புரட்டாசி மாத பஞ்சாங்கம்.

யோகம்	தேதி	தமிழ்	வாரம்	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள் முதலியவை.
சி-ம	16	1	செ	அஷ் 19-52, மிரு 22-41, கன்யாரவி 17-49 சூன்யதிதி.
சி	17	2	பு	நவ 15-15, ஆரு 19-47, தசமிதிதி.
அ	18	3	வி	தச 9-13, புந 15-31, ஏகாதசிதிதி, அகஸ் 30-10
உ-ம	19	4	வெ	ஏகா 1-58, உப 51-55, பூச 10-6.
ம-அ சி	20	(5—4) 5	ச	திர 41-17, ஆயி 3-50, உப 53-20, பிரதோஷம், [சிவராத்திரி.
சி-அ	21	6	ஞா	சசி 36-30, பூர 50-25, சோம-மஹாலய-அமாவாசை,
சி	22	7	தி	● 27-56, உத் 44-2, மாதவர். [அருணந்தி சிவாசார்.
சி	23	8	செ	பிர 20-5, ஹஸ் 38-24, துலாயனம் 45-12, திதிதுவயம், [ஆசுவீஜசுத்தம், அகஸ் 30-0.
சி	24	9	பு	துவி 13-22, சித் 33-55, ஜமாதிலவல்மீ 1வ
அ-சி	25	10	வி	திரி 7-59, ஸ்வா 30-58.
சி	26	11	வெ	சது 4-20, விசா 29-48.
சி	27	12	ச	பஞ் 2-30, அநு 30-34. [ஆதிவண் சடகோபஸ்வாமி.
ம-அ	28	13	ஞா	ஷஷ் 2-38, கேட் 33-15, அகஸ் 29-50, ஷஷ்டிவிரதம்,
சி-உ	29	14	தி	ஸப் 4-36, மூல 37-39, திருச்செங்கோடு பார்வதி தேவி [யார் இடப்பாக தவநிலை.
சி-பி	30	15	செ	அஷ் 8-15, பூரா 43-28, ஸத்தியபராக்கிரமர்.
அ-சி	1	16	பு	நவ 13-11, உரா 50-15, ஆயுதபூஜா, விஜயதசமி, தசமிதிதி
சி	2	17	வி	தச 18-59, ஶ்ரவ 57-33, அதிதி, வேதாந்த தேசிகன், [மத்வஜயந்தி.
சி	3	18	வெ	ஏகா 25-11, அவி 60-0, ஏகாதசிதிதி, அகஸ் 29-41.
சி-அ	அக்டோபர் 4	19	ச	அவா 31-16, அவி 5-1.
சி	5	20	ஞா	திர 36-55, சத 12-10.
சி	6	21	தி	சசி 41-51, பூட் 18-41, நடராஜாபிஷேகம்.
அ-சி	7	22	செ	○ 45-53, உட் 24-29, சந்திரக்ரஹணம்.
உ-ம	8	23	பு	பிர 48-54, ரே 29-17, ஆசுவீஜபகுளம், அகஸ் 29-34.
அ-சி	9	24	வி	துவி 50-52, அசு 33-1, ருத்திரபசுபதி.
சி	10	25	வெ	திரி 51-52, பர 35-40.
அ	11	26	ச	சது 51-23 கிரு 37-14, கிருத்திகாவிரதம்.
சி	12	27	ஞா	பஞ் 49-56, ரோ 37-42, திருநாளைப்போவார்
அ-சி	13	28	தி	ஷஷ் 47-24, மிரு 37-4, அகஸ் 29-25.
ம-சி	14	29	செ	ஸப் 43-43, ஆரு 35-20, வானமாமலை பட்டர்பிரான்
சி	15	30	பு	அஷ் 39-6, புந 32-37.
அ-சி	16	31	வி	நவ 33-34, பூச 28-59, நவமிதிதி, துலாரவி 47-35.

	ராகு		செ, கு
	15வுக்கு ராசி,		
			புத
சனி		சு, கேது	ரவி

"அமிர்த குணபோதினி" பிரஸ், 302, தங்கசாலைத் தெரு, சென்னை,—1930.